

# ஞானச்சுடர்

கார்த்திகை 2016

227 ஆவது மலர்




வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறள் வழி

**புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே**
**ஒப்புரவி னல்ல பிற.**

**பொருள் :** வானுலகத்திலும் இவ்வுலகத்திலும் உபகாரஞ் செய்வதைப் போலச் சிறந்த செயல் வேறில்லை.

(213)

**ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்**
**செத்தாருள் வைக்கப் படும்.**

**பொருள் :** உலகத்துக்கு ஏற்ற கடமைகளை அறிந்து நடப்பவன் உயிரோடு வாழ்பவனாவன்; அஃது அறிந்து செய்யாதவன் செத்தாருள் ஒருவனாகக் கருதப்படுவான் (214)

---

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை
## முத்தி நல்குமே
## ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்




தையலை வேட்டுச் சார்ந்தாய் மதுரையில்
வையகம் வானக முட்க நடித்தாய்
பையர வந்தனை யார்த்தாய் பணியாய்
ஐய ஐயவென் றனக்கரு ளாயே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 83

தொல்லைநா ளிருவர் காணாச் சோதியே
தில்லை யம்பலத் தாடிய சிவனே
எல்லை யில்லா ஏக வெளியே
ஒல்லை வந்தரு ளுதவுவாய் கடனே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 84

தோளா முத்தே சுடரிற் சுடரே
பாழா யடியேன் பதையா வண்ணம்
நீளா வருள்நீ தருவாய் வருவாய்
ஆள்வா யடியார் குடிவாழ் பவனே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 85

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு:

**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 | சுடர் - 227

2016 | பொருளடக்கம் | கார்த்திகை


| | | |
|---|---|---|
| அன்பே சிவம் | திருமதி க. நாகேஸ்வரி | 01 -03 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 04 -07 |
| மனித வாழ்வியற் பண்பு | திருமதி ந. பரமேஸ்வரி | 08 -11 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 12 -15 |
| கடவுள் எங்கே வாழ்கிறார் | கு. சிவபாலராஜா | 16 -17 |
| விதுரநீதி | இரா. செல்வவடிவேல் | 18 -21 |
| சொல்லின் செல்வன்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 22 -24 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 25 -26 |
| இதுவும் ஒரு திருவிளையாடலே | குணாகரன் | 27 -33 |
| பகவத்கீதையின் உலகம்... | பூ. சோதிநாதன் | 34 -36 |
| சைவ சமய ஈடுபாட்டோடு... | திருவாரூரன் | 37 -41 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 42 -43 |
| பாண்டவரின் அஞ்ஞாதவாசம் | நா. நல்லதம்பி | 44 -46 |
| மனித வாழ்வில் இசையின்... | திருமதி இ. விஜயலட்சுமி | 47 -49 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 50 -55 |
| வாசகர் போட்டி | சந்நிதியான் ஆச்சிரமம் | 56 -57 |
| தமிழகத் திருக்கோயில் வரிசை | வல்வையூர் அப்பாண்ணா | 58 -60 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் ஐப்பசிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

226ஆவது ஞானச்சுடர் மலரினை ஆச்சிரமத்துடன் நீண்டகாலத் தொடர்புடையவரும், ஆச்சிரமப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொள்பவரும், சந்நிதி வேற்பெருமானின்மீது அதீத பக்தி கொண்டவருமாகிய திரு சி. பத்மநாதன் J.P அவர்கள் வெளியிட்டு வைத்தார்கள்.

மேலும் அவர் தம் வெளியீட்டுரையின்போது ஆற்றங்கரை வேலவனின் சூழலில் இருந்து ஆச்சிரமம் என்னென்ன பணிகளையெல்லாம் ஆற்றவேண்டுமோ அவ்வகையான பணிகளை மிகவும் சிறப்பாகவும், நேர்த்தியாகவும் ஆற்றிவருகின்றது. அத்துடன் இவ் அறப்பணிகளுடன் இணைந்து சமயப் பணிகளில் ஒன்றாக ஞானச்சுடர் மலரை மாதந்தோறும் வெளியிட்டு வைப்பது மேலும் பெருமை சேர்க்கின்றது. இவ்வாறான சிறப்புக்களுடன் கூடிய ஐப்பசிமாத மலரை நான் வெளியிட்டு வைப்பதில் பெருமையடைகின்றேன் என்று கூறித் தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்கள்.

## மதிப்பீட்டுரை:-

ஐப்பசிமாத ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை சைவப்புலவரும் ஆச்சிரமம் ஆற்றி வருகின்ற சமய சமூகப் பணிகளுக்கு எப்பொழுதும் ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருபவருமான திரு க. நித்தியதசீதரன் ஆசிரியர் அவர்கள் ஆற்றினார்கள்.

அவர் தனது உரையில் இம்மலர் ஆரம்ப காலங்களில் வெளிவந்ததைவிட இப்போது மிகச்சிறந்த முறையில் வெளிவருகின்றது. இது ஒரு சாதாரண விடயமல்ல. இவற்றுக்கெல்லாம் மூலகாரணமாக விளங்குபவன் சந்நிதியானும் ஆச்சிரம சுவாமிகளுமே ஆகும். அதனடிப்படையில் இம்மலரில் இடம்பெற்ற ஒவ்வொரு ஆக்கங்களைப் பற்றிய கருத்துக்களை சபையில் கூடியிருந்த அடியார்களுக்கு தனக்கேயுரிய பாணியில் வெளிப்படுத்தினார்கள்.

ஆகவே இம்மலர் மென்மேலும் பிரகாசித்து உலகெங்கும் தனது ஞானத்தைப் பரப்ப சந்நிதி வேற்பெருமானின் அருள் சுரக்கவேண்டும் எனவும், மலருக்கான மதிப்பீட்டுரையினை வழங்குவதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தித் தந்ததையிட்டும் பெருமகிழ்ச்சி அடைகின்றேன் என்று கூறித் தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

நமது மனமானது எப்பொழுதும் எதையோ நினைத்தபடியே இருக்கும். நெஞ்சத்து நினைவு நல்லனபற்றியதாகவே இருக்க வேண்டும். நல்ல நினைவு இல்லையெனில் நமது வாழ்வு சிதைந்து விடும். நமக்கு உரியதை மட்டுமே நாம் அனுபவிக்க வேண்டும். நம் உடைமை அல்லாதனவற்றை மனதினால்கூட நினைக்கக் கூடாது.

நினைவு எப்பொழுதும் இறைவன்மீது இருந்தால் துன்பமேயில்லை. வேறு நினைவிற்கே இடமில்லை. சிந்தனை முழுவதும் சிவன்பால் வைத்தவருக்கு தாம் அடிமை என்பார் சுந்தரர். எமது இன்றைய துன்பங்களுக்குச் சிந்தனை மாறுபாடே காரணம். இறைவழிபாடு, இறை சிந்தனை இவற்றிற்கு எமக்கு நேரம் இல்லை என்று நாள் முழுவதும் ஏதோ செய்கிறோம். தினமும் சிலநிமிடநேரமாவது இறைவனை நினைத்து வழிபடவேண்டும். ஆலயத்திற்குச் சென்று வழிபாடு இயற்ற வேண்டும்.

நாம் உயர்ந்த ஆடை அணிகலன்களை அணிந்து கோயில்களுக்குச் செல்வதாலும் ஆர்வத்துடன் வணங்குவதாலும் இறைவனைக் காணமுடியாது. ஆலயச் சூழலில் உள்ள ஏழை, எளிய, வறுமை, நோய் முதலிய பிணிகளால் பீடித்துள்ள மக்களைப் பார்த்தும் பாராததுபோல் ஆலயத்திற்குச் சென்று வழிபடுகின்றோம். ஆலயங்களில் நாம் செய்யும் எதுவும் மக்களைச் சென்றடைவதில்லை. எனவே நலிவுற்றவருக்கு உதவுவதே சைவ சமயம் புகட்டும் பாடமாகும். சமயம் வேறு வாழ்க்கை வேறு என்று இல்லாமல் வாழ்வுடன் இணைந்து மானிட சமுதாயம் உய்யும் வண்ணம் ஒவ்வொருவரும் வாழவேண்டும். உலகில் உள்ள அனைத்து உயிர்களும் நலமாக வாழவேண்டும் என்று நினைக்க வேண்டும். ஆலயங்களுக்குச் சென்று தனக்கு மட்டும் வேண்டாது நாட்டில் இடம்பெற்றுவரும் சகல பாதிப்புக்களிலிருந்தும் எல்லாவிதமான இடர்களையும் களையும் வண்ணம் இறைவனை வேண்டுதல் செய்ய வேண்டும்.

நமது சமயத்தில் அன்றாடம் சமூகப் பணிகள், சமயப் பணிகள் செய்யுமாறு வலியுறுத்தப்படுகிறது. இவ்விதமாக சமய, சமூகப் பணிகளை ஆற்றும்பொழுது நாம் ஒடுங்கிய மனப்பான்மையிலிருந்து விலகிப் பரந்த மனப்பான்மையுள் உள்வாங்கப் படுகின்றோம். “சமயம் வெறும் வயிற்றுக்கு உரியதல்ல” என்று இராமகிருஷ்ண பரமஹம்சரும் “கடவுளை அடையச் சிறந்த வழி மனிதருக்குச் சேவை செய்வதே” என்று சுவாமி விவேகானந்தரும் கூறியிருப்பதன் கருத்தினை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இவற்றிற்கெல்லாம் மூலகாரணமாக அமைவது மனம்தான். மனமது செம்மை யானால் மந்திரம் தேவையில்லை. அவ்வகையில் எமது மனம் நல்ல நினைவோடு இருக்குமானால் எல்லோரும் எல்லாமும் பெற்றுய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானிலத்தின் நாயகனே

-தி.க. பரமேஸ்வரி அவர்கள்-

கோல மயில் வேலவனே
குறிஞ்சி நிலம் ஆள்பவனே
குன்றெல்லாம் குடியிருக்கும் - எழில்
குமர வடி வேலவனே!
நன்றல்ல எமை நீயும்
நாதியற்று விட்டு விட்டால்
முல்லை நிலம் தேடி - எழில்
வள்ளி மயில் வேட்டவனே
முறையோ எமை நீயும்
முகம் பாரா திருந்திட்டால்!
மருத வளம் கொழிக்கும்
மருத மலை ஆண்டவனே
கேளாயோ மனக் கவலை
நாம் கேடின்றி வாழ்ந்திடவே!
நீரலைகள் ஆர்ப்பரிக்கும்
நெய்தல் நில மருவும்
சீரலை வாயுறையும் செந்தூரின் காவலனே
சோர்வகற்றி எமையணைத்து
சொற்றுணை யாய் நீ வருவாய்
பாலை நிலம் போன்று
பாழும் இவர் பாவியென
பாராது நீயிருந்தால்
பாவியெமக் கேது துணை
பாரிலெமக் கேது நிலை
ஆறுமுக வேலவனே
அரவணைத்து காத்திடப்பா.
கலாப மயில் வாகனனே
கந்தா சரணடைந் தோம்
சஞ்சலங்கள் தீர்த்தருள்வாய்
சந்நிதியின் மாநிதியே.
குவலயத்தே குருத்துகளும்
குணமற்ற தீய நெறி
பார் போற்றும் சமுதாயம்
சீர் கெட்டுப் போகாமல்
சீரில்லாச் சிந்தை நெறி
செவ்வேளே களைந்து விடு
மன ஆயாசம் தீர்த்தெமக்கு
அருள முதம் நீயருள்வாய்
காக்கும் கடனுனது
கந்தா சரணடைந்தோம்
நானிலத்தின் நாயகனே
நண்ணி யெம்மை காத்திடுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**S. சதாசிவமூர்த்தி**
(கனடா)

**K. கனகசபேசன்**
(கனடா)

**உரிமையாளர்**
(E.S.P. நாகரெட்ணம் அன்கோ, யாழ்ப்பாணம்)

**ச. ஜெயதாசன்**
(கருகம்பனை, காங்கேசந்துறை)

**திருமதி தங்கராசா சரஸ்வதி**
(புலோலி மேற்கு)

**ச. வைத்தியநாதக்குருக்கள்**
(கந்தவனக்கடவை, பொலிகண்டி)

**திருமதி ச. சத்தியதேவன்**
(பிறவுண் றோட், யாழ்ப்பாணம்)

**T. நந்தகுமார்**
(கொழும்பு)

**மா. ஞானலிங்கம்**
(ஆசிரியர், அபிராமி மகால், அச்சுவேலி)

**க. தங்கராசா**
(ஜெயகணேசா ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை)

**சி.வ. முருகையா**
(ஆசிரியர், பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி, இணுவில்)

**து. நாகேந்திரம்**
(நல்லூர்)

**S. மங்களரூபன்**
(கல்வளை வீதி, சண்டிலிப்பாய்)

**K.V. சிவனேசன்**
(சத்ய சாயி நிலையம், கொக்குவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம.க. ஸ்ரீதரன்

(சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில்)

இ. தம்பிரத்தினம்

(முருகேச பண்டிதனார் வீதி, சுண்ணாகம்)

திருமதி P. குகதாசன்

(K.K.S. வீதி, இணுவில்)

P. நமசிவாய

(அல்வாய் மத்தி)

வ. செல்லத்துரை

(சங்கீத கலாபூஷணம், அச்சுவேலி)

இ. சிவராசா

(கரவெட்டி கிழக்கு)

சி. விஜயகுமாரன்

(உரும்பராய்)

ம. தியாகலிங்கம்

(வியாபாரிமூலை, பருத்தித்துறை)

செல்வநேசன் கஜன்

(கல்வளை வீதி, சண்டிலிப்பாய்)

க. பராரஜவிருந்தம்

(காவில், கரணவாய்)

சு. தில்லையம்பலவனார்

(இளை. விவாகப் பதிவாளர், புத்தூர்)

கந்தசாமி கதிர்காமத்தம்பி

(மல்லியோடை, வல்வெட்டி)

K. மகேந்திரன் J.P.

(நவநீதபதி, இமையாணன்)

திரு செந்தில்நாதன்

(கொக்குவில் கிழக்கு)

R. பத்மா

(சுண்டுக்குளி)

தி. தயாபரன்

(வீரமனை, குப்பிளான் தெற்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பகவத்சிங்கம்
(இளை. அதிபர், நீர்வேலி)
யோகராசா குமார்
(ஆலடி வீதி, மட்டுவில் கிழக்கு)
அ. தில்லைநாதன்
(சிவன்வீதி, ஆவரங்கால்)
செ. பாலச்சந்திரன்
(K.K.S. வீதி, யாழ்ப்பாணம்)
சுபத்திரா விவேகானந்தன்
(அளகொல்லை, அளவெட்டி)
த. சந்திரசேகரம்
(நாகர்கோவில்)
கனகலிங்கம் மயூரன்
(பாரதிவீதி, அச்சுவேலி)
ச. வதனி
(நீர்வேலி மேற்கு)
வி. அருளானந்தம்
(துன்னாலை மேற்கு)
நீ. மயில்வாகனம் J.P.
(வருணன், அச்சுவேலி)
T.N. இராஜா
(பொன்கிளர், சங்கானை)
சோதிரட்ணம் அனுஷியா
(அரசடி சந்தி, நவாலி)
செ. உமாபதி
(பிராமண வீதி, தும்பளை)
V. சந்தனத்தேவன்
(தூதாவளை, கரணவாய்)
ஐயாத்துரை நடராசா
(சிவசிதம்பரம் வளவு, கரவெட்டி)
S. செந்தூரன்
(மாருதி இல்லம், மாறாப்புலம், அல்வாய்)
திருமதி சுசிகலா
(கொத்தியகாடு, தொண்டைமானாறு)
செ. சுப்பிரமணியம்
(யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**A. பிரதாபன்**
(சந்திரபுரம், உடுவில்)
**வை. இராசேந்திரம்**
(இணுவில்)
**C.H. புவனேஸ்வரி**
(மானிப்பாய்)
**திருமதி ஆறுமுகம் உமாதேவி**
(பண்ணாகம், சுழிபுரம்)
**திருமதி கிருஷ்ணகுமாரி கனகசிங்கம்**
(சுகவனம், உரும்பராய்)
**V.S. மருதலிங்கம்**
(அரசடி சந்தி, மானிப்பாய்)
**அ. பாலேஸ்வரி**
(கதிரிப்பாய், அச்சுவேலி)
**த. கணபதிப்பிள்ளை**
(சாயி இல்லம், கொல்லோலை, இமையாணன்)
**க. திருச்செந்தூர்**
(வீரப்பதிராஜன், கரணவாய்)
**K. தங்கவேலாயுதம்**
(பருத்தித்துறை)
**சிவகுரு குகதாசன்**
(செல்வமதி, ஆவரங்கால்)
**வ. தம்பையா**
(கலட்டி வளவு, புலோலி மத்தி)
**சி.வ. புஸ்பராசா**
(வட்டுவனை, புலோலி தெற்கு)
**திருமதி செல்வநாயகி ஞானசுந்தரம்**
(செங்குந்தா வீதி, கரவெட்டி கிழக்கு)
**வைத்திலிங்கம் பிரபாகரன்**
(துரைவீதி, கொக்குவில்)
**S. செல்லையா**
(போதராமடம், துன்னாலை)
**வைத்திலிங்கம் உதயமலர்**
(கரணவாய் தெற்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே சிவம்

– திருமதி நாகேஸ்வரி கந்தசாமி அவர்கள் –

இப்பரந்த பூவுலகின் கண்ணே பற்பல சமயங்கள் இருந்தாலும் அவை அனைத்திலும் தொன்மையானதும், சிறப்புமிக்கதுமான சமயம் சைவசமயமே! சிவனையே முழுமுதற் பொருளாகக் கொண்டு ஒழுகுவது சைவசமயம். சைவ ஒழுக்கம் உடையவர் அன்பு உடையவராக இருப்பது முதன்மையானது. "இரையைத் தேடுவதோடு இறமையையும் தேடு" என்பது ஆன்றோர் மொழி. சைவம் என்ற சொல் "சிவம்" என்ற வேர்ச் சொல்லின் அடியாகத் தோன்றியது.



சிவத்தில் இருந்து தோன்றியதே சைவம். சிவம் என்ற சொல் இறைவனைக் குறிப்பது மட்டுமல்ல. பண்புப் பெயராகி செம்மை, மங்கலம், நிறைகுணம், நலன்கள் அனைத்தையும் அருள்பவன் ஆதலால் சிவம் - சிவன் என்று அழைக்கின்றோம். குறைவிலா மங்கல குணத்தினன் ஆதலின் அறைகுவர் "சிவன்" என அறிவின் மேலவர்.

எல்லா உயிர்களிடமும் காட்டும் அன்பையே இறைவன் நம்மிடம் எதிர்பார்க்கின்றார். அன்பில்லாத இதயத்தில் இறைவன் உறைவதில்லை. கருணை, தயை, இரக்கம், அன்பு இவற்றையே சைவசமயம் அடிப்படையாகக் கொண்டு உள்ளது. இதனையே திருமூலர் திருமந்திரத்தில் அற்புதமாக உணர்த்தி உள்ளார்.

அன்பு சிவமிரண் டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே.

ஆறறிவுள்ள மனிதன் மட்டுமல்ல எறும்பு, சிலந்தி, பாம்பு, யானை, கழுதை, காகம் முதலிய சிற்றுயிர்கள் சிவனை வணங்கி முத்திபெற்றன. "ஆகம வழிபாட்டிலும் அன்பு வழிபாட்டிற்கே இறைவன் முதன்மை தந்தமையை கண்ணப்பர் வரலாற்றின்மூலம் உணரலாம். அன்பு என்பது ஒரு அமுதசுரபி. தொட்டிலில் துயில்கொள்ளும் குழந்தையைப் பாருங்கள்; வைத்தகண் வாங்காமல் அந்தக் குழந்தையைப் பரிவு பாசத்துடன் உற்றுநோக்கும் தாயைப்

பசித்தோருக்கு உணவிடுவதே என் மதம். வறியவரிடமும் பாமரரிடமும் அன்புடன் பழகுவதே என் கடவுள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாருங்கள்; அங்கே தொட்டிலை தாலாட்டுப் பாடலுடன் ஆட்டிக்கொண்டு இருக்கும் தாயின் உள்ளத்தில் மிளிர்வது என்ன? இந்த அன்புதான்.

காலையிலே தென்றலோடு தென்றலாக உலவி வரும் இன்னிசையைக் கேட்டிருக் கிறீர்களா? கோயிலில் கேட்கும் மணி ஓசையில் இறைவனுடைய அன்புக் குரலைக் கேட்க வில்லையா? "இசை" என்றால் என்ன? "இசையே அன்பின் குரல்" அது அனைத்து உயிர் களையும் கற்பனை உலகில் சஞ்சரிக்க வைக்கிறது. "வெற்றி வீரர்களின் அருஞ்செயல் களுக்கு ஆதாரமாயிருப்பது அன்பு. இல்லறத்தை நல்லறமாக்குவது அன்பு", "அன்பில்லா வாழ்க்கை ஒரு பாலைவனம்" இந்தப் பாலைவனத்தை சோலை வனமாக்குவது அன்பு.

"அன்பிலாரெல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

அன்பில்லாதவர்கள் எல்லாப் பொருட் களையும் எவருக்கும் கொடுக்காமல் தமக்கு உரிமையாக்கிக் கொள்வர். ஆனால் அன்பு உள்ளம் கொண்டவர்களோ தமது தசை இல்லாத எலும்பு போன்ற உடம்பையும் பிற ருக்குக் கொடுக்கப் பின்நிற்கமாட்டார்கள். எலும்பு இல்லாத உடலுடன் வாழும் புழுவை வெய்யில் காய்த்து வருத்துவதுபோல அன்பு இல்லா உடம்பை அறம் வருத்தும். உடம் பிலே உதிரம்போல உள் உணர்விலே ஊற் றெடுப்பதுதான் அன்பு.

"தமிழ்மொழியின் பொருளில் கள் ளின் இனிமைபோல் கனிவு நிறைந்தது அன்பு". அன்பினை அடைப்பதற்கு தாழ்ப்பாழ் கிடையாது. அன்புள்ளவரின் உள்ளங்களில் இருந்து துளிர்க்கும் கண்ணீரே அன்பின் பெருமையையும் ஆழத்தையும் உலகோர் பலரும் அறிய வெளிப்படுத்திவிடும்.

இதனால்த்தான் "அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்" எனச் செந்நாப் போதார் கூற நேர்ந்தது. ஒருவனுடைய உள்ளத்திலே நிறைந்த அன்பு இருக்குமானால் அவன் தன் வாழ்வில் எல்லை இல்லாத இன்பத்தை அடைவான்". இதனை ஆசிய ஜோதியில் "கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை" மிக அழகாகக் கூறு கிறார். "அன்பு இருக்குமெனில் அளவறிய இன்பம் எய்திடலாம் ஐயம் சிறிதுமில்லை" என்கிறார். அன்பு என்பது உலக மகாசக்தி. அன்பினை உபசரித்து வருபவர்கள்- வாழ் வில் நடைமுறைப்படுத்துபவர்கள் எப்பொழு துமே நிறைவாழ்வு வாழ்வார்கள்.

அமைதியைப் பெறுவதற்குச் சுகமான வழி எல்லா உயிர்கள்மீதும் நேயங் கொள் எல், அன்பு சொரிதல் ஆகும். இதற்கு ஒரு சதமேனும் செலவு செய்யத் தேவையில்லை. உலகில் உள்ள அனைவருக்கும் இயலக் கூடியது பிறருக்கு அன்பு செய்தல் ஆகும். பெரும் பெரும் கடினமான காரியங்களை எல்லாம் செய்யத் துடிக்கும் மனிதர்கள் மிகச் சுலபமான அன்பு செய்தலை ஏனோ மறந்து வருகிறார்கள் என்பதுதான் புரிந்து கொள்ள முடியாத பெரும் புதிராக மக்க ளிடையே இருந்து வருகிறது.

அன்பு செய்தல் ஒவ்வொரு மனி தனதும் அடிப்படை உரிமையாகும். "அன்பு செய்ய மறுப்பவன் வாழ மறுக்கிறான்" என் பதுவே உண்மை. அன்பும் அறமும்தான் வாழ்க்கையின் பண்பும் பயனுமென்கிறார் வள்ளுவர்.

"அஹிம்சை என்பது பிறருக்கு இன்னா செய்யாமை" அது அன்பின் செயல்வடிவம். உலகில் எல்லாச் சமயங்களும் அன்பு வழி யையே வாழும் வழியாக ஏற்றுக்கொண்டன

*அளவில்லாத ஆசை நமது நல்ல குணங்களை அழித்துவிடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. "அன்பு என்பது ஒரு சிறந்த விழுமியம்" அன்பு பிறரிடம் விருப்பம் கொள்ளும் தன்மையைத் தரும். அது எல்லோரிடத்தும் நட்பு எனப்படும் அளவிலாச் சிறப்பைக் கொடுக்கும். கல்வி அறிவில்லாதவர் அன்பு அறத்துக்கு மட்டுமே துணை என்பர்.

"உள்ளத்திலே அன்பு இல்லாமல் வாழும் உயிர் வாழ்க்கை கொடிய பாலை வனத்திலே பட்டமரம் துளிர்த்ததைப் போன்றது.

அன்பாகிய திருவருளும் இன்ப மாகிய சிவனும், மணியும் ஒளியும் போன்ற ஒன்றே. மெய்உணர்வு கைவரப்பெறாதவர் கள் அன்பையும் சிவத்தையும் இருவேறு பொருள்கள் எனக் கூறுவர். மெய்மையாக நோக்கின் அன்பாகிய திருவருளே இன்ப மாகிய சிவனுக்குத் திருமேனியாகும். அன்பே சிவம் என்னும் உண்மையினை அருளால் அனைவரும் அறிந்தபின் தாம் இடையறாது திருவடிக் கண் வைக்கும் அன்பாகிய வித்தே சிவமாய் விளைந்து இன்பமாகக் கனிந்து அன்புடையவர்க்கு என்றும் குறையாத பேரின்பம் நுகர்வதாகும்

இவ்வுண்மையை "அன்பே சிவமாய் அமர்ந்து இருந்தார்" என்னும் மறைமொழி யில் உணரலாம்.

## ஆறுமுகன் அருளுக்கு ஏது இணை?

### பல்லவி

என் இதயக் கோவிலிலே சந்நிதியான் இருக்கையிலே
எனக்கிங்கு குறைகளென்று ஏதுமில்லை!
(என்)

### அனுபல்லவி

பன்னிரு கை வேலவனை பாடிநிதம் தொழுவதல்லால்
பாரினிலே எனக்கின்பம் வேறு இல்லை!
(என்)

### சரணம்

கன்னற்றமிழ் எடுத்துக், கவிமலர் நான் தொடுத்து
கந்தனுக்கு தினந்தினமும் சூடி நிற்பேன்!
இன்னிசையில் அவன் புகழை இங்கிதமாய்ப் பாடி
இருகரம் கூப்பியுமே இறைஞ்சி நிற்பேன்!
(என்)
வேண்டுகின்ற போழ்திலெல்லாம் வேண்டுகின்றவரம் ஈயும்
வேலவனே என்றென்றும் எனக்குத் துணை!
ஆண்டவன், எம் தொண்டைமான் ஆற்றங்கரையுறைந்த
ஆறுமுகன்! அவன் அருளுக் கேது இணை? (என்)

-கி. குலசேகரன்-

நீ துயரப்படக் காரணம் எதுவாக இருந்தாலும் பிறருக்குத் துன்பம் செய்யாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# திருச்சதகம்

## பத்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

26. வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேட னென்பாய் போல
இனையனா வென்றுன்னை யதுவித் தென்ன
ஆட்கொண்டெம் பிரானானாக் கிரும்பின் பாவை
அனையநான் பாடேன் நின்றாடேன் அந்தோ
அலறிடேன் உலறிடேன் ஆவி சோரேன்
முனைவனே முறையோநான் ஆன வாறு
முடிவறியேன் முதலந்த மாயி னானே.

**ப-ரை:**

முதல் அந்தம் ஆயினானே- உலகத் தோற்றத்திற்கு முன்னும் அதன் அழிவுக்குப் பின்னும் உள்ளவனே, புகுந்து நின்று- இந் நிலவுலகில் பரமாசாரியத் திருமேனிகொண்டு வலிய எழுந்தருளி வந்து தங்கி, வினை யிலே கிடந்தேனை- கன்ம மலத்துட் கட் டுண்டு கிடந்தவனாகிய என்னை, போது- இங்கே வருக என அழைத்து, நான் வினைக் கேடன் என்பாய் போல- நான் வினையைக் கெடுத்து உய்யக் கொள்பவன் என்று கூறு வாய் போல, நான் இனையன் என்று உன்னை அறிவித்து- யான் இத்தன்மை உடையவன் என்று நின் உண்மைத் தன்மையினை எனக்கு அறிவித்து, என்னை ஆட்கொண்டு- என்னை ஆளாகக்கொண்டு, எம்பிரான் ஆனாய்க்கு- எங்கள் தலை வனாகிய நினது பேரருளின் திறத்திற்குக் கைம்மாறாக, இரும்பின் பாவை அனைய நான்- இரும்பினாற் செய்யப்பட்ட பாவை போல் அசைவற்றுக் கிடக்கும் நான், பாடேன்- நின் புகழைப் பாடுதல் செய்யேன்; நின்று ஆடேன்- நின்று ஆடுதலைச் செய்யேன்; அந்தோ- ஐயகோ, அலறிடேன் உலறிடேன் ஆவி சோரேன்- உரை தடுமாறேன் வாட்ட மடைந்திலேன் அவசமடைந்திலேன்; முனை வனே- கடவுளே, நான் ஆன ஆறு முறையோ- நான் இங்ஙனம் ஆகிய தன்மை முறை யாகுமோ? ஆகாதே; முடிவு அறியேன்- இது எவ்வாறு முடியும் என அறிந்திலேன்.

முதலந்தமாயினானே, இவ்வுலகிற் பரமாசாரியனாய் வலிய எழுந்தருளி வந்து தங்கி வினையிலே கட்டுண்டு கிடந்த என்னை இங்கே வருக என அழைத்து நான் வினை யைக் கெடுத்து உய்யக் கொள்பவன் என்று கூறுவாய்போல் யான் இத்தன்மையுடையன் என்று நின் உண்மைத் தன்மையினை எனக்கு அறிவித்து என்னை ஆட்கொண்டு எம்பிரா னாகிய நினது பேரருளின் திறத்திற்குக் கைம்மாறாக இரும்பின்பாவை போல அசை வற்றுக் கிடக்கும் நான் பாடேன்; நின்று

*மௌனம் என்ற மரத்தில் அமைதி எனும் கனி தொங்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடேன்; அந்தோ! அலறிடேன் உலறிடேன் ஆவிசோரேன்; முனைவனே, நான் இங்ஙனம் ஆகிய தன்மை முறையாகுமோ? ஆகாதே, இது எவ்வாறு முடியும் என அறிந்திலேன் என்பதாம்.

வினை என்றது கன்ம மலத்தினை. அது பிராரப்தம் ஆகாமியம் சஞ்சிதம் என மூவகைப்படும். இவற்றுள் பிராரப்தம் எடுத்த பிறவியில் அனுபவிக்கும் வினை; ஆகாமியம் எடுத்த பிறவியில் ஈட்டும்வினை. சஞ்சிதம் முற்பிறவிகளில் ஈட்டிய வினையில் அனுபவிக்கப்பட்டவை போக எஞ்சியுள்ளவை. வினை பிறவிக்கு ஏதுவாயும் பிறவியில் ஈட்டப்படுவதாயுமுள்ளது. அதனால் வினையின் வயப்பட்டுப் பிறந்து வினைப்பயனை அனுபவித்து வினையைத் தேடி இறந்து இவ்வாறு உழன்று திரிந்தமையை உணர்த்தும் பொருட்டு "வினையிலே கிடந்தேனை" என்றார். கிடத்தல் ஈண்டு வினைவயப்பட்டிருத்தலை உணர்த்தியது. கிடந்தேனை என்னும் இரண்டாவது போது என்பதன் ஆற்றலால் வருவிக்கப்பட்ட அழைத்து என்பதனோடு முடிந்தது.

இறைவன் அடிகளை ஆட்கொண்டது குருவடிவாய் வலிய வந்து ஆதலின் புகுந்து என்பதற்கு நிலவுலகிற் குருவடிவாய் வலிய வந்து எனவுரைக்கப்பட்டது. "பொங்குமலர்ப் பாதம் பூதலத்தே போந்தருளி, எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு" (அம்1) என அடிகள் அருளியமையும் காண்க. நின்று என்பது ஈண்டு தங்கி என்னும் பொருளில் வந்தது. போது- போதுக என்னும் வியங்கோளீறுகெட்டது. வருக என்பது பொருள்.

வினைக்கேடன் என்றார் இறைவன் உயிர்களின் வினையைக் கெடுத்து உய்யக் கொள்பவனாதலின், "வினைக்கேடரு முளரோ பிறர் சொல்லீர் வியனுலகில், எனைத்தான் புகுந்தாண்டான்" (உயிருண்ணி 4) என அடிகள் பிறாண்டு கூறுதலுங் காண்க. என்பாய் போல என்றது வினைக்கேடன் என்று குறிப்பினால் அறியும்படி, என்றவாறு. இனையன்- இத்தன்மையுடையேன். அன் விகுதி தன்மைக் கண் வந்தது. அறியாமையிற் கிடக்கும் உயிர்கள் இறைவன் அறிவித்தாலன்றி அவன் தன் முழுமுதற்றன்மையை உணரமாட்டா என்பது தெரிவிப்பார். "இனையனா னென்றுன்னை யறிவித்து" என்றார். "அறிவிக்க வன்றி யறியாவுளங்கள்" எனச் சிவஞான போதத்து (சூத் 8:2:2) வருதலும் காண்க. ஆனாய்க்கு என்பதற்கு ஆன நினது அருள் திறத்திற்குக் கைம்மாறாக என ஆற்றலாற் சில சொற்கள் வருவித்துரைக்க.

கூத்தாட்டும் பாவை தோலினாலும் மரத்தினாலும் செய்யப்பட்டு ஆட்டுவாரால் ஆட்டப்படும். தான் அவைபோலன்றி ஒரு செயலுமற்றுக் கிடந்தமையின் "இரும்பின் பாவை யனைய நான்" என்றார்.

இறைவனிடத்து அன்புடையார் அவ்வன்பு முதிரமுதிர அவன் புகழைப்பாடி ஆனந்தக் கூத்தாடி உரைதடுமாறி வாட்டமுற்று அவசமடைவராதலின் அம்முறைமை தோன்றப் பாடேன்ஆடேன் அலறிடேன் உலறிடேன் ஆவிசோரேன் என்று அருளினார். "நாவார்ந்த மறைபாடி நட்டமடி நான்முகனு மிந்திரனு மாலும்போற்ற" (நாவு 313:7) எனத் தேவாரத்து வருதலுங் காண்க.

முனைவன்- கடவுள். "வினையி னீங்கி விளங்கிய அறிவின் முனைவன்" என்பர் ஆசிரியர் தொல்காப்பியனார். (தொல்மரபு சூத்94). நான் ஆனவாறு முறையோ என்றது நன்றிமறந்தமையாகும் என்னும் பொருள் தோன்ற நின்றது. முடிவறியேன் என்றது இதன் பயன் எவ்வாறு முடியும் என்பதை அறியேன் என்றவாறு. முதலந்தமாயினான் என்பது உலகம் தோன்றுதற்கு முன்னும்

*விடுதலை பெறும்போதுதான் உண்மையைக் காண முடிகின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ∴து அழிந்த பின்னும் உள்ளவன் என்னும் பொருளது. "ஆதியு மந்தமுமாயினாற்கு" (பொற்) என அடிகள் மற்றோரிடத்து அருளிய வாறுங் காண்க.

இதன்கண் முனைவனே முதலந்த மாயினானே என இறைவன் சுட்டறிவிற்குப் புலப்படாதவன் என்பது தோன்ற வைத்தமை யானும் முதலிரண்டடிகளில் ஆன்மபோதங் கெட்டுச் சிவபோதம் விளங்கிநின்றமை தோன்றக் கூறுதலானும் சுட்டறுத்தல் என் னும் மூன்றாம்பத்து நுதலிய பொருள் புலப் படுதல் காண்க.

27. ஆயனான் மறையவனு நீயே யாதல்
அறிந்தியா னியாவரினுங் கடைய னாய
நாயினே னாதலையு நோக்கிக் கண்டு
நாதனே நானுனக்கே ரன்ப னென்பேன்
ஆயினே னாதலா லாண்டு கொண்டாய்
அடியார்தம் மில்லையே யன்றி மற்றோர்
பேயனே னிதுதானின் பெருமை யன்றே
யெம்பெருமா னென்சொல்லிப் பேசு கேனே.

**ப-ரை:**

நாதனே- இறைவனே, ஆயன் நான் மறையவனும் நீயே ஆதல் அறிந்து- திருமாலும் பிரமனும் நீயேயாதலை அறிந்தும், யான் யாவரினும் கடையன் ஆய நாயினேன் ஆதலையும் நோக்கி கண்டு- அடியேன் எல்லாரினுங் கீழ்ப்பட்டவன் ஆகிய நாயின் தன்மையையுடையேன் ஆதலையும் ஆராய்ந்து கண்டும், நான் உனக்கு ஓர் அன்பன் என்பேன் ஆயினேன்- யாவரி னும் கடையவனாகிய நான் உனக்கு ஓர் அன்பன் என்று சொல்லுவேனாயினேன்; ஆதலால் ஆண்டு கொண்டாய்- அதனால் நீ அடியேனை ஆட்கொண்டருளினாய்; ஓர் பேயனேன் அன்றி மற்று அடியார்தாம் இல்லையே- ஒரு பேயின் தன்மையுடையேனாகிய என்னையன்றி நீ ஆட்கொள்வதற்கு வேறு அடியார்கள் இல்லையா? இது நின் பெருமை அன்றே- அடி யார் இருக்கவும் என்னை ஆட்கொண்ட இச்செயல் நின் பெருந்தன்மையைக் குறிக்குமல்லவா; எம்பெருமான்- எங்கள் தலைவனே, என் சொல்லி பேசுகேன்- நின்னை என்ன சொல்லி நான் புகழ்ந்து பாடுவேன்.

நாதனே திருமாலும் பிரமனும் நீயேயாதலை அறிந்தும் யான் யாவரினும் கீழ்ப் பட்டவனாகிய நாயினேனாதலையும் ஆராய்ந்து கண்டும் அடியேனும் உனக்கு ஓர் அன்பன் என்று சொல்லிக்கொள்வேனாயினேன்; அதனால் நீ அடியேனை ஆண்டருளினாய்; ஒரு பேயனாகிய என்னை அன்றி நீ ஆட்கொள்ளுதற்கு வேறு அடியார்கள் இல்லையா? அடி யார்கள் இருக்கவும் என்னை ஆட்கொண்டருளிய இச்செயல் நின் பெருந் தன்மையைக் குறிக்குமல்லவா? எங்கள் தலைவனே, நின்னை என்ன சொல்லிப் புகழ்ந்து பாடுவேன் என்பதாம்.

ஆயன் நான்மறையவன் என்றது ஈண்டுக் காரணேசுரர்களான பிரம விட்டுணுக்களை. ஆயர்பாடியில் உதித்தமை பற்றித் திருமாலை "ஆயன்" என்றார், கோலன் நான்முகன் வானவர் கோனும்" (சுந். 17:1) எனத் தேவாரத்தும், "ஆயனாகிய மாயவனே" எனப்

*கடமையைச் செய்யத் துணிவுடன் இரு. அதுவே உண்மையான வீரத்தின் சிகரம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினொராந் திருமுறையினும் (கோயிற்றிருப் 8) வருவன ஈண்டைக்கேற்ப அறியற்பாலன மறையவனும் என்புழி உம்மையை ஆயன் என்பதனோடுங் கூட்டுக. ஆயனும் நான்மறையவனும் இறைவனாதலை,

"விண்முதற் பூதலம் ஒன்றிய இருசுடர் உம்பர்கள்பிறவும்
படைத் தளித் தழிப்ப மும்மூர்த்திக ளாயினை"

என ஆளுடையபிள்ளையார் அருளிச் செய்தமையும் வலியுறுத்தும். காப்புக் கடவுளும் படைப்புக் கடவுளும் நீயேயாதலால் எல்லாரினும் முழுமுதல் இறைவன் நீயே என்பதை அறிந்தும், யான் யாவரின் கடையனேன் ஆய நாயினேன் ஆதலையும் ஆராய்ந்து அறிந்தும் என்றதனால் இறைவனது மிக்க உயர்வையும் தனது மிக்க இழிவையும் அறிந்திருந்தும் யான் உனக்கு ஓர் அன்பனென்பேன் ஆயினேன் என்பது பொருந்தாதென்பதை அறிவுறுத்தியருளினார். நீயே என்பதில் ஏகாரம் தேற்றப்பொருட்டு, அறிந்தும் என உம்மை விரிக்க நான்- யாவரினும் கடையனாகிய நான், என்பேனாயினேன். என்று சொல்லுவேனாயின். அங்ஙனம் சொல்லுதலையே ஆதாரமாகக் கொண்டு நீ என்னை ஆட்கொண்டருளினாய் என்பார். "ஆதலால் ஆண்டு கொண்டாய்" என்றார்.

ஓர் பேயனேன் அன்றி மற்ற அடியார் தாம் இல்லையே என மாறிக் கூட்டிப் பொருள் கொள்க. பேயனேன் அன்றி மற்றோர் அடியார்தாம் இல்லையே எனக் கூட்டிப் பொருள் கோடல் இலக்கண மரபிற்கு வழுவாம். மானுடவடிவினோனாயினும் பேய்த்தன்மையாகிய இழிவுடைமை பற்றிப் "பேயனேன்" என்றார். "பேயனாகிலும் பெருநெறி காட்டாய்" (செத் 7) என அடிகள் பிறிதோரிடத்துக் கூறுதலுங் காண்க. மற்று பிறிது என்னும் பொருளில் வந்தது. இல்லையே என்புழி வினாப் பொருட்டாகிய ஏகாரம் உளராகவும் என எதிர்மறைப் பொருளை உணர்த்தி நின்றது. "ஞால மிந்திரன் நான்முகன் வானவர் நிற்க மற்றெனை நயந்தினி தாண்டாய்" (செத் 9) என அடிகள் அருளியவாறுங் காண்க. வேறு அடியார் உளராகவும் நான் உனக்கோர் அன்பன் என்று சொல்லிய அளவில் ஆண்டுகொண்ட இச்செயல் நின் பெருந்தன்மையைக் குறிப்பதாகும் என்பார். "இதுதான் நின்பெருமை அன்றே" என்றார். எங்கள் தலைவனாகிய நின்பெருமை மனமொழிகளுக்கு அடங்காமையின் "எம்பெருமான் என் சொல்லிப் பேசுகேனே" என்றார். என் சொல்லி- என்ன சொல்லி "எண்ணுகே னென் சொல்லி யெண்ணுகேனோ" (நாவு 313:1) எனத் தேவாரத்து வருதலுங் காண்க.

இதன்கண் மிக்க இழிவுடைய யான் மிக்கநின் பெருந்தன்மையில் எதனைச் சொல்லிப் பாட வல்லோனாவேன் என்றமையால் அடிகள் மனமொழிகளுக்கு எட்டாத இறைவன் புகழ் சுட்டளவிற்றன்று என்பது புலப்பட வைத்தமையாற் சுட்டறுத்தல் என்னும் மூன்றாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க.

(தொடரும்...

**அருள்**

அருள் எப்போதும் இருக்கிறது. அருளே ஆத்மா. அது ஏதோ புதிதாக அடையப்படுவது இல்லை. அதன் இருப்பை அறிய வேண்டும், அவ்வளவே. சூரியனின் தூய ஒளியால் சூழப்படுகிறோம். இருப்பினும் சூரியனைக் காணவேண்டுமானால் அதன் திசையை நோக்க வேண்டும். அதுபோல, அருள் இங்கேயே இருந்தாலும், அதை முயற்சி செய்துதான் அறிந்துகொள்ள வேண்டும். *-ரமணர்-*

*தன்னம்பிக்கை இல்லாத வாழ்க்கை காலால் நடப்பதற்குப் பதிலாக தலையால் நடப்பது போன்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்வியற் பண்பு

- திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள் -

முந்தை வினையறுக்கும் மூத்த விநாயகனே
ஐந்து கரத்தோனே ஐயங்கள் தீர்ப்பவனே
தொந்தி வயிற்றோனே தொல்லையறுப்போனே
எந்தை பணி ஏழுலகும் மலர ஏரம்ப மூர்த்தியே காப்பு.

மனிதன் இந்த உலகில் ஏன் பிறந்தான்? மனிதனின் இயல்பு என்ன? மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் இதைப்பற்றிச் சிந்தித்து விடை காண வேண்டும். அப்போது தான் மனித வாழ்வு சீராக அமையும். சிந்தனையில் தெளிவு பிறக்கும். வாழ்வின் அர்த்தம் புரியும். வாழ்க்கையில் அமைதியும் சுகமும் உண்டாகும்.

மனிதனின் உண்மையான இயல்பு ஆனந்தம். இயல்பான இந்த ஆனந்தத்தை அனுபவிக்கவே மனிதன் உலகில் பிறக்கிறான். ஆனால் இன்று நாம் எமது இயல்பான ஆனந்தத்தைத் தொலைத்துவிட்டு அதை வெளியே தேடுகின்றோம். இந்தத் தேடலில் நம் வாழ்நாட்கள் வீணாகின்றன. நமக்குள்ளே பல எண்ணங்கள் உருவாகின்றன. அவற்றின் விளைவு என்ன? என்பதைப் பற்றிச் சிந்திப்பதில்லை. நமக்குமுன்னே, அருகில், நம்மைச் சுற்றி இருப்பவர்கள் என்ன செய்கின்றார்கள், என்ன நினைக்கின்றார்கள், எதைச் செய்கின்றார்கள், எப்படி உடுத்துகின்றார்கள், எதை உண்கின்றார்கள் என்ற ஆராய்ச்சியில் காலத்தைக் கடத்துகின்றோம். இதன் விளைவு நம் நிகழ்கால வாழ்வை இழந்து விடுகின்றோம்.

இந்த அரிய மனிதப்பிறவி எமக்குக் கிடைத்தது பிறப்பு இறப்புச் சுழலிலிருந்து விடுபட்டு வாழ்வின் முழுமையை அனுபவித்துப் பிறவா நிலையை அடைவதற்கேயாம். பிறவா நிலையென்பது இறை நிலையாகும். இறைவன் பிறப்பு இறப்பு அற்றவர். என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர். எல்லாம் அறிவர். மனித அறிவு எல்லைக்கு உட்பட்டது; இறை அறிவோ எல்லையற்றது. ஆகவே இறைவனைப் பற்றி முழுமையாக அறியவோ அவனது செயலுக்கு அர்த்தம் காணவோ மனித அறிவால் முடியாது.

மனிதப் பண்பு என்றால் என்ன? "பண்பு" என்ற சொல் "பண்" என்பதிலிருந்து பிறந்தது. தேவாரப் பதிகங்களை "பண்" எனக் குறிப்பிடுகின்றோம். இந்தப் பண்களைப் பொருளுணர்ந்து பாடும்போது மனிதனின் "பண்பாடு" என்ன என்பது துல்லியமாக விளங்கும். தேவார திருவாசகப் பண்களை இசையோடு பொருளுணர்ந்து பாடும்போது உண்டாகும் ஆனந்தமே மனிதனின் இயல்பு நிலையாகும். திருவள்ளுவரின் குறள் வரிகளைப் பொருளுணர்ந்து கற்று அதன்படி வாழ முயற்சிக்கும்போது பண்பு உயர்கின்றது. புராணங்கள் இதிகாசங்களைப் படிக்கும்போது வாழ்வைப்பற்றிய பயம் நீங்கி இயல்பான வாழ்வை இனியதாக்கிக்கொள்ள முடிகின்றது. விலங்கு நிலையைக் கடந்ததே மனிதநிலை, மனிதப் பிறவி நமக்குக் கிடைத்திருக்கின்றது. ஒவ்வொரு மனிதனும் மேலோனாக வேண்டுமென்ற வேட்கையுடன்தான் உழைக்கின்றான்.

*உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது. அதை யாராலும் மூடி மறைக்க முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மேலாம் நிலையென்ன? மனிதனை மேலோன் ஆக்குவது தெய்வீகச் சிந்தனைகளே. பிறப்பின் அதிஉயர்நிலை- பிறப்பிறப்பில்லாத இறைவனைச் சார்ந்து அந்த இயல்பில் ஒன்றியிருப்பதேயாம். இதைப் "பூரண நிலை" எனக் கூறுவர். இந்நிலையில் சம நிலை பேணப்படுவதால் பூரண அமைதி நிலவுகின்றது.

மனித வாழ்வின் இலக்கை இயம்புவது இலக்கியம் எனப்படுகின்றது. இந்த வகையில் புராணங்கள் வரலாறுகள், காப்பியங்கள் என்பன உயர்ந்த இலக்கை நோக்கி மனிதனை அழைத்துச் செல்கின்றன. அன்பு, வீரம், தர்மம், அறம், பொறுமை, சகிப்புத் தன்மை, நட்பு என்பனவற்றை வெளிப்படுத்தும் வகையில் இவை செயற்படுகின்றன. இவற்றைத் திரும்பத் திரும்பப் படிப்பதன்மூலமும், நாடகங்களாக நடிப்பதன் மூலமும் மனதில் பதிய வைப்பதால் நமக்கு உயர்ந்த சிந்தனைகள் அனுபவங்கள் தோன்றும். நமது எதிர்காலச் சந்ததியினராகிய இளைஞர் சமுதாயம், குழந்தைகள் ஆகியோர் இந்த உயர்நிலையாகிய ஆனந்தத்தைப் பெற்று அமைதிப் பூங்காவாக வாழ்வை மலரச் செய்ய ஒவ்வொரு மனிதனும் செய்ய வேண்டிய பணி இறைபணியாகும். நாம் குழந்தைகளைப் பார்த்து தொலைக்காட்சியைப் பார்க்காதே, கண்ட கண்ட புத்தகங்களைப் படிக்காதே, கெட்டவர்களுடன் சேராதே, அதைச் செய்யாதே, இதைச் செய்யாதே என்று கண்டிக்கின்றோம். இதன் விளைவு அவர்கள் அவற்றையே நாடுகின்றனர்.

இவற்றிற்குப் பதிலாகப் பெற்றோர் மற்றும் வீட்டிலிருக்கும் உறவினர்கள் நல்ல புத்தகங்களாகிய அறநெறிக் கதைகள், பக்திக் கதைகள், புராணங்கள், வீரபுருஷர்கள், மகான்கள், நாயன்மார்கள் பற்றிய வரலாறுகள், தேவார திருவாசகங்கள், திருக்குறள், பகவத்கீதை போன்றவற்றை ஓய்வு நேரங்களில் படிப்பதோடு இளையவர்களுக்கும் அவற்றின் உயர்வைப் புரியவைக்க வேண்டும். தொலைக்காட்சியில் நல்லறிவு புகட்டும் நல்ல காட்சிகளைப் பார்த்து அதைக் குழந்தைகளோடு பகிர்ந்துகொள்ள வேண்டும். அவர்கள் கேள்விகளுக்கு அவர்களுக்குப் புரியும் விதத்தில் பெற்றோர் பதில் சொல்ல வேண்டும். பிள்ளைகளுக்குப் போஷாக்கான உணவு வகைகளைக் கொடுப்பதுடன், அவர்கள் பார்ப்பது, கேட்பது, உணர்வது எல்லாம் சத்துள்ளதாக அமைய வேண்டும். அப்போது தான் நல்ல சமுதாயம் உருவாகும். இதை விட்டுப் பிள்ளைகள் கெட்டுப் போகிறார்கள்- திருத்த முடியாதிருக்கின்றது- சூழல் சரியில்லை - பாடசாலை சரியில்லை- ஆசிரியர்கள் சரியில்லை என்று புறக் காரணங்களைக் காட்டிக் கவலைப்படுவதால் எந்தப் பயனும் ஏற்படாது. மனித ஆற்றலை ஆக்கத்திற்குப் பயன்படுத்த ஒவ்வொரு மனிதனும் சங்கற்பம் செய்துகொள்ள வேண்டும்.

"அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி" என்பது பழமொழி. மக்களை ஆள்பவர்கள் மக்களுக்கு முன்மாதிரியாக வாழ்வதுடன் நல்லனவற்றை மக்கள் பார்க்கவும், கேட்கவும் செய்யத் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்துவார்களேயானால் நல்லுலகம் மலரும். அதிகாரத்திலுள்ள மேலாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் எல்லோரும் முன்மாதிரியாக வாழ்ந்து இளைய சமுதாயத்தினர்க்கு வழிகாட்ட வேண்டும். ஒவ்வொரு பெற்றோரும், ஆசிரியர்களும் அரச அதிகாரிகளும் தங்கள் பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும். பொறுப்பற்ற செயல்களினால் பாதிக்கப்படுவது மனித சமுதாயம் முழுவதுமே. சீரழிவு பட்ட சமுதாயத்தில் மனிதர்கள் எவ்வாறு நிம்மதியாக வாழமுடியும்? பயம்,

*உண்மைக்குப் பகை உள்ளத்தில் தோன்றும் பயம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலை, நோய், அறியாமை இவையே பொறுப்பற்ற தன்மையினால் உண்டாகும் விளைவுகள்.

நாம் செய்யும் ஒவ்வொரு பணியும் இறைபணியே. இறைவனே அரசன். நாம் அவன் பணியாளர்கள். இறைவன் கர்த்தா- நாம் கருவி என்ற நோக்குடன் செயலாற்றும் போது மனம் தூய்மையாகின்றது. இதனால் செய்யும் பணி தூய்மையாகின்றது. செயலில் பணிவு உண்டாகின்றது. அகந்தை அகல் கின்றது. "பணி" என்ற சொல்லின் அர்த்தம் பணிவுடன் செய்யப்படுவதேயாகும். "சேவை" என்பது தேவை அறிந்து செய்யப்படுவது. "நான் செய்தேன், நான் கொடுத்தேன்" என்று பெயருக்காகவும் புகழுக்காகவும் செய்யப்படு வது சேவையுமல்ல பணியும் அல்ல. இது போட்டியையும் குரோதத்தையும் வளர்த்து அஞ்ஞான இருளில் மக்களை வீழ்த்தி அழிவுப் பாதைக்கு மனிதனை இட்டுச் செல்வ தாகும். முக்கியமாகப் படித்தவர்கள், பதவி நிலையில் உள்ளவர்கள் மக்கள் சேவையே மகேசன் சேவையென உணர்ந்து இறைபணி யாக; இறைவனுக்குச் செய்யும் பூசையாக எண்ணித் தங்களுக்கு இட்ட பணிகளைச் செய்வாராயின் நல்லுலகில் நாம் அமைதி யாக வாழலாம். இதையே பகவத்கீதையும் கூறுகின்றது.

இயந்திரமயமாகிய இன்றைய உல கில் மனிதன் நிதானமாகச் சிந்திக்கவோ செயலாற்றவோ நேரமின்றி எந்நேரமும் பதட் டத்துடன் அங்குமிங்கும் ஓடுகின்றான். எதைத் தேடி? வாழ்க்கை வசதியைத்தேடி. வசதியென்றால் என்ன? நிம்மதியான அச்ச மற்ற கவலையற்ற அன்பான வாழ்க்கை. மனிதன் தன் சொந்த இயல்பைத் தொலைத்து விட்டு அதைத் தேடுகின்றான். அந்நிய கலாசாரத்திற்கு அடிமைப்பட்டு ஏன் எதற்கு என்று புரியாமல் நல்லதைவிட்டு அல்லதைப் பற்றிக் கொண்டோம். அறிவிலிகளாக அடி மைகளாக இயல்பு வாழ்வை இழந்தோம். நமது சொந்தப்பாதை - பழகிய பாதையைத் தவறவிட்டோம். வெளிப்பகட்டிலும் படா டோபத்திலும் மனதைப் பறிகொடுத்தோம். இதனால் நாம் இழந்தது நமது சொந்த இயல்பை. இரவல் மூளையில் இயங்கி வெறும் பொம்மைகளாக ஆடுகின்றோம். இந்த மயக்கத்தினின்றும் விழித்தால்த்தான் நாம் இழந்த இயல்பை மீண்டும் பெற்றுக்கொள்ள முடியும்.

இன்றைய கல்விமுறை அதிகாரத் தைக் கைப்பற்றுவதற்கும் பொருள் ஈட்டு வதற்குமே முன்னுரிமை வழங்குகின்றது. எதைப் படித்தால் அதிக ஊதியம் பெறலாம் என்பதே இன்றைய இலக்கு. நம் வாழ்வுக்குப் பணம் முக்கியமானதுதான். ஆனால் அதைத் தேடும் வழியையும் அதை ஆளும் வழியை யும் மனிதன் முதலில் கற்க வேண்டும். இந்த அடிப்படை அறிவுதான் மனிதனை மனித னாகச் சொந்தமூளையில் இயங்கச் செய்யும் அறிவாகும். தன்னடக்கம் இல்லாதவனால் பணத்தையும் ஆளமுடியாது. மக்களையும் ஆளமுடியாது. தன்னையும் ஆளமுடியாது. தன்னடக்கத்தைத் தரும் உயர்கல்வி தன்னையறியும் ஆன்மீகக் கல்வியே. இதுவே மனிதனை மனிதனாக உயர்த்தும் உயர் கல்வி.

இன்றைய இளைய தலைமுறையின ருக்கு நாம் வழங்க வேண்டிய சொத்து இதுவே. மனிதக் குழந்தைகள் ஒவ்வொரு வருக்கும் இந்த அடிப்படைக் கல்வி கிடைக்க வழிசெய்ய வேண்டும். இதற்குப் பெரிய கட்டிடங்களோ, தளபாடங்களோ, உப கரணங்களோ முக்கியமல்ல. குழந்தைகளை அன்பால் கவர்ந்து நல்லனவற்றின்பால் ஈர்க்கவேண்டும். ஆரம்பப் பாடசாலைகளில் ஒழுக்கம், பக்தி, அறநெறி, உலகநீதி, இறை

*உண்மையை நேசி; பிழையை மன்னித்துவிடு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை ஆகியவற்றைக் கொண்ட பாடங்கள் அவர்கள் மனத்தை ஈர்க்கும்படியாக எளிமையாகப் புரிந்துகொள்ளும் படியாக ஊட்டப்பட வேண்டும். படிப்பு என்பது மனத்தைப் படிய வைப்பதாகும். இவற்றைப் படிப்படியாக உணர்ந்து செயற்பட வைப்பதே வாழ்வியற்கலை. போதனையாளர்கள் சாதனையாளர்களாக இருந்தாலன்றி நற்பிரஜைகளை உருவாக்க முடியாது.

அழிந்துபோகும் மனிதப் பண்பு விருத்தியடைய, நல்ல சமுதாயக் கட்டமைப்பை உருவாக்க, ஆரோக்கியமான வாழ்வை ஒவ்வொரு மனிதனும் பெற்றுக்கொள்ள எல்லாம் வல்ல இறைவன் திருவுளம் இரங்க வேண்டும். நற்சிந்தனை அருளிய இறைவன் இச் சிந்தனைகளை வாழ்வில் நடைமுறைப்படுத்தக்கூடிய சாத்தியத்தையும் அருளவேண்டும். நற்சிந்தனைகள் எல்லாம் இறை சங்கற்பமே. இறைவன் சங்கற்பம் ஒருபோதும் நிறைவேறாமல் போனதில்லை. நம்பிக்கையே வாழ்வாதாரம்.

உலக மக்கள் யாவரினதும் நல்வாழ்வு மலர இறைவனின் அன்பெனும் ஆகர்ஷண சக்தியை வழங்குபவன் இறைவன். எம்மைத் தன் மடியில் தாங்கி நிற்கும் பூமித்தாயே நம் அனைவருக்கும் தாய். வேற்றுமையின்றி எல்லாக் குழந்தைகளுக்கும் சீரிய பண்பை விருத்தி செய்யும் ஆசான்களே நம் தாய் தந்தையர்.

எல்லாம் வல்ல இறைவனே! சாதனையாளர்களை உருவாக்கி நல்லுலகம் மலர அருள் புரிவாயாக. இறைவனுக்கே இவ்விண்ணப்பம் சமர்ப்பணம்.

## சந்நிதி வேலவா சஞ்சலங்கள் தீர்த்திடய்யா!

சந்நிதி வேலவனின் சண்முக அர்ச்சனை கண்டால்
சந்தேகம் தீர்ந்திடுமே சர்வமங்களம் கூடும்!
வருமடியார் குறைகளையும் வரமுன்னேதீர்த்து வைக்கும்
வள்ளலவன் கருணை வெள்ளம் ஆறாகி ஓடிடுமே!
தொண்டைமானாறாகிப் பாய்ந்திடுமே!

சந்நிதிவாசா சஞ்சலங்கள் தீர்த்திடவா!
ஆற்றங்கரை ஓரமாய் அன்னதான மடங்களில் அருளமுதம் தந்தருளவா!
தொண்டைமானாற்றருகே தொண்டரெல்லாம் கூடிவிட்டார்
ஆற்றங்கரை வேலனென்றும் கல்லோடைக் கந்தன் என்றும்
நாமங்கள் ஓராயிரத்தால் அழைக்கின்றார்.

ஓடிவர மனம் இல்லையோ? ஓராயிரம் முறை அழைக்கவோ?
தேடிவரும் அடியவரை நாடிவந்து அருள்சுரக்கும்
தேனமுதசுரபியல்லவா! நினைத்தாலே வரமருளும்
அந்த அண்ணாமலைக்கிணையாக மனத்தாலேகொண்ட
உடன் மனைதேடி வரமருளும் வள்ளலே சஞ்சலங்கள் தீர்த்திடய்யா!

-க. சரவணபவன்-

*தேவைப்படும்போது தன் முடிவை மாற்றிக்கொள்ளத் தெரிந்தவன் அறிவாளி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...)

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்



## (விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்

## ஆறாம் அதிகாரம்

## அறியும் நெறி

அருள் உருவாகிய ஞானாசிரியர் நிலைபற்றி முந்திய அதிகாரத்தில் அறிந்தோம். அவரே பக்குவ ஆன்மாவுக்கு உய்யும் வழியைக் காட்ட வல்லவர். முப்பொருள்களின் இயல்பையும் உள்ளவாறு உணரும்படி உணர்த்தி ஆன்மாவைக் கட்டினின்றும் விடுவித்து, மெய்ப்பொருளாகிய சிவபெருமானிடத்து அன்பை உண்டாக்கி, அவனது திருவடியைப் பற்றிக் கொள்ளுமாறு செய்பவர்.

**பயன் மூன்று:**

ஞானாசிரியரால் ஆன்மா எய்தும் பயன் மூன்றாகும். அவை பாசநீக்கம், அருள் விளக்கம், இன்பப்பேறு என்பன. ஆசிரியர் தமது உபதேசத்தால், இவ்வுலகில் ஈட்டப்படும் செல்வமும், யாக்கையும் அவற்றின்மேல் செய்யும் பற்றும் ஆகிய யாவும் பொய் எனவும், முதல்வனது திருவருள் ஒன்றுமே மெய் எனவும் காட்டுவார். அவரது அருளுரையைக் கேட்ட காலத்தில் மாணவர் உள்ளத்தில் அருள் தோற்றம் சிறிது உண்டாகும். மருள் சிறிது நீங்கும்.

பின்னர் அவரது அருளுரையைச் சிந்தித்துத் தெளிந்த காலத்தில் ஆன்ம அறிவில் அருள் விளக்கம் மேலிடும். அவ்வாறு அருள் மிக்கு விளங்கியபோது மருள் முற்றும் நீங்கும். இதுவே பாச நீக்கமும் அருள் விளக்கமும் ஆகும். பின் அருள் ஒளியால் சிவத்தை உணர்ந்து அதில் அழுந்தும் நிலை உண்டாகும். இதுவே இன்பப்பேறு ஆகும்.

**ஞானச் செய்திகள் மூன்று:**

இந்த ஞானச் செய்திகளை மூன்று நிலைகளாக வகுத்துக் காட்டுகிறார் ஆசிரியர் உமாபதிசிவம். இதனை அவரது சிவப்பிரகாச நூலிற் காணலாம். அதன்மூன்று நிலைகளாவன ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, ஆன்ம லாபம் என்பன.

"இவ்வுடம்பின் தன்மை எனக்கு உரியதன்று" எனத் தன்னை உடம்பின் வேறாகக் காணுதல் ஆன்ம தரிசனம் ஆகும். உயிர் பதிஞானமாகிய திருவருளைப் பற்றும் காலத்தில் இந்த ஆன்ம தரிசனம் நிகழும்.

*தம்மிடமுள்ள குறைகளை நீக்கிக்கொள்வதே நமக்கு ஏற்படக்கூடிய பெரிய அதிஷ்டமாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் திருவருள் ஒளியை முற்றப்பெற்று மல இருளாகிய மாசு நீங்கி விளக்கம் பெறுவது ஆன்ம சுத்தி ஆகும். "என்செயலென ஒன்றில்லை" எனத் தன் பணியை நீத்து அனைத்தையும் திருவருட் செயலாகக் காணும் காலத்தில் இந்த ஆன்ம சுத்தி நிகழும்.

உயிர் வற்றாத சிவானந்தப் பெருங் கடலில் திளைப்பது ஆன்ம லாபம் ஆகும். உயிர் திருவருள் வழியாகச் சிவத்தை அறிந்து அதில் அழுந்துங் காலத்தில் இந்த ஆன்ம லாபம் நிகழும்.

சிவப்பிரகாச நூலில் இம்மூன்றினையும் செறிவாகக் கூறிச் சென்ற ஆசிரியர் அவற்றையே மாணவர்க்கு ஏற்ற முறையில் எளிமைப்படுத்தியும், விரிவுபடுத்தியும், தனித்தனி அதிகாரமாக அமைத்துத் திருவருட்பயனில் கூறியுள்ளார். ஆன்ம தரிசனம் கூறுவது அறியும் நெறி என்னும் அதிகாரமாகும். ஆன்ம சுத்தியைக் கூறுவது உயிர் விளக்கம் என்னும் அதிகாரமாகும். ஆன்ம லாபம் கூறுவது இன்புறுநிலை என்னும் அதிகாரமாகும்.

**கேட்டல்:**

பக்குவம் வாய்ந்த உத்தமனாகிய மாணாக்கனுக்கு ஞானாசிரியர் பின்வருமாறு உணர்த்துவார். "நீ உனது உடம்பு, ஐம்பொறிகள் முதலிய கருவிக் கூட்டத்தில் அகப்பட்டு அவற்றோடு வேற்றுமையின்றி 'அவையே நான்' என மயங்கி நின்றாய். அவற்றிற்கே தோற்றமுண்டு; வளர்ச்சியுண்டு; அழிவுண்டு. பசி, தாகம், நோய் முதலியனவெல்லாம் அவற்றிற்கே உரியன. உயிராகிய உனக்கு இவையெல்லாம் உண்மையில் இல்லையாகவும், நீ அக் கருவிகளோடு ஒற்றுமைப்பட்டு நின்றமையால் அவற்றிற்கு உரிய அத் தன்மைகளை உன்னுடையனவாகக் கருதி நின்றாய். நான் பிறந்தேன். நான் வளர்ந்தேன். நான் மெலிந்தேன். நான் பசித்தேன். நான் நோயுற்றேன் என்றெல்லாம் கருதுவது அறியாமையாகும். நீயோ சித்துப் பொருள். உனக்குத் தோற்றமேது! அழிவேது? சடமாகிய உடம்பு முதலியவற்றிற்கே இம் மாற்றங்கள் உண்டு. உனக்கு யாதொரு மாற்றமும் இல்லை. சித்தாகிய நீ சித்தாகிய சிவத்தைச் சேரவதே இயற்கை. எனவே உன் இனம் அல்லாத, சடப்பொருள் ஆகிய கருவிக் கூட்டங்களின் தொடர்பை விட்டொழிப்பாயாக. சிவத்தைச் சார்ந்து சிவத்தின் தன்மைகளை உன்னுடையனவாகப் பெற்று, வரம்பிலா இன்பத்தில் என்றும் ஒரு நிலையாய் இருப்பாயாக" என்று உபதேசிப்பார்.

மேற்கூறிய உபதேசத்தைக் கேட்ட மாணவர் மிகு சத்திநிபாதம் உடையவராயிருப்பின் அப்பொழுதே தன்னைக் கருவிகளின் வேறாகக் கண்டு, ஆன்ம தரிசனமும், ஆன்ம சுத்தியும் விரைவாக நிகழப்பெற்று, வேறு எவற்றிலும் பற்றில்லாதவராய், சிவபெருமானது திருவடி ஒன்றையே பற்றிக்கொண்டு ஆன்ம லாபம் ஆகிய பேரின்பத்தைப் பெறுவர்.

அதிதீவிர நிலையில் உள்ள இவர்களுக்குக் கேட்ட பொழுதே பாச நீக்கமும் சிவப்பேறும் உண்டாகி விடும். ஏனையோர்க்கு இந்நிலை உடனே வாய்ப்பதில்லை. அவர்கள் கேட்டலின் பின்னர் சிந்தித்தல், தெளிதல் என்ற படிநிலைகளில் சிலகாலம் நின்று முடிவில் சிவத்தைப்பெறுவர். அவர்களை நோக்கியே அறியும் நெறி முதலாக இனிவரும் அதிகாரங்களை அமைத்தார் ஆசிரியர் உமாபதிசிவம்.

*தன் கையே தனக்குதவி என்பவர்களுக்குத்தான் கடவுளும் உதவுகிறார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிந்தித்தல்:**

அறியும் நெறியாவது, ஞானாசிரியர் அறிவுறுத்திய அருள் மொழியின் பொருளைச் சிந்தித்து உணரும் முறையாகும். ஆசிரியரின் உபதேசத்தைப் பெற்று நான் யார்? என்பதைச் சிந்திக்கின்றபோது இந்த உடம்பு நானல்ல, ஐம்பொறிகள் நான் அல்ல. நாடி நரம்புகள் நானல்ல என இவ்வாறு கருவிகளை ஒவ்வொன்றாகக் கழித்துக் கொண்டு செல்லும் நிலை உண்டாகும். இவற்றுள் ஒரு பொருளையும் நான் எனக் கொள்ளுதல் கூடாமையால் உண்மையில் நான் யார் என்பதை அறியும் வேட்கை மேலும் எழும்.

இந்நிலையில், "நான் யார்?" என்னும் இந்த ஆராய்ச்சி அறிவு நமக்கு எப்படி உண்டாயிற்று? என்ற சிந்தனை வரும். இந்த ஆராய்ச்சியுணர்வு உடம்பின் அகத்தும் புறத்தும் உள்ள கருவிகளால் உண்டாகியிருத்தல் இயலாது. ஏனெனில், அக் கருவிகள் எல்லாம் புறப்பொருள்களைப் பற்றிய உணர்வைத் தருமேயன்றி மெய்யுணர்வைத் தரமாட்டா.

அவ்வாறாக, நான் யார் என்ற ஆராய்ச்சியுணர்வும், நான் இந்த உடம்பு முதலிய பொருள்களுள் எதுவும் அல்ல என்னும் துணிவுணர்வும் நமக்கு உண்டானது எவ்வாறு என்று ஆழ்ந்து நோக்கினால், நம்முடைய அறிவுக்கு அறிவாய் உள்நின்று அறிவிக்கும் பொருளே இந்த ஆராய்ச்சியறிவைத் தந்தது" என்பது புலனாகும். அவ்வாறு உள்நின்று அறிவித்தது பதியினது ஞானமாகிய திருவருளேயாகும்.

இங்ஙனம் சிந்திக்கும் முறையில் உயிர் தன் உள்ளாகத் திருவருளை உணர்ந்து பற்றும். ஆசிரியர் உரைத்த அறிவுரையின்படி, தற்போதமும் உலகப் பற்றும் இன்றி நிற்பின், உயிர் உணர்வில் அத்திருவருள் விளங்கி நிற்கும்.

மாணவனாகிய ஆன்மா திருவருளைப் பற்றும் நிலையையும், ஆசிரியர் அவனுக்கு அறிவுறுத்தும் பொருளையும் அறியும் நெறியாகிய இவ்வதிகாரத்தில் நாம் காணலாம். அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளவை:

இனி, இவ்வதிகாரத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை நோக்குவோம்.

அருளாசிரியர் தம்மை அணுகி வரும் மாணாக்கர் பலராக இருப்பினும் அவருள் தகுதி வாய்ந்தவர்க்கே உண்மையை உபதேசிப்பார். தகுதியாவது, உயிரின் கண் இருவினையொப்பு, மலபரிபாகம், சத்தி நிபாதம் என்னும் இவை நிகழப்பெறுதல்.

மல பரிபாகம் என்பது ஆணவ மலம் தேய்ந்து நீங்கும் நிலைமையை அடைதலாகும். மலத் தேய்வினால் உயிருக்கு உலக நாட்டம் நீங்கும். மல பரிபாகத்தின் அறிகுறியே இரு வினையொப்பு. இருவினை ஒப்பாவது நல்வினை தீவினைகளின் பயனாய்த் தனக்கு வருகின்ற இன்ப துன்பங்களை ஒப்பாக எண்ணி இரண்டிலும் விருப்பு வெறுப்பு அற்று இருத்தல்.

சத்திநிபாதம் என்பது இறைவனது மறைத்தற் சக்தி அருளாக மாறி உயிருணர்வில் பதிதல். இப்பக்குவம் வரப்பெற்றவரே பிறவித் துன்பத்தைத் தருவது என்பதை உணர்ந்து, அதற்கு அஞ்சி, வீடுபேற்றை அவாவி நிற்பர். அவருக்கே அருட்குரவர் ஞானத்தை உணர்த்துவார். அவருக்கே குருவினது உபதேசம் பயன் தருவதாகும்.

குருமுகமாக மாணவர் முதலில் அறியவேண்டுவது பொருள்களின் எண்ணிக்கை, அவற்றின் இயல்பு, அவற்றுக்கிடையே உள்ள தொடர்பு முதலியனவாகும். அம்முறையில், கடவுள், உயிர்கள், ஆணவம், கன்மம், சுத்த மாயை, அசுத்த மாயை என்னும் ஆறும் என்றும் உள்ள பொருள்கள் என்பதை அறிதல் வேண்டும்.

*மாணவர்களை மதிப்பதில்த்தான் கல்வியின் ரகசியம் அடங்கியுள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் இவை ஆறும் செய்வினை, செய்பவன், செய்வினையின் பயன், சேர்ப்பவன் என நான்காகத் தம்முள் தொடர்புற்று நிற்கும் முறையையும் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

இதற்குமேல் அறிய வேண்டுவது தனக்கும் திருவருளுக்கும் உள்ள தொடர் பாகும். திருவருள் உயிரிடத்து எப்போதும் பிரிப்பின்றி உடனாய் உள்ளது. உடம்பு வாழ்வதற்கு உயிர் வேண்டும். அதுபோல உயிரின் அறிவு, செயல்களுக்குத் திருவரு ளினது துணை எப்பொழுதும் வேண்டும்.

உயிர் பளிங்கு போன்றது. பளிங்கு தன்னருகில் உள்ள பொருள்களின் நிறங் களைப் பற்றி நிற்றலும் உண்டு. அவற்றைப் பற்றாமல் தன் ஒளியே விளங்கி நிற்றலும் உண்டு. பிற நிறங்களைப் பற்றி நிற்றல் பளிங்கிற்குப் பொதுவியல்பு. தன் ஒளியே விளங்கி நிற்றல் அதற்கு உண்மையியல்பு. இவ்விரண்டு இயல்பையும் பளிங்கிற்குத் தருவது சூரியவொளியேயாகும்.

உயிருக்கும் பொதுவியல்பு, உண்மை இயல்பு என இரண்டு இயல்புகள் உண்டு. ஐம்பொறிகள், மனம் முதலிய கருவிக் கூட்டங்களைச் சார்ந்து அவையேயாய் நிற் பது பொதுவியல்பு. கருவிகளைத் தனக்கு வேறாகக் கண்டு அவற்றின் நீங்கி வியாப கமாய் நிற்றல் உண்மையியல்பு. கட்டு நிலை யில் விளங்குவது பொதுவியல்பு. முத்தி நிலையில் விளங்குவது உண்மையியல்பு. கட்டுநிலையில் சிற்றறிவும், முத்தி நிலையில் வியாபக அறிவும் உண்டாகும். இவ்விரண்டு நிலைகளையும் தருவது திருவருளேயாகும். உயிரிடத்தில் பொது, உண்மை என்ற இவ் விரண்டு இயல்புகளையும் விளங்கச் செய் வது திருவருளேயாகும்.

ஞானாசிரியர் மாணவனுக்கு இவ் வாறு திருவருள் உண்மையை உணர்த்து வார். அதனைக் கேட்ட காலத்தில் திருவரு ளைப் பற்றிய உணர்வு ஆன்மாவிடத்தில் பொதுவாக நிகழும். பின்னர் அதனைச் சிந்திக்கின்றபோது திருவருளைப்பற்றிய உணர்வு ஐயமாக நிகழும். ஐயவுணர்வு என்பது, உலகியலை விட முடியாத நிலை யாகவும், திருவருளை உறுதியாகப் பற்ற மாட்டாத நிலையாகவும் இருக்கும். கயிறு முற்றிலும் அறாமல், அறுந்து விழும் நிலை யில் உள்ள ஊசற்பலகையை இங்கு ஒப்பிட லாம். அப்பலகையின் நிலை எப்படியிருக் கும்? அது கயிற்றிலும் உறுதியாக நில் லாது; தரையிலும் விழாது. அதுபோலத் திருவருளையும் சாராமல், உலகியலிலும் நில்லாமல் அங்கும் இங்குமாய் அலமரும் நிலையே இந்த இடைப்பட்ட ஐயநிலை என லாம். எல்லாம் திருவருட் செயல் என்பதை உணர்ந்தாலும் "என் செயல்" என்ற உணர்வை விட இயலாது. "நான்" என்று எழும் தற் போதத்தை நீக்கிக் கொள்ள இயலாது.

இந்நிலையில் அருட்குரவர் உடன் இருந்து மாணவனைத் தெளிவிப்பார். "ஐம் பொறிகளின் செயல் எப்படி உன் செயல் ஆகின்றதோ, அப்படியே உன் செயல் யாவும் திருவருட் செயலேயாகும்" என்று காட்டுவார். கருவிகளால் வருவதாகிய பாச ஞானத்தை விடுத்துத் திருவருள் ஞானத்தையே உனது ஞானமாகக் கொண்டு காண்பாயாக எனவும், அந்த அருள் ஞானமே கண்ணாக முதற் பொருளைக் கண்டு அதில் அழுந்தி விடு வாயாக எனவும் அறிவுறுத்துவார்.

மேற்கூறிய பொருள் நிலையைக் கருத்திற்கொண்டு இனி அதிகாரத்துட் புகு வோம். (தொடரும்...

*அறியாமையிலிருந்தே பயம் தோன்றுகின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் எங்கே வாழ்கிறார்

– திரு கு. சிவபாலராஜா அவர்கள் –

சிலர் நினைப்பதுபோல் கடவுள் வெகு தூரத்தில் இல்லை. அல்லது விண்ணகத்தில் வாழவில்லை. கோவில்களில் மட்டும்தான் வாழ்கின்றார் என்பதுவும் இல்லை. கடவுள் எங்கும் சர்வ வியாபகமாய் நிறைந்துள்ளார் என்பதே உண்மை. கடவுள் நம் சூழலில் வாழ்கிறார். மிக அண்மையில் வாழ்கிறார். நமக்கு மிக அண்மையில் வாழும் கடவுளை நாம் சத்தமிட்டு அழைப்போமானால் அவர் உடனே வந்து நம் முன்னே தோன்றுவார். ஆனால் நாம் அவ்வாறு சத்தமிட்டு அவரை அழைப்பதில்லை. ஓலமிடுவதன் நோக்கம் நமது துயர் களையவே. இறைவனை நோக்கிய ஓலம் பெறுமதிமிக்கவை.



“வாரணம் அரற்ற வந்து கராவுயிர் காத்த பெருமான்” விஷ்ணு என்பது நாம் அறிந்த கதை. யானை தண்ணீர் குடிப்பதற்கு குளத்தில் இறங்கியது. பதுங்கியிருந்த ஓர் முதலை யானையின் கால்களைக் கௌவிக் கொண்டது. யானையால் வலி தாங்க முடியவில்லை. உடனே யானை “ஆதிமூலமே” என ஓலமிட்டு அலறியது. விஷ்ணு பகவான் உடனே அங்கு தோன்றி முதலையிடமிருந்து யானையை மீட்டார். யானையின் அழைப்பு அவர் செவிகளில் வீழ்ந்தது.

மகாபாரதத்தில் ஒரு காட்சி பற்றி நாம் அறிந்துள்ளோம். அரச சபை நடுவே திரௌபதை துகில் உரியப்படும்போது அங்கு கிருஷ்ண பகவான் தனது கருணையைக் காட்டி நின்றார். துச்சாதனன் திரௌபதையின் துகிலை உரிந்த போது, அவள் கண்ணனை நினைத்து, “கண்ணா, பரந்தாமா என்னைக் காப்பாற்று” என்று ஓலமிட்டபோது அவளின் துகில் வளர்கின்றது. வளர்ந்து கொண்டே செல்கின்றது. துச்சாதனன் மயங்கி வீழ்கின்றான். முடியவில்லை. திரௌபதையின் குரல் கண்ணபிரானின் காதுகளில் வீழ்ந்த அற்புதம் கண்டோம்.

இனி சீர்காழியை நோக்குவோம். அங்கு வாழ்ந்த சிவபாதவிருதையர் ஓர் பிராமணர். அவர் தனது மூன்று வயதுப் பிள்ளையையும் அழைத்துக்கொண்டு திருக்குளத்தில் நீராடச் சென்றார். பிள்ளையைக் குளக்கரையிலே அமர வைத்துவிட்டு, தந்தை குளத்தில் இறங்கி

உயர்ந்த பண்புக்கு அடிப்படை சிறுசிறு தியாகங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரில் மூழ்குகிறார். தன் தந்தையைக் காணாத பிள்ளை "அம்மையே அப்பா..." என இறைவனை நோக்கி அழுகிறது. சிவனும் - உமையும் இடபாரூடராக அங்கு தோன்றினர். உமை தனது திருமுலைப் பாலை சம்பந்தருக்கு ஊட்டியருளினார். இதிலிருந்து எமக்குப் புலப்படுவது என்ன? நாம் எங்கு செல்லினும் இறைவனும் நம்மோடு கூடவே வருகிறார். நாம் கூவி அழைத்ததும் உடனேயே அங்கு தோன்றி அருட்கரம் நீட்டுவார் என்பதேயாகும்.

இறைவன் பிட்டுக்கு மண் சுமந்த கதை அனைவரும் அறிந்ததே. வந்தி என்னும் மூதாட்டியின் வேண்டுதலுக்காக இறைவன் கூலியாளாக வந்து - மண் சுமந்து- பிரம்படி பட்டதுடன், செம்மனைச் செல்வியின் பக்தியின் மேன்மையையும் உலகறியச் செய்தார்.

"இறைவன் தூணிலும் இருப்பார்; துரும்பிலும் இருப்பார்" என சிவ பக்தர்கள் முன்னே கூறியிருப்பது எத்துணை உண்மையானது என்பதை நாம் உணர்வோமாக.

---

## காப்பியின் சுவையை அனுபவியுங்கள்

தற்போது நல்ல நிலையிலிருக்கும் சில மூத்த மாணவர்கள் ஒன்றாகச் சேர்ந்து தாங்கள் படித்த பல்கலைக்கழகத்தின் பேராசிரியரைச் சந்திக்கச் சென்றனர். சந்திப்பின்போது சுவாரஸ்யமாக சென்றுகொண்டிருந்த உரையாடல் திடீரென்று வேலை மற்றும் வாழ்க்கையில் ஏற்படும் மன அழுத்தம்பற்றிய விவாதமாக மாறியது.

வந்தவர்களுக்கு காப்பி கொடுக்க சமையலறைக்குச் சென்ற பேராசிரியர் திரும்ப வரும்போது ஒரு பெரிய கூஜாவில் காப்பியையும் பலவிதமான கோப்பைகளையும் எடுத்து வந்தார். அவை பீங்கான், பிளாஸ்டிக், வெள்ளி, எவர்சில்வர், கண்ணாடிக் கோப்பையென சில விலை உயர்ந்தவைகளாகவும், வேலைப்பாடுகளுடனும் சில சாதாரணமாகவும் பல விதங்களில் இருந்தன. பேராசிரியர் அவற்றை மேஜைமீது வைத்துவிட்டு, எல்லோரையும் சூடான காப்பியை தாங்களாகவே ஊற்றிக் குடிக்கச் சொன்னார்.

எல்லோரும் ஆளுக்கொரு கோப்பையில் காப்பியை ஊற்றி அருந்தத் தொடங்கும்போது பேராசிரியர் சொன்னார், "நண்பர்களே! கவனியுங்கள், "நீங்கள் எல்லோரும் விலை உயர்ந்த அழகான கோப்பைகளில் காப்பியை எடுத்திருக்கிறீர்கள். மேஜையில் மீதி இருப்பது மிக சாதாரணமான, விலைமதிப்பற்ற கோப்பைகள். உங்கள் அனைவருக்கும் மிகச் சிறந்த பொருட்கள்தான் தேவைப்படுகின்றன. அதைத்தான் எதிர்பார்க்கிறீர்கள். அதுதான் உங்கள் பிரச்சினைகளுக்கும் மன அழுத்தத்திற்கும் காரணம்".

"உண்மையில் நம் அனைவருக்கும் வேண்டியது காப்பி; கோப்பையல்ல. ஆனால் நீங்கள் எல்லோரும் நல்ல விலையுயர்ந்த கோப்பையைத்தான் எடுக்க முயற்சித்தீர்கள், மேலும் அடுத்தவர் எப்படிப்பட்ட கோப்பையை எடுத்திருக்கிறார் என்பதையும் நோட்ட மிட்டீர்கள்". "இப்பொழுது வாழ்க்கை என்பதை காப்பி என்று வைத்துக்கொண்டால் வேலை, பணம், சமூகத்தில் நமக்குள்ள பொறுப்பு, அந்தஸ்து ஆகியவை கோப்பைகள். இவை எல்லாம் வாழ்க்கையை வாழ்வதற்காக நம்மால் பயன்படுத்தப்படும் கருவிகள். இவற்றால் எல்லாம் வாழ்க்கையின் தரம் மாறாது.

"பொதுவாக நாம் கோப்பையின் மீதே கவனம் வைப்பதால் காப்பியின் சுவையை அனுபவிக்காமல் போய்விடுகிறோம்." "ஆகவே நண்பர்களே கோப்பையில் உங்கள் கவனத்தைச் சிதறவிடாமல் காப்பியின் சுவையை அனுபவியுங்கள்".

*சொர்க்கம் என்பது ஒழுக்கம் என்பதைத் தவிர வேறு ஏதோ அன்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதுர நீதி

(தொடர்ச்சி....

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

## மனிதனைப் பிரகாசிக்கச் செய்பவை

நல்ல அறிவுடைமை, நல்ல குணம், கல்வி, புலனடக்கம், வல்லமை, அதிகமாகப் பேசாமை, சக்திக்குத் தகுந்தபடி தானம் செய்வது, நன்றி அறிதல் என்னும் எட்டுக் குணங் களும் மனிதனைப் பிரகாசிக்கச் செய்கிறது.

மிகுந்த மகிமை கொண்ட இந்தக் குணங்களிடம் மற்றொரு குணம் பிடிவாதமாகச் சேருகிறது. அதாவது, எப்போது மன்னன், ஒருவனை உபசரிக்கிறானோ, அப்போது ராஜ உபசாரம் என்னும் குணம், அவனிடம் எல்லாக் குணங்களையும்விட மேலோங்கி நிற்கிறது. (மேலே குறிப்பிட்ட எட்டுக் குணங்களும் கொண்டவன் மன்னனாலும் மதிக்கப்பெற்று புகழைப் பெறுவான் என்பதே கருத்து.)

## அடைபவைகள்

பலம், வடிவம், இனிமையான குரல், தெளிவான உச்சரிப்பு, மென்மை, நல்ல வாசனை, புனிதத் தன்மை, பிரகாசம், அழகு, சிறந்தவர்களான பெண்கள்- என்னும் இந்தப் பத்தும் தவறாமல் தினந்தோறும் குளிப்பவனை அடைகின்றன.

ஆரோக்கியம், ஆயுள், பலம், சுகம், அழகான குழந்தைகள், பெருந்தீனிக்காரன் என்ற கெட்ட பெயர் இல்லாமை எனும் இந்த ஆறு குணங்களும், அளவோடு சாப்பிடுபவனை அடைகின்றன.

## தங்க வைக்காதே

தீய செயல்கள் செய்வதையே இயல்பாக உடையவன், பெருந்தீனிக்காரன், எல்லோருடனும் பகை கொள்பவன், பலவிதமான வஞ்சனைகளை உடையவன், இம்சை செய்பவன், காலம் இடம் இவைகளின் தன்மைகளை அறியாதவன், பழிக்கத் தகுந்த வேடம் உடையவன்- முதலியவர்களை ஒருபோதும் வீட்டில் தங்க வைக்கக்கூடாது.

## உதவியை நாடாதே

கருமி, திட்டுகின்றவன், முட்டாள், காட்டில் வசிப்பவன், சூதாடுபவன், தீயவர்களை மதிப்பவன், இரக்கமில்லாதவன், விரோதம் பாராட்டுகின்றவன், நன்றி இல்லாதவன்- முதலிய வர்களின் உதவியை என்னதான் வறுமை வந்தாலும் நாடக்கூடாது.

## இவர்களிடம் வேலை பார்க்காதே

துயரம் தரும் செயலைச் செய்பவன், மிகவும் அஜாக்கிரதையாக இருப்பவன், எப்போதும் பொய் சொல்பவன், உறுதியான அன்பு இல்லாதவன், நட்பை மதிக்காதவன்,

*ஒரு கணத்தில் இழந்த மானத்தை ஓராயிரம் ஆண்டுகளானாலும் பெற்றுவிட முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைச் சாமர்த்தியசாலியாக நினைப்பவன்- இந்த ஆறு பேர்களும் மோசமானவர்கள். இவர்களிடம் வேலை செய்யக் கூடாது.

**காரியசித்தி**

பணத்தை அடைய அடுத்தவர்களின் உதவியை நாடவேண்டி இருக்கிறது. நமக்கு உதவி செய்யக்கூடிய அடுத்தவர்களோ பணத்தை நாடுபவர்களாக இருக்கிறார்கள். இவை இரண்டும், ஒன்றை ஒன்று சார்ந்தே இருக்கின்றன. இந்த இரண்டும் ஒத்துவந்தால்த்தான் காரிய சித்தி உண்டாகும்.

**எப்போது முனிவராக வேண்டும்?**

பிள்ளைகளைப் பெற்று, அவர்களைக் கடன் இல்லாதவர்களாகச் செய்து, ஒரு தொழிலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பெண்ணாக இருந்தால், சரியான இடங்களில் திருமணம் செய்துகொடுத்துவிட்டு, அதன் பிறகு காட்டிலிருந்துகொண்டு முனிவராக வாழ்க்கை நடத்த விரும்ப வேண்டும்.

எல்லாப் பிராணிகளுக்கும் நன்மை தருவதாகவும், தனக்குச் சுகத்தைத் தருவதாகவும் உள்ளது எதுவோ அதையே, சக்தி உள்ளவன் செய்ய வேண்டும். எல்லாவிதமான காரிய சித்திக்கும் இதுவே மூலம்.

**பயம் கிடையாது**

செல்வச் செழிப்பு, பகை வெல்லப் பெரும் முயற்சி, சாத்வீக குணம், உறுதி, பராக்கிரமம்- முதலியவைகள் உள்ள மனிதனுக்கு "பிழைப்பு இல்லையே" என்ற பயம் உண்டாகாது.

**காடுகளை வெட்டாதீர்கள்**

மன்னா! பாண்டவர்களோடு போரிடுவதால், என்னென்ன விளைவுகள் உண்டாகும் என்பதை ஆராய்ந்து பாருங்கள். இந்திராதி தேவர்களும் பாண்டவர்களை எதிர்க்க முடியாது. இது இல்லாமல், பிள்ளைகள் ஒருவருக்கொருவர் விரோதம் என்னும் சஞ்சலம் மிகுந்த வாழ்க்கை, புகழுக்குக் கெடுதல்; நமது பகைவர்களுக்குக் கொண்டாட்டம், இத்தனையும் ஏற்படுகின்றன.

ஆகாயத்தின் குறுக்கே வால் நட்சத்திரம் தோன்றியதைப்போல, உலகம் எங்கும் அமைதியின்மையும் துயரமும் தென்படுகின்றன. உங்களுடையதும், பீஷ்மர், துரோணர், தர்மர் முதலானவர்களுடையதுமான வளர்ந்து வரும் கோபமும் இந்த உலகை முழுதும் அழிக்கக் கூடியதாகும்.

உங்கள் பிள்ளைகள் நூறுபேரும், கர்ணன், பாண்டவர் ஐவர் முதலானவர்களும் ஒன்று சேர்ந்தால் கடல் சூழ்ந்த மண்ணுலகம் முழுவதையுமே ஆளலாம்.

உங்கள் பிள்ளைகள் காடுபோன்றவர்கள். பாண்டவர்கள் அந்தக் காட்டில் வாழும் புலிகளைப் போன்றவர்கள். மிருகங்களுடன் கூடிய காட்டை வெட்டாதீர்கள். காட்டைவிட்டு

*கேள்வி கேட்கத் தெரிந்தாலே பாதி தெரிந்துகொண்டதாக அர்த்தம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருகங்களும் நாசத்தை அடைய வேண்டாம். மிருகங்கள் இல்லாவிட்டால் காடு இருக்காது. காடு இல்லாவிட்டால் மிருகங்கள் இருக்காது. காடு மிருகங்களால் காக்கப்படுகிறது. மிரு கங்கள் காட்டினால் காப்பாற்றப்படுகின்றன.

பாவ புத்தியுள்ளவர்கள் அடுத்தவர் களின் கெட்டகுணத்தை அறிய விரும்புவதைப் போல, அடுத்தவர்களின் நல்ல குணத்தை அறிந்துகொள்ள விரும்புவதில்லை. பெரிய காரிய சித்தியை விரும்பும் மனிதன், முத லில் தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். சொர்க்கத்திலிருந்து அமிர்தம் விலகாமல் இருப்பதுபோல தர்மத்திலிருந்து பொரு ளானது விலகுவதில்லை. பாவத்திலிருந்து விலகி நல்ல காரியங்களில் ஈடுபடும்படியாக எவன் மனமானது செயற்படுகின்றதோ அவன், உலகில் காரணம், காரியம் முதலியவைகளை நன்றாக அறிந்து கொள்கிறான்.

தோள் பலம், நல்லதைச் சொல்லி இடித்துத் திருத்துபவர்களின் நட்பு, செல்வம், மூதாதையர்களின் வழியாக இயற்கையாக வந்ததான நல்ல குடிப்பிறப்பு, பலன்களி லேயே மிகவும் சிறந்ததான அறிவின் பலம்- இவைகள் எந்தக் காலத்திலும் மனிதனுக்கு இருக்க வேண்டிய ஐந்து பலன்கள் ஆகும்.

பெண்கள், அரசர்கள் (ஆட்சியாளர் கள்), பாம்புகள் பயிலும் வேதங்கள், (திரும் பத் திரும்பச் சொல்லாவிட்டால் மறந்து விடும் வேதங்கள்) திறமை மிகுந்த பணக்காரர்கள், விரோதிகள், சுக அனுபவம், ஆயுள் முதலி யவைகளில் அறிவாளி நம்பிக்கை வைக்க மாட்டான்.

பகைவனுடைய அறிவு என்னும் அம்பினால் அடிபட்டவனுக்கு மருத்துவர்கள் இல்லை; மருந்தும் இல்லை. இவனைச் சாந்தப்படுத்த எந்த மந்திரங்களும் இல்லை; யாகம் செய்வதற்கும் வழியில்லை. அதர் வண வேதத்திலுள்ள அபிச்சார மந்திரங்கள் இல்லை. சித்தியைத் தரும் ரசகுளிகைகளும் இல்லை. நன்மையை உண்டாக்கக்கூடிய எதுவும் இல்லை.

பாம்பு, நெருப்பு, சிங்கம், நல்ல குலத் தில் தோன்றிய பிள்ளைகள் முதலான வற்றை மனிதன் அவமதிக்கக்கூடாது.

அனைத்தையும் சுட்டுப்பொசுக்கும் நெருப்பு, தீக்கடைக் கோலில் மறைந்து இருக்கிறது. (முன்னைய காலத்தில் நெருப்பை உண்டாக்கக் கூடிய கற்கள், தடிகள், தீக் கடைக்கோல் எனப்பட்டது.) அந்தத் தீக் கடைக் கோலைக் கடையாதவரை (ஒன் றுடன் ஒன்று உரசுதல்) தீ உண்டாவ தில்லை. இதனால் எந்தத் தீமையும் விளை யாது. ஆனால் தீக்கடைக் கோலை உரசி னால், அதிலிருந்து உண்டான நெருப்பு, தீக்கடைக் கோலையும் அதோடு சேர்ந்த காட்டையும் எரித்துவிடும். (சில கற்கள் வெப் பத்தை உறிஞ்சி சூடாகக் கூடியன. இதன் வெப்பநிலையில் சருகுகள் தீப்பற்றிக் கொள்ளும். இத்தகைய கற்கள் நெருப்புக் கற்கள் எனக் கூறப்படும்.)

நல்ல குலத்தில் தோன்றிய பாண்ட வர்கள் இப்போது பொறுமையாக இருக்கிறார் கள். அவர்களை விரோதித்துக் கொண்டால், உங்கள் பிள்ளைகளும் அவர்களுடன் சேர்ந் தவர்களும் அழிந்து விடுவார்கள் என்பது நிச்சயம்.

உங்கள் பிள்ளைகளும், நீங்களும் கொடிக்குச் சமமானவர்கள். பாண்டவர்கள், பெரிய சால மரத்துக்குச் சமமானவர்கள். பெரிய மரத்தின் பற்றுக்கோடில்லாமல் எப் படிக் கொடிகள் வாழமுடியாதோ, அதுபோல பாண்டவர்களோடு சேர்ந்திருந்தாலொழிய நீங்களும் உங்கள் பிள்ளைகளும் தனியாக வாழமுடியாது.

மன்னா! உங்கள் பிள்ளைகள் ஒரு காடு போன்றவர்கள். பாண்டவர்கள் அந்தக்

*உழைப்பிற்கு ஓர் உதாரணம் எறும்பு. மற்றொன்று இதயம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டில் வாழும் சிங்கம் போன்றவர்கள் என் பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். சிங்கங்கள் இல்லாவிட்டால் காடு அழிந்து போகும். காடு இல்லாவிட்டால் சிங்கங்களும் அழிந்துபோகும். இதை, “வன சிம்ம நியாயம்” என்று சொல்வார்கள்.

(தொடரும்...

## ஆற்றிடைதவழும் வேலின் அருளமுதூற்று சந்நிதியே

பிள்ளை மதிப் பெருமான் திருவடியே
உள்ளு மலர்கட் குறாத பொருளுண்டோ
மெள்ள நறுநெய் விளைந்து விளக்குந் திருவடியை
கள்ள வெங்கானும் கடலும் காந்ததன்றோ!

ஆவில் தோன்றியமர்ந்த அமலன் திருவடியை
ஏத்து பவர்கிசையான பொருளேது முண்டோ
சாத்திய வில்வம் தனக்குத்தளர் மோகனின் பதம்
முத்தவறிவதனான மேன்மை முத்தி கண்டதுவே!

பேயினத் தோடாடும் பெம்மான் திருவடியினை
கண்ணுற்றுத் தாழ்வோர்கள் காணாத பொருளுண்டோ
வாயிழையால் வலைதூண்டி கோவில் வகுத்த
தூயகுலக்கதிர் காமர் தொல்லுலகச் சந்நிதியே!

அச்சமும் அன்பும் தோன்ற யடியினைப் பணிந்து சூழ்வோர்
உச்சியில் கரங்களேற யொளிவிழி யருவி தாழ
விச்சுவ செந்தில் வேல் பெருமான்தன்னைக் கண்டு
முச்சகம் முழுதும் போற்றும் முதல்வனைத் துதிக்கின்றோமே!

வேலே வேத காரணமும் நீ வேதமோர்நான்கும் நீ
அருள் பாதமோர் நான்கும்நீ பதங்களோர் நான்கும் நீ
அலையொளி அறுபடை புவனகாரணமும் நீயே!
நாதநின் நற்கடாட்சப் பொருளினை நவிலவல்லார் யாவர்வேலா!

ஏகன்நீ அனேகன் நீயிருளும்நீ செந்திலொளியும் நீ!
போகிநீ யோகிநீ புலவரெலாம்புகழ் முனிபுங்கவரும்நீ யாதியீசனும் நீயே!
சாகரமேழும் நீ தடங்கமழ் முத்துயர் தொண்டையாறும் நீ!
மோகனன் நீ நின்ஞான மலர்ப்பத முணரவல் லோமல்லவே வேலவனே!

-க. தெய்வேந்திரம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லின் செல்வன் ஆஞ்சநேயர்

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள் –

"மாதங்களில் நான் மார்கழி" என்ற கீதாச்சாரியனுக்குரிய மாதமான மார்கழியை வரவேற்பது நமது கடமையாகும். அச்சுதன், அனந்தன் என்று போற்றும் திருநாமங்களுள் 12 திருநாமங்கள் உயர்வானவை. கேசவா, நாராயணா, மாதவா, கோவிந்தா, விஷ்ணு, மதுசூதனா, திரிவிக்ரமா, வாமனா, ஸ்ரீதரா, இருஷிகேஷா, பத்மநாபா, தமோதரா எனும் நாமங்கள் தமிழ் மாதங்களின் பெயர்களால் வழங்குகிறது. அதில் முதன்மை யான "கேசவ" எனும் திருநாமத்தை தாங்கியிருப்பது மார்கழி மாதமாகும். தேவாதி தேவர்கள் துயிலெழும் வேளையாகிய இம் மார்கழியில் நாமும் அதிகாலையில் துயிலெழுந்து நீராடி இறைவனைப் பாடிப் பரவிப் பணிந்து வணங்கினால் சகல சௌபாக்கியங்களும் கிட்டும்.



நாடிவரும் பக்தர்களுக்கு கோடிவரம் அருளும் ஆஞ்சநேயர் ஜெயந்தியும் மார்கழியில்த்தான். "ஸ்ரீ ராம ஜெயம்" எனும் தாரக மந்திரம் சொன்னவுடன் எம்மருகே வந்து எமை ஆட்கொள்ளும் அற்புதக் கடவுள் ஸ்ரீ ராம தூதன் ஆஞ்சநேயர்.

**"அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத்தாவி**
**அஞ்சிலே ஒன்று ஆறாக ஆரியர்க்காக ஏகி**
**அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டயலாளூரில்**
**அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் நம்மை அளித்துக் காப்பான்"**

தேவலோகத்துப் பெண்ணாகிய அகலிகை மானிட ராகிய கௌதம முனிவரை விரும்பித் திருமணஞ் செய் தாள். அவர்களுக்குத் தெய்வாம்சம் கூடிய "அஞ்சனை" மகளாகப் பிறந்தாள். சிவபெருமான், கௌதம முனி வருக்கு, "உமக்குப் பிறந்த அஞ்சனை ஓர் அபூர்வக் குழந்தை. சிலகாலம் உம்மிடம் வளர்வாள். குஞ்சரன் எனும் வானரவீரன் அவளை வளர்க்க முன்வருவான். (அகலிகை சாபமேற்பட்டு கற்சிலையாக மாறுவாள்). இந்த அஞ்சனை மூலம் சிவ அம்சம் பொருந்திய ஆண்மகன் பிறப்பான். "ஆஞ்சநேயன்" என்ற திருநாமம் வைக்கப்படும். ஆஞ்ச நேயன்தான் நான். நான்தான் ஆஞ்சநேயன். அவன் புகழ் ஏழுலகமும் ஜென்மாதி ஜென்மமாக ஒலிக்கும். அவனைத் தொழுதவர்க்கு ஆனந்தம் கிடைக்கும். சர்வ வல்லமையை உடைய ஆஞ்சநேயனைப் பெறுகிற பெருமையை உம்

*வாழ்க்கை அனுபவமில்லாத எவரும் கல்வி கற்றவராக முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளுக்குத் தந்தோம்'' என்றார். கௌதம முனிவர், சிவபெருமானை நோக்கிச் செய்த கடும் தவத்திற்கு மகிழ்ந்து, கௌதம முனிவரின் வம்சாவளியில் தானும் பிறக்கவேண்டும். பூமியெங்கும் சிவபக்தி பெருக வேண்டும் என்று ஆசைப்பட்டார். அவர் சொன்னது அஞ்சனைமூலம் நிறைவேறியது. அவர்தான் வாயுபுதல்வன் ஸ்ரீ ராமபக்த அனுமான்.

இராம சேவைக்கென்றே அவதரித்தவர். மார்கழி மாத அமாவாசையில் மூல நட்சத்திரத்தில் அருணோதயத்தில் அவதரித்தார். கருணையின் இலக்கணமாக, அன்பின் சொருபமாகத் திகழும் ஸ்ரீ ஆஞ்சநேயப் பெருமான் அச்சத்தைப் போக்குகின்ற பலவான். மகா பராக்கிரமசாலி. ஆபத்துக்களை நீக்குகின்ற ஆபத்பாந்தவர். பகைவர்களை ஓட, ஓட விரட்டுகின்ற ஒப்பிலா வீரன். துயர்களையும், பாவங்களையும், தோஷங்களையும் ஒழித்து நிம்மதியையும், மகிழ்ச்சியையும், சிறப்புக்களையும் அருளுகின்ற வீர மாருதி. அவரின் சக்தியும், அருட் திறமையும் அனந்தம். எல்லாயுகத்திலும் வாழும் சிரஞ்சீவி. கருணை வள்ளல். அவரைத் தஞ்சமடைந்தால் துன்பங்கள் அண்டாது. ஆஞ்சநேயர், மாருதி, அநுமன், ராமதூதுவன் எனப் பல நாமங்களால் போற்றப்படுபவர். சஞ்சீவி மலையைச் சுமந்தவன்.

எங்கெல்லாம் இராமாயணம் ஓதப்படுகிறதோ, எங்கெல்லாம் ராம நாமம் ஒலிக்கிறதோ அங்கெல்லாம் ஆஞ்சநேயப் பெருமான் பிரசன்னமாயிருந்து தலையிலே கை கூப்பி ஆனந்தக் கண்ணீர் சொரிய தியானத்தில் இருப்பர். நல்லறிவு, தேகபலம், புகழ், தைரியம், பயமின்மை, நோயற்ற வாழ்வு, சோம்பலின்மை, வாக்குவன்மை ஆகிய எட்டு நன்மைகளையும் தன்னைத் துதிப்பவர்களுக்கு அருளுவார். சீதாபிராட்டியாரின் வியாகுலத்தைத் தீர்த்தவர். சீதையால், "என்றுஞ் சிரஞ்சீவியாய் இரு" என்று வெற்றிலையால் ஆசீர்வதிக்கப்பட்டவர். அழிவற்ற சிரஞ்சீவி சதா சர்வகாலமும் ஸ்ரீ ராம நாம ஆனந்தத்தில் மூழ்கியிருப்பவர். அடக்கமே அணிகலனாகக் கொண்டவர். கம்பரினால், "சொல்லின் செல்வன்" என்று போற்றப்பட்டவர். பஞ்ச பூதங்களை வென்றவர். பஞ்சேந்திரியங்களை வசப்படுத்தியவர்.

ஆஞ்சநேயரும் ஸ்ரீ கிருஷ்ணரும் தூது போனவர்கள். ஆஞ்சநேயர் ஸ்ரீ ராம தூதுவனாக இராவணனிடம் போனார். கிருஷ்ணர் பாண்டவர் தூதனாகத் துரியோதனனிடம் போனார். இருவரும் விஸ்வரூபம் எடுத்தவர்கள். ஆஞ்சநேயர் சஞ்சீவி மலையையும், கிருஷ்ணர் கோவர்த்தன மலையையும் தூக்கினர். இவரது அனுக்கிரகத்தைப் பெற "ராம" என்ற தாரக மந்திரம் ஒன்றே போதும். "ராம" என்ற சொல்லுக்கு ரமிக்கச் செய்பவன் என்று அர்த்தம். ரமித்தல்- மயங்குதல். ராம நாமம் நம்முடைய துக்கங்களைப் போக்கி மனதிற்குச் சாந்தி அளிக்கும். "ராமேதி ராமா" ஆனந்தத்தை எல்லாம் அளிப்பவன் ஸ்ரீ ராமன். ராம நாமம் விஷ்ணு சிவ அம்சங்களைக் கொண்டது. தாரக மந்திரம் எனப்படும். கலியுகத்தில் காத்தருளும் "ராம நாமம்" ஸம்ஸார சமுத்திரத்திலிருந்து கரை சேர்ப்பது. ராம நாமத்தால் பாவம் அகலும். வறுமை, பிணி நீங்கும். நல்வாழ்வு அமையும். ஜனன, மரணமில்லாப் பெருவாழ்வு கிட்டும். மனத்தாலும், சொல்லாலும், செயலாலும் செய்த பாவங்கள் "ஸ்ரீராம்" என நினைக்க விலகும். காசியில் ஸ்ரீ பரமேஸ்வரன் "ராம" நாம மகா மந்திரத்தைத்தான் அந்திய காலத்தில் காதில் உபதேசித்து "முத்தி" அடையச் செய்கிறார் என ஆதிசங்கரர் கூறுகிறார். அந்த ராம நாமத்திலே மூழ்கி ஆனந்தமாக தியானத்திலே இருப்பவர் ராம சேவைக்கென்றே தன்னை அர்ப்பணித்த ராம

*ஒழுக்கம் உண்டாக்காத இலக்கியக் கல்வியால் ஒருவித உபயோகமும் கிடையாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூதுவன் ஸ்ரீ ஆஞ்சநேயப் பெருமான். "ரூப சௌந்தர்யம், குண சௌந்தர்யம்" இரண்டாலும் அண்ட சராசரங்கள் அனைத்தையும் தன்னிடம் ரமிக்கச் செய்தது ராமப் பிரம்மம்.

"துன்பினைத் துடைத்து மாயத் தொல்வினை தன்னை நீக்கித்
தென் புலத்தன்றி மீளா நெறிஉய்க்கும் தேவரோதான்
என்பெனக்குருகு கின்றது இவர்கின்றது அளவில் காதல்
அன்பினுக் கவதியில்லை அடைவன் கொல்? அறிதல் தேற்றேன்!"

ராம பிரம்மத்தை முதல் முதலில் தரிசிக்கப்பெற்ற அநுமன் ரமித்து (மயங்கி) நின்றது இப்பாடல்.

ஸ்ரீ ஆஞ்சநேயர் தொண்டனாகவும், பக்தனாகவும், வீரனாகவும் ராமருக்குத் தொண்டு புரிந்துகொண்டு சதா சர்வகாலமும் அவரையே சிந்தித்து சீதாப்பிராட்டியாருடைய ஆசியினாலே இன்றும் சிரஞ்சீவியாக வாழ்கிறார். கையை எப்பவும் கூப்பியபடி காட்சி நல்கும் காருண்ய மூர்த்தி. ஐம்புலன்களையும் அடக்கியொடுக்கி ஆசை உணர்வுகள் துறந்தவன். உத்தமி சீதை விழிநீர் துடைத்து, வியாகுலம் தீர்த்த வித்தகன். மாருதி பெயரை மனனம் செய்பவர் மன இருள் தீரும். மங்கலம் சேரும். அவன் அருட்பார்வை பட்டாலே போதும். அஞ்சனை மைந்தனை, அஞ்சா நெஞ்சுரங்கொண்ட அநுமனை, சீதை சிறை மீட்ட செல்வனை, கதா யுதம் கையிலேந்திய கடமை வீரனை, ராம நாமத்தினால் மகிழ்வு கொள்பவனை, வெற்றி தரும் வீர மாருதியை, பிரம்மச்சாரியை, வாயுபுத்திரனை அவருக்குப் பிடித்த வெண்ணெய் சாத்தி, வடைமாலை, வெற்றிலை மாலையிட்டு, ராம நாம தியானத்தில் ஈடுபட்டு, "ஸ்ரீ ராம ஜெயம்" மகா மந்திரம் ஓதி, எல்லா வெற்றிகளையும், மங்களங்களையும் அளிக்கும்படி வேண்டி, அவரின் திருவருட் கடாட்சம் பெற்றுய்வோமாக.

---

## சாயி சிந்தனை

* எண்ணங்களுக்கேற்பவே ஒருவரது செயல்கள் அமைகிறது. எண்ணமே நல்ல, தீய செயல்களைச் செய்வதற்கு தூண்டுதலாக இருக்கின்றது. நீர்ப்பரப்பில் ஒரு கல்லைப் போடுகிறீர்கள். கல் விழும் இடத்தில் அலைகள் தோன்றி அப்படியே பரவி கரை வரையில் பெரிதாகிப் பின் மறைகிறது. அதைப்போலவே எண்ணத்தில் கல்போல விழும் தீய சிந்தனையே, அலைபோல உடல் முழுவதும் பரவுகிறது. அந்த எண்ணம் கண்களை அடையும்போது, தீயவற்றைப் பார்க்கிறது. கைகளை அடையும்போது தீய செயல்களைச் செய்கிறது. கால்களை அடையும்போது செல்லக்கூடாத இடங்களுக்குச் செல்ல வைக்கிறது. அதுவே நல்ல எண்ணமாக இருந்தால் செயல்களும் நல்லதாகவே இருக்கும். ஆகவே, மனதில் நற்சிந்தனைகளை வளர்த்துக்கொள்ளுங்கள்

* வெப்பம், குளிர்ச்சி இவ்விரண்டும் இயற்கையின் மாறுதல்களுக்கேற்ப சுழற்சியாக வந்து கொண்டே இருக்கிறது. கோடை காலத்தில் வெப்பத்தை வெறுத்து குளிர்ச்சியை விரும்புகிறோம். குளிர்காலத்தில் குளிர்ச்சியை ஒதுக்கி வெப்பத்தை தேடிச்செல்கிறோம். ஒரு சமயத்தில் நாம் விரும்பும் சூழலை மற்றொரு நேரத்தில் வெறுக்கவும், விரும்பவும் செய்கிறோம். வெறுப்பதாலோ, விரும்புவதாலோ இவ்விரண்டிலிருந்தும் நாம் ஒதுங்கிவிட முடியாது. அதைப்போலவே இன்பமும் துன்பமும் வாழ்க்கையில் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டுதான் இருக்கும். இவை இரண்டையும் வேறுவேறாக பார்க்காமல் சமமாகப் பாவித்து ஏற்றுக்கொள்ளுங்கள்.

*சான்றோன் ஆக்காத கல்வி, சாமர்த்தியமாய்க் கழித்த சோம்பலேயாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

அன்றைய இரவுப் பொழுது பதுளை ஸ்ரீ கதிரேசன் கோவில் மண்டபத்தில் கழிந்தது. அடுத்தநாள் ஞாயிறு காலை ஸ்ரீ கதிர் வேலாயுதனைத் தரிசித்தபின் அங்கு வந்திருந்த அயற் கிராமங்களைச் சேர்ந்த பாடசாலைப் பிள்ளைகளுக்குமான கற்றல் உபகரணங்களை வழங்கியபின் அவர்களுடன் ஸ்ரீ கதிர்வேலாயுதனின் சந்நிதியில் ஓர் இனிய அருமைமிகு பஜனை நிகழ்வையும் நடாத்தினோம். தொடர்ந்து காலிஎல சித்தி விநாயகர் ஆலய பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும் அறநெறிப்பாடசாலைக்குச் சென்றோம். அங்கு பெற்றோர்கள், ஆசிரியர், பிள்ளைகளுமாக ஓர் பெருங் கூட்டம் எங்கள் வரவிற்காகக் காத்திருந்தது. எங்களைக் கண்டதும் அவர்களின் மத்தியில் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம். அதிபர் தலைமையில் ஓர் கூட்டம் ஆரம்பமாகியது.

அவர் தமது உரையில், மலையகத்தைப் பொறுத்தவரையில் ஆன்மிக விழுமியங்கள் அடங்கிய செயற்பாடுகள் மிகவும் அருகியே காணப்படுவதாகவும், இவை பற்றிய விழிப்புணர்வை இம் மக்களுக்கும் பிள்ளைகளுக்கும் ஊட்டி இப்பிஞ்சு வயதுக் குஞ்சுகளை ஆன்மீக வாழ்வு வாழ்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எங்களின் உதவி அவர்களுக்கு மிகமிக இன்றியமையாததாக உள்ளதாகவும்; இப்பணிகளை நீங்கள் எமக்கு செய்ய வேண்டியது காலத்தின் கட்டாய தேவைகளில் ஒன்றாக உள்ளதாகவும், மாதத்தில் ஒரு தடவையேனும் தாங்கள் வருகைதந்து அன்பான ஆசிகளையும், உதவிகளையும் நல்கவேண்டும் என்றும் மிக விநயமாக வலியுறுத்தியிருந்தார். அத்துடன் உங்களுக்கு எத்தகு வேலைப் பழுக்கள் இருந்தபொழுதிலும் எங்களுக்காக ஓர் நாளை ஒதுக்கி உங்கள் குழுவினருடன் மாதத்தில் ஒரு தடவையேனும் தங்களைத் தரிசிப்பதற்கு உதவுமாறு சுவாமிகளிடம் ஓர் பணிவான அன்புக் கட்டளையுமிட்டார்.

அதனைத் தொடர்ந்து எம்மோடு வந்திருந்த திரு கலியுகவரதன் சுவாமிகள் உரையாற்றினார்கள். அவரின் தோற்றப் பொலிவும், உரையும் அம்மக்களை மிகவும் கவர்ந்திருந்தமையும் உணரமுடிந்தது. அத்துடன் அவர் செய்துகாட்டிய மூச்சுப் பயிற்சியும் யோகா நிலைகளும் அம்மக்களின் மனத்தில் ஓர் விழிப்புணர்ச்சியையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தியதையும் அக்கணங்கள் எம் கூட்டத்தினருக்கு உணர்த்தியது. தொடர்ந்து அடியேனின் உரை இடம்பெற்றது. உண்மையில் நான் அதிபராக எனது பள்ளியில் வெள்ளிதோறும் ஆற்றிய உரைகளின் பொழுது ஏற்பட்ட உணர்வுகளிற்கும் இந்தப் பிஞ்சுகளின் முன் உரையாற்றியபொழுது ஏற்பட்ட உணர்வுக்குமுள்ள வித்தியாசத்தை எப்படி விபரிப்பதென்றே புரியவில்லை. எனது பாடசாலைப் பிள்ளைகளுக்கு நான் ஊட்டிய எனது பாடலான "முன்னம் முன்னம் நாங்கள் மண்ணில் காணுந் தெய்வம் அம்மா தன்னைத் தியாகம் செய்து எம்மைப் பேணுந் தெய்வம் அம்மா" என்ற பாடலை இசையுடன் அவர்கள்முன் பாடியபொழுது அங்கிருந்த

நாம் கற்றுக்கொண்டதைப் போற்றவேண்டும். நமக்குத் தெரிந்தவற்றை முறைப்படுத்திக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரும், அக்குஞ்சுகளும் கண்ணீர் வர ரசித்து சுவைத்து உணர்ந்த அக்கணங் களையும் உங்களுடன் பகிர ஆசைப்படுகின் றேன். தொடர்ந்து அவர்களுக்கு ஏற்றவகை யில் எனது பாணியில் பெற்றோர்கள், பெரி யோரை, ஆண்டவனை மதியுங்கள். "அன்பே சிவம்" என்ற அரிய தத்துவத்தைக் கொண் டது எம்மதம். எம் மதம் என்பது பேசுவது அல்ல. அன்பே சிவம் என்பதை வாழ் வியலாகக் கொண்டு பெற்றோர்களை மதித்து ஆண்டவனை வணங்கி, அயலவனிடம் அன்பு செலுத்தி, அனைத்திலும் நிறைவே கண்டு, எவரிலும் குறை காணாது, அன்போடு நாளைத் தொடங்கி, அன்பினால் நாளை நிறைத்து, அன்போடு நாளை நிறைவு செய்து அன்பில் வாழுங்கள் என்று கூறி எனது உரையை நிறைவு செய்தேன். தொடர்ந்து சுவாமிகளிடமும் கலியுகவரதன் சுவாமிகளிடமும் அனைவரும் வணங்கி ஆசி பெற்றனர். நிறைவாக ஆச்சிரம சுவாமிகள், "எம்மிடம் எதுவுமில்லை; சந்நிதியான் நினைத்தால் தொடர்ந்து இவ்வகையான உதவிகளை எம்மால் செய்யமுடியும். இன் றைய நிலையில் உங்களைப் பார்க்கும் பொழுது எமக்குத் தொடர்ந்து இப் பணிகளை உங்களுக்குச் செய்தே ஆக வேண்டும் என்ற ஓர் மன உந்துதல் ஏற்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்து எம் பணிகள் தொடர்ந்து இடை யூறின்றி நடைபெற சந்நிதியானை வேண்டி விடைபெறுகின்றேன்" என்று ஆசி கூறினார்.

தொடர்ந்து பிற்பகல் 1.00 மணியள வில் மகளிர் இல்லம் சென்று அங்கு அவர் களின் அன்பான உபசரிப்பில் மதிய உணவை முடித்து யாழ்நகர் நோக்கிய பிரயாணம் மேற்கொள்ள இருந்தவேளை...

(காட்சி தொடரும்...

**கவலை வாழ்வைப் போக்கிடு ஐயா**
**கரைதனில் உறையும் சந்நிதி ஐயா**

உவகை யோடு வாழ்ந்தோம் ஐயா
உலவி வந்தது கொடும்பகை ஐயா

எவரும் நினையாச் செயல்கள் ஐயா
எத்தனை எத்தனை நடக்குது ஐயா

அவனியில் நீதான் கண்கண் டதெய்வம்
ஆதவன் ஆக ஒளிதா ஐயா

நவயுக நாயகன் நீயே ஐயா
நால்வகை வேதமும் நீதான் ஐயா

சிவனின் செல்வனே சந்நிதி ஐயா
சிந்தையில் அமைதி தந்திடு ஐயா

கவலை வாழ்வைப் போக்கிடு ஐயா
கரைதனில் உறையும் சந்நிதி ஐயா

*-வ. யோகானந்தசிவம்-*

*கல்வி என்பது ஒழுக்கத்தை ஒழுகச் செய்வதும் இன்பம் அளிப்பதுமாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவும் ஒரு திருவிளையாடலே

– திரு குணாகரன் அவர்கள் –

"உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்
நிலை நிறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையவர்" யார்?

"உலகம் யாவையும் படைத்து
அழித்து துடைக்கினும் ஓர்
எல்லையறு பரம் பொருள்
இருந்தபடி இருக்கும்" அப்பொருள் எது?

அவர்தான் இறைவன். அவருடைய திருவிளையாடல்கள் அறுபத்து நான்கு. இந்த இறைவனை நாம் பார்த்தோமா? கதைத்தோமா? அவருடைய உருவம் என்ன? நாம் அறியோம். "ஒரு நாமம் ஒரு உருவம் ஒன்றுமிலான்" என மணிவாசகரும்,

"ஒப்புடையவன் அல்லன் ஒருவனல்லன்
ஓருரனல்லன் ஓர் உவமனில்லி
இப்படியன் இந்நிறத்தன் இவன் இறைவன்
என்றெழுதிக் காட்டொணாதே"

என அப்பர் சுவாமிகளும் பாடியுள்ளனர். அத்தகைய இறைவன் மாணிக்கவாசகருக்காக நிகழ்த்திய திருவிளையாடலை இங்கு பார்ப்போம்.

முன்னை நல்வினைப் பயனால் உலகை உய்விக்க அவதரித்தவர். அவதாரத்தின் முன்னர் இறைவனை வழிபட்டு ஞானநிலை அடைந்தமையால் இப்பிறப்பில் இறைவனே வலியவந்து ஆட்கொள்ளப்பட்டவர் மணிவாசகரே. "....தானே வந்து அடியேற்கு அருள் செய்தான்" எனப் பாடியுள்ளார். மாணிக்கவாசகரின் அவதார நோக்கம் என்ன? சிவஞானம் மிகுந்த திருவாசகத்தை மாணிக்கவாசகரைக் கொண்டு பாடுவிக்க வேண்டும். அந்நூலை ஆன்மாக்கள் படித்து உய்தி அடையவேண்டுமென்பதே இறைவனுடைய நோக்கம்.

திருவாதவூரில் அவதரித்தமையால் "திருவாதவூரர்". பாண்டியனின் முதல் மந்திரியாக இருந்தபோது "தென்னவன் பிரமராஜன்" என்றும், மணி மணியாக திருவாசகம் பாடியமையால் "மாணிக்கவாசகர்" என்றும் ஆயினார்.

இறைவன் ஆன்மாக்கள் மீதும், பக்தர்கள் மீதும் கொண்ட பெருங் கருணையால் மானிடனாக வந்து பல திருவிளையாடல்கள் செய்பவர். அல்லாமலும் பக்தர்கள் இழைத்த துன்பங்களையும் ஏற்று தன் அருள் உருவம் காட்டிய சம்பவங்களும் உண்டு. சுந்தரர் "பித்தன்" என்று ஏசியபோதும் "பித்தனாயினும் பேயனாயினும் வித்தகம் பேச வேண்டாம் வா" எனப் பிழை பொறுத்தவர்.

சாக்கிய நாயனாரின் கல்லால் அடிபட்டவர்.

அருச்சுனனின் வில்லால் அடிபட்டவர்.

*பொறுமையோடு இடைவிடாமல் முயற்சி செய்பவனுக்கே வெற்றி சேவகம் செய்யக் காத்திருக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணப்ப நாயனாரின் காலடி தன் தலையிற்பட்டவர்.

வாசகருக்காக வந்தியம்மையாருக்குக் கூலியாளாகி பிரம்படி பட்டவர்.

பெற்ற தாய் தந்தையர் இல்லாதபடியாலா இத்துன்பங்களை ஏற்கவேண்டி வந்தது? இல்லை. தன்மீது பக்தர்கள் வைத்த பக்தியை உலகோரும் அறியவேண்டுமென்பதே இறைவனின் நோக்கம்.

இனி மாணிக்கவாசகர் வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்களை, திருவிளையாடல்களை நோக்குவோம்.

1) சிவத்தை முழுமையாக அறியும் எண்ணத்துடன் பாண்டியனிடம் முதல் மந்திரிப் பதவியை ஏற்றார்.
2) ஆரிய நாட்டுக் குதிரைகள் திருப்பெருந்துறையில் வந்ததை அறிந்த பாண்டியன் பெருந்தொகைப் பணங் கொடுத்து குதிரை வாங்க அனுப்பியமை.
3) இச்சமயம் தான்,

வாசகரின் பந்த பாசம், உலகபாரம் நீங்கும் நாள்

ஆன்மா சிவத்தையடைய சிவசக்தி வழிகாட்டுவதுபோல் பாண்டியன் பொன் கொடுத்து குதிரை வாங்க அனுப்பியநாள்.

இறைவனை அடைய வழி காட்டும் ஞானகுருவைக் காணும் நாள்.

இறைவன் மானிட வடிவமெடுத்து தேவர்களையும் அழைத்துக்கொண்டு கைலை விட்டு திருப்பெருந்துறைக்கு வந்து குருந்தமர நிழலில் ஞானசபை அமைத்து ஞானகுருவாக அமர்ந்திருக்க சிஷ்யர்கள் சிவநாமங்களை ஓதிக்கொண்டிருக்கின்றனர்.

ஆன்மாக்கள் உண்மையான வாழ்வை உணர்ந்து அதன்படி நடந்து இறைவனை அடையவேண்டும், சிவஞானம் மிகுந்த திருவாசகத்தை மாணிக்கவாசகரைக் கொண்டு பாடுவிக்க வேண்டும் என்ற நோக்குடன் மாணிக்கவாசகரை எதிர்பார்த்திருக்கின்றார்.

சிவநாம ஒலிகேட்ட மாணிக்கவாசகர் தாய்ப் பசுவை நாடி ஓடும் கன்றினைப்போல் அவ்விடத்திற்கு விரைந்து சென்றார். ஞானகுருவின் பாதங்களை வணங்கி தன்னையும் சீடனாக ஏற்குமாறு கைகட்டி வாய் பொத்தி நிற்கின்றார். குருவின் கையில் உள்ள நூலைக் காட்டி இது "சிவஞானபோதம்". சிவம் என்றால் இறைவன்; ஞானம் என்றால் அவனைப்பற்றிய அறிவு; தெளிவு என்பது அறிந்தவற்றை தெரிந்து (யாவும் சிவத்துள் அடங்கும் என்பதே பொருள்) கொள்ளல் என நூலின் பொருளை விளக்கினார்.

மாணிக்கவாசகருக்கு இறைவனைக் கண்டேன் என்ற மெய்மறந்த நிலையில் கொண்டு வந்த பொன்னை குருவின் காலடியில் வைத்து தன்னை முழுமையாகக் குருவிடம் ஒப்படைத்தார். இறைவனும்

நயன தீக்ஷை - உலகபாரம், பந்தபாசம் நீங்க.

மந்திர தீக்ஷை - பஞ்சாக்ஷர உபதேசம்.

திருவடி தீக்ஷை- இறைவன் பாதங்களை வாசகரின் தலைமீது வைத்து சிஷ்யனாக ஏற்றுக்கொண்டார்.

வாசகர் அரச உடைகள், அணிகளைக் களைந்து, வெண்ணீறு, உருத்திராக்கம் அணிந்து பித்தர் வேடங்கொண்டார். தூதுவர் பாண்டியனிடம் சென்று நடந்தவற்றைக் கூறினர். பாண்டியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓலை அனுப்ப "ஆவணிமூல நாளில் குதிரைகள் வரும்" எனச் சொல்லி பற்றும் பற்றில்லாதவர் போலும் மீண்டும் அரசியற் கடமைகளைச் செய்கின்றார். ஆனால் ஆவணிமூல நாளில் குதிரைகள் வரவில்லை. பாண்டியன் சீற்றங்கொண்டு குதிரை வாங்கக் கொடுத்த பணத்தைத் திருப்பி வாங்குமாறு பணித்தான். தண்டலாளர் பணத்தைக் கேட்டபோது மாணிக்கவாசகர் மௌனியாகி இறை தியானத்திலிருக்க அரச உடைகளைக் களைந்து சிறையிலிட்டனர்.

திருவாதவூரர் படும் துன்பம் கண்டு காட்டிலுள்ள நரிகளைக் குதிரைகளாக்கி இறைவன் ஆரிய தேசக் குதிரை வணிகனாகவும், தேவர்கள் குதிரை வீரர்களாகவும் அழைத்துக்கொண்டு மதுரை வீதிக்கு வருகின்றார். குதிரைகள் வரும் ஒலிகேட்டு வாதவூரரை சிறையால் விடுவித்து அரச உடைகளுடன் குதிரைகளைப் பார்க்க வருகின்றான் பாண்டியன். பார்வைக்கு யாவும் உயர்ந்த சாதிக் குதிரைகட்குரிய இலட்சணத்துடன் காணப்படுகின்றன. பாண்டியன் மகிழ்வுடன் கயிறுமாற்றிட குதிரைகள் பந்தியில் சேர்க்கப்படுகின்றன. குதிரை வணிகன் மாயமாகி விட்டார். மாலையாகி நடுநிசியுமானது. பந்தியில் நின்ற குதிரைகளுடன் நரிகளாகிய பரிகள் காவலாளிகளைக் கொன்றும் அவற்றைக் கடித்துக் குதறி பெருஞ்சத்தமாக ஊளையிட்டன. நரிகள் ஒன்று சேர்ந்து பந்தியில் உள்ள குதிரைகளுடன் போரிட்டன. நரிகளின் ஊளைச் சத்தம் கேட்டு மக்கள் பயந்து ஓடியொழிந்தனர். பாண்டியன் வெகுண்டெழுந்தான். இறைவன் நரிக்குதிரைகளை மறைத்தார்.

யான் செய்த தவப்பயனே பிரம விஷ்ணுவாலும் அறியமுடியாத இறைவன் மானுட வடிவுடன் நரிகளைக் குதிரைகளாக்கி தான் குதிரை வணிகனாக வந்து எனக்கு அருள்புரிந்தான் என திருவாதவூரர் ஞானக்கண்ணால் உணர்ந்தார். இறைவனே குதிரை வணிகனாக வந்தான் என்பதையும், தாம் கொடுத்த பீதாம்பரத்தை- உரிய மரியாதை செய்யாமல் குதிரைச் சவுக்கால் பெற்றமையும், குதிரைகள் நரிகளாகி ஊறு விளைவித்தமையையும் பாண்டியன் தன் ஊனக்கண்ணால் உணரமுடியவில்லை. இவை யாவும் வாதவூரர் செய்த மாயவேலை. காட்டிலுள்ள நரிகளைக் குதிரைகளாகக் காட்டி ஏமாற்றிவிட்டாரே. தண்டலாளர்களை அழைத்து, இவரைக் கொண்டுபோய் நடு வெயிலில் சுடு மணலில் நிறுத்தி நான் கொடுத்த பணத்தை வாங்குங்கள் எனக் கட்டளையிட்டான். தண்டலாளர் அப்படியே செய்தனர். வாதவூரர் இறைவனை நினைந்து, "நான் படும் துயரை நீ அறியாயோ? எனையாட்கொண்டபோது உன்னிடம் என்னை ஒப்படைத்து சரணாகதி அடைந்ததை மறந்துவிட்டாயா?" அவர் படும் துயரை கடவுள் மாமுனிவர் அருளிய திருவாதவூரடிகள் புராணத்தில்,

"தொல்லையோர் இருவர் தேடும் சோதியேயாது செய்வேன்
தில்லையோர் பரவநின்ற தெய்வமே யாதுசெய்வேன்
இல்லையோ கருணை நின்பால் இன்றெனை அடிமைகொண்டாய்
அல்லையோ தமியேன் இன்னல் அறிதியோ அறிந்திலாயோ"

எனப் பாடியுள்ளார்.

வாதவூரரின் துன்பத்தை நீக்கக் கருதிய இறைவன் சிரமேற் தாங்கிய கங்கையை வைகையோடு கலக்குமாறு பணித்தார். கங்கையும் குதித்துப் பாய்ந்து வைகையோடு கலந்தது. வைகை பொங்கிப் பிரவாகித்து அயலிலேயுள்ள மரம், செடிகள், குடிசைகள்

*விசிறியை அசைக்காமல் காற்று வராது. வியர்வை சிந்தாமல் உயர்வு வராது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவற்றையும் அழித்து கரையை மேவிப் பாய்ந்து பாண்டியனின் மதுரை நகரின் மதிற் புறத்தையே அழிக்கவந்தது. மதுரை நகரில் வெள்ளம் மேவிப்பாய்வது கண்டு மக்கள் செய்வதறியாது கலங்கினர்.

பாண்டியன் மனங் கலங்கினான். வைகையையும் வணங்கி, "சொக்கநாதப் பெருமானே! என் ஆட்சியில் என்ன தவறு செய்தேன்? ஆலயத்துக்குச் செய்யவேண்டிய நித்திய நைமித்தியங்களில் குறைவிட்டேனா? பார்ப்பனர், பசு, பெண்கள், சிறார்கள், நல் லோர், முனிவர்கட்குத் துன்பம் செய்தேனா" என இறைவனிடம் முறையிட்டான். மதியூகி யான அமைச்சர் ஒருவர், "மன்னா! வாத வூரர்க்கு நாம் கொடுத்த தண்டனையே வைகை பெருகக் காரணம்" எனக் கூறவும், மன்னன், வாதவூரரின் தண்டனையை நீக்கி "மன்னிக்கமுடியாத பல குற்றங்களைச் செய்த என்னை மன்னித்து, நீரே வைகை பெரு காமல் அடைப்பிப்பீர் எனக் கேட்டுக்கொண் டான்.

வாதவூரர் தலைமையில் மதுரை மாநகர் மக்களை வைகைக் கரையை அடைக்க வருமாறு தண்டோரா போடப் பட்டது. மக்கள் கூடையும் மண்வெட்டியும் கொண்டு வைகைக் கரையில் கூடினர். ஒவ் வொருவருக்கும் அளந்து விடப்பட்டது. யாவ ரும் தமக்குரிய பங்கை உயர்த்தி அணை கட்டினார்கள். ஆனால், சிவனிடத்தில் இடை யறாத அன்பு கொண்டவளும், ஆதரவற்ற வளுமாகிய செம்மனச் செல்வியாகிய மூதாட் டியின் பங்கை அடைப்பார் எவருமில்லை. அதிகாரிகள் அம்மையை வருத்தினர். சிவனை நினைந்து சுவாமி! யான் ஆதர வற்றவள். பிட்டுவிற்றுச் சீவிக்கும் எனக்கு கூலியாக யார் வருவார்? எனக் கண்ணீர் விட்டழுதாள். வந்தியம்மைமீது இரக்கம் கொண்ட இறைவன் தானே கூலியாளாகச் செல்வோம் எனத் திருவுளம் கொண்டார்.

கிழிந்த ஆடை, பழைய கூடை, தலையில் சும்மாடு, தோளில் மண்வெட்டி சகிதம் கூலி வேண்டுமா கூலி எனக் கூவிய படி வந்தியின் வீதிவழியே வந்தார். மகனே! எனக்கு கூலியாளாக வருவாயா? நான் பிட்டு விற்றுச் சீவிப்பவள். இப்போ இந்தப் பிட்டைச் சாப்பிடு. வேலை முடிந்து மாலை வா பிட்டை விற்றுக் கூலி தருவேன்" எனச் சொல்லவும்,

"கூற்றடும் கமலபாதர் குறுந்துணிக் கரியசீரை
ஏற்றிடும் பிட்டை வாங்கி இன்புற அமுது செய்து
மாற்றரும் பசியை அன்னே மாற்றினை இனிப்போய் வைகை
ஆற்றினின் கூற்றிலுண்டாம் கரை அடைப்பன்"

எனக்கூறி வந்தியம்மையின் பங் கைக் காட்டும்படி கேட்டு இருவரும் வைகைக் கரையை அடைந்தனர். இறைவன் தன் திருவிளையாடலைத் தொடங்கினார். ஆற்றங்கரை மண்ணை வெட்டுவார். கூடை யில் நிறைப்பார். கரையில் கொட்டுவார். களைத்தவர்போல் நிற்பார்; இருப்பார்; பசித் தவர்போல் அம்மையிடம் பிட்டை வாங்கி உண்பார். ஆஹா! என்ன சுவை! இன்னும் வேண்டும் எனக் கேட்பார். மண்ணை வெட்டு வார் கூடையில் கொட்டி தலைமேல் வைத் துக் கூத்தாடுவார். பாடுவார்; மண்ணை வெட் டுவார். கூடையைச் சிரமப்பட்டு தலையில் வைப்பார்; கூடையுடன் விரைந்து போவார், மண்ணைக் கொட்டியபின் கூடையைத் தலையணையாக வைத்து கொன்றை மர நிழலில் உறங்குவதுபோல் பாசாங்கு செய் வாராயினார்.

உன்னிடமுள்ள திறமை எவ்வளவு சிறிதாக இருந்தாலும் அதைப் பயன்படுத்தத் தயங்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலைக்காலமாயிற்று. எல்லோருடைய பங்கும் அடைத்தாயிற்று. ஒரு பங்கு மட்டும் அடைபடவில்லை. இது யாருடைய பங்கு என்று வினவியபோது, அங்கு நின்றவர்கள், "பிட்டு விற்றுச் சீவிக்கும் மூதாட்டியுடையது. கூலியாளாக வந்த ஒருவன் வேலை செய்வதுபோல் நடிப்பான். நாங்கள் சொல்வதைக் கேளான். ஆடுவான்; பாடுவான், மண்ணை அள்ளிக் கூடையில் போடுவான்; தூக்கமுடியாமல் தூக்கித் தலையில் வைப்பதுபோல் நிலத்தில் கொட்டுவான். நடப்பான்; பைத்தியம்போல் கைகொட்டிச் சிரிப்பான். களைத்தவன்போல் முடிச்சை அவிழ்த்துப் பிட்டை உண்பான், பிட்டு நல்ல ருசியோ ருசி! எனக் கூத்தாடுவான், இதோ பாருங்கள் அந்த மரநிழலில் படுத்திருக்கிறான் எனக் கூறினார்கள். இதைக்கேட்ட அரச பணியாள் அவனை இங்கு அழைத்து வருக எனக் கூறியதும் கூலியாள் ஒருவன் அவர் அருகிற் சென்று மேனியில் தட்டி எழுப்பினான்.

நித்திரை கலையாதவர்போல் நடித்து உறக்கம் நீங்கியவர்போல் விழித்து பயந்தவர் போலத் தயங்கி நடந்தவர் திடீரென அரச நடை நடந்துபோய் ஒரு அழகிய இளைஞன்போல் நின்றார். ஆத்திரமடைந்த அரச பணியாளர் ஒரு தண்டலாளரைப் பார்த்து இரத்தம் வடிய அடிப்பாயாகவென ஏவினான். கூலியாளாக வந்தவன் இறைவன் என்று அறியாத தண்டலாளன் ஓங்கிய பிரம்பினால் அடித்த ஒரு அடி மேனியில் பட்டது தான் யாவரும் காண மறைந்துவிட்டார். வைகை நதியும் அமைதியாகப் பாய்ந்தது.

அந்தப் பிரம்படி; தேவர்கள், முனிவர்கள், பாண்டியன், அந்தப்புர மகளிர், மந்திரிமார், படைவீரர் மீதும், மரம், செடிகள் மற்றும் உயிர்கள்மீதும் பட்டன. யாவரும் கலங்கினர். ஆனால் வாதவூரர் மேனியில் அடி பட்டதும், என்னை உய்விப்பதற்காகவல்லவா குருந்தின்கீழ் ஆசானாக வந்து ஆட்கொண்டது, குதிரைத் தலைவனாக வந்தது, வந்திக்கு கூலியாளாகி திருமுடியில் மண்சுமந்து பிரம்படிபட்டது யாவும் என்பொருட்டாக இறைவன் நடாத்திய திருவிளையாடல்களேயென உணர்ந்தார். என்னை ஆட்கொண்ட எம்பெருமான் எங்கேயுள்ளார்? மண் சுமந்து அடிவாங்கிய இடத்தில் நின்று புலம்பினார்; அழுதார். பிரம்படியால் புண் (வலி) சுமந்திருப்பாரே! இறைவன் மேனி "புண் சுமந்தமேனி" எனத் திருவாசகத்தில் பாடியுள்ளார்.

"பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தான் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன் மண்டலத் தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண்"

என திருஅம்மானை 182ஆம் பாடல் சொல்கிறது.

என்னை ஆட்கொண்ட பெருமானின் கோலத்தை, நான் காணவில்லையே, வணங்கவில்லையே! எனக்கு எப்படி சிவலோகப்பதவி கிடைக்கும் எனப் பலவாறு புலம்பினார்.

பாண்டியன் வாதவூரரை நோக்கி, "அடியேன் தங்களுக்குச் செய்த அநீதிகளைப் பொறுத்து மன்னித்து மீண்டும் அரச பணிகளைத் தொடருமாறு கேட்டான். இறைவன் என்னை ஆட்கொண்ட திருப்பெருந்துறை போகவே விரும்புகிறேன். இவ்வுலகை ஆள்வதைவிட

*வாழ்க்கையை வளமாக்க விரும்பினால் காலத்தை வீணாக்காதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் திருமேனியைக் காண்பதுவும் வணங்குவதுமே என் பணியெனக்கூறி திருப் பெருந்துறையை நோக்கி நடந்தார். குதிரை வாங்கச் சென்றபோது கண்ட அதே குருந்த மர நிழலில் தேவர்கள் சிவனடியார்களாகவும் சிவபெருமான் ஞானகுருவாகவும் இருக்கும் காட்சியைக் கண்டு விரைந்து சென்று திரு வடிகளில் வீழ்ந்து வணங்கினார். சிவபெரு மானின் அருட்பார்வை பெற்றதும் சிவனடியார் கூட்டத்துடன் தானும் ஒருவனானார்.

ஞானகுருவாக வந்து வாதவூரரை ஆட்கொண்டு பல திருவிளையாடல்களை நிகழ்த்திய இறைவன் கைலைக்குப்போக எண்ணினார். வாதவூரரால் இன்னும் இரு காரியங்கள் நிறைவேற வேண்டும். சீடர்களை நோக்கி நீங்கள் சிலகாலம் இங்கிருந்து இங்குள்ள அக்கினிக் குண்டத்தில் தோன்றும் சோதியில் வீழ்ந்து என்னை வந்தடைவீர்கள் எனக் கூறி மறைந்துவிட்டார். இறைவனை விட்டுப்பிரிய முடியாத வாதவூரர், “பாவியே னுடைய ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய தேனி னைச் சொரிந்த இறைவா! யான் உனைத் தொடர்வேன் நீ எங்கெழுந்தருள்வாய்” எனக் கலங்கி நின்றபோது, “அன்பனே! நீ அந்தத் தீயில் விழாமல் திருப்பெருந்துறையை விட்டு நீங்கி உத்தரகோசமங்கை முதலாய சிவஸ் தலங்களைத் தரிசித்து அங்குகாணும் லிங் கத் திருமேனிகளை வணங்கும்போது எனது இந்தத் திருமேனியைக் காண்பாய்” எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

இறைவனின் அருளால் இமைப் பொழுதும் நெஞ்சை விட்டகலா இறைவன் மீது “நமச்சிவாய வாழ்க! கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க! எனச் சிவபுரா ணம் பாடத்தொடங்கி தான் தரிசித்த தலங் கள்தோறும் கண்ட இறைவனை லிங்கவடி வில் கண்டு பல பதிகங்கள் பாடி சிதம் பரத்தை அடைந்தார். சிவபெருமானை அன்றி வேறோர் தெய்வம் இல்லை. “தம் தெய்வமே தெய்வம், தம் சமயமே மெய்ச்சமயம்; தம் கடவுளே மேலானவர்” எனக் கூறிக்கொள்ளும் புல்லறிவாளர் கண்காணாதவாறு தில்லை நகர்ப்புறத்தில் ஆச்சிரமம் அமைத்து அச் சோப்பதிகம் பாடி இறை தியானத்தில் மூழ் கினார்.

இச் சமயத்தில் திருவாதவூரடிகளின் அவதார அற்புதத்தையும் சிவன்பால் கொண்ட பக்தியையும், அவர்பால் இறைவன் நிகழ்த் திய அற்புதச் செயல்களையும் கேள்வியுற்ற இலங்கை அரசன் அந்தத் தவ முனிவரை அழைத்து வருமாறு ஒற்றனை அனுப்பினான். சபைக்கு வந்த வூரரின் கோலத்தை எள்ளி நகையாடிய புத்தன் தாம் வணங்கும் புத்த பகவானே மேலான கடவுள், தமது சமய நூல்களான திரிபிடகமே மேலானது, புத்த சமயமே மேலான சமயம். ஆனால் உமது கடவுள் மேலானவர் என்பதை நிரூபிக்க முடி யுமா என வாதிடத் தொடங்கினான். “பொன் னம்பலம் வாழ்க!” என்றீர் அதன் பொருள் என்ன? சோழ நாட்டில் உள்ள சிதம்பரஸ் தலம் இந்தப் பூவுலகின் நடுவில் உள்ள பொதுவான இடம். அந்தப் பொதுவான கனக சபை (பொன்னம்பலம்)யில் திருநடனம் செய் வது உலக ஆன்மாக்கட்குரிய ஐந்தொழில் களையும் குறிக்கும். யாராயிருப்பினும் வீபூதி அணிந்து பஞ்சாட்சரங்களை ஜெபிப்பானோ அவன் சகல நோய்களும் பிறவிப் பிணியும் நீங்கி இறைவன் பாதங்களைச் சேர்வான் எனச் சொல்லி, ஈழ மன்னனின் மகளான ஊமைப்பெண்ணை புத்தர்களுடன் பேச வைத்து சிவபெருமானே யாவர்க்கும் மேலான கடவுள்; சைவசமயமே மேலான சமயம் என் பதை நிரூபித்து புத்தர்களை வாதில் வென்று தன் ஆச்சிரமத்தை அடைந்தார். இறைவன் தூய வெண்ணீறு, முப்புரிநூல், கையில்

*திறமை என்னும் தாயும் உழைப்பு என்னும் தந்தையும் பெற்றெடுத்த அழகுக் குழந்தையே புகழ்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு புத்தகமும் கொண்டு அந்தணர் வடிவில் வாதவூரரிடம் வருகிறார். நான் பாண்டிநாட்டில் இருந்து வருகிறேன். உமக்காக இறைவன் நரிகளைப் பரிகளாக்கிக் குதிரை வீரனாக வந்தது, வைகையாறு பெருகியது, வந்தியம்மைக்குக் கூலியாளாகி பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்டது யாவும் அறிவேன். அதுமட்டுமல்ல சிவபெருமான் மீதுகொண்ட பக்தி மிகுதியால் அவரைக் காண்பதற்காக பல சிவஸ்தலங்கட்கு சென்று இனிமையான பாடல் களைப் பாடியுள்ளீர். குருந்த மர நிழலில் சரணாகதியடைந்த பின்னர் “வா” என்றழைக்கவும் போகவில்லையே என்ற ஏக்கத்தில் இறைவனுடன் உரையாடி உறவாடி புலம்பிய பாடல்கள் தெய்வீகமானவை.

“ஐயா நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம்
உய்ந்தொழிந்தோம் எய்யாமல் காப்பாய்”

எனப் பாவை பாடினாய்.

இறைவன் திருவிளையாடல்களை, பெருமைகளையெல்லாம் இனிமையாகப் பாடிய திருவாசகப் பாடல்களை உலகோரும் அறியவேண்டுமல்லவா? நீர் அந்தப் பாடல்களைப் பாடும் நான் எழுதுகிறேன். அடிகளார் பாடி முடிந்ததும் பாவை பாடிய வாயால் கோவையும் பாடுவாய் எனக் கேட்க கோவையும் பாடி முடித்தார். மெய்த்தவ வாதவூரர் பாட சிற்றம்பலவன் எழுதியதென கைச்சாத்திட்ட வேதியர் புத்தகத்துடன் மறைந்தவர் நேரே கனகசபை சென்று பஞ்சாட்சரப் படியில் வைத்து மறைந்தார்.

மறுநாட் காலை அந்தணர் பூசைக்கு வந்தபோது கருவறை வாசலில் புத்தகம் இருக்கக் கண்டு, அர்த்தசாமப் பூசை முடித்துப் போன பின்னர் எப்படி இப்புத்தகம் வந் தது? யார் வைத்தது? திருவாதவூரர் பாட சிற்றம்பலவன் எழுதியது எனக் கண்டபோது ஆச்சரியமும் அதிசயமும் கொண்டு இறைவனை நினைந்து பொருள் கேட்டனர். மாணிக்க வாசகரிடம் கேளுங்கள் என அசரீரி கேட்டது.

தில்லைவாழ் அந்தணர்கள் மணிவாசகரின் ஆச்சிரமத்தை அடைந்து இப்புத்தகத்தின் பொருளை உம்மிடம் கேட்கும்படி சிவபெருமானே கூறியருளினார் எனக் கேட்டனர். மணிவாசகர் பக்தி மேலீட்டால் மகிழ்ச்சியடைந்து தில்லையம்பலத்திலுள்ளோர் காண அங்கு வந்து சொல்வேனென யாவரையும் அழைத்துக்கொண்டு பொன்னம்பலத்தை அடைந்து சிவஞானம் நிறைந்த திருவாசகம், திருக்கோவைக்குமான பொருள் இதுவேயென தன் விரலால் தூக்கிய திருவடியைச் சுட்டிக் காட்டியபடி பொன்னம்பலத்துட் சென்று சோதியுட் சோதியாகி இரண்டறக் கலந்து மேலான சாயுச்சிய பதவி அடைந்தார்.

## வாரியார் சிந்தனை

மறத்தல், மன்னித்தல் போன்ற குணாதிசயங்களை உடையவர்கள் இறைதன்மை படைத்தவர்கள். நமக்குத் துன்பங்கள் ஏற்படும் சமயத்தில் “உனக்குக் கண்ணே இல்லையா? இனிமேல் உன்னை வணங்குவதேயில்லை” என்று கோபப்பட்டு நமது மனதால் இறைவனை பலவாறாகத் திட்டுவோம். நாம் எப்படித் திட்டினாலும் அவற்றையெல்லாம் மறந்து நமக்கு கருணை செய்பவன் அந்தப் பரம்பொருளான இறைவன் மட்டுமே

*எது தேவை? முடிவு செய்ய மனம். வழிவகுக்க அறிவு. செய்துமுடிக்க கை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் உலகம் தழுவிய பரந்த நோக்கு

(தொடர்ச்சி...

– சுவாமி கிருஷ்ணானந்தா –

தமிழில்: திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

## அத்தியாயம் – 04

## எல்லை இல்லாததை அடைவதற்கான போராட்டம்

**17. நமது நியாயங்கள்.**

மேலே சென்ற கதை எங்கள் ஒவ்வொருவரையும் பற்றிய கதையே ஆகும். அது செவிமடுப்பதற்கான ஒரு கதை மட்டும் அன்று. இக்கதை எங்கள் எல்லோருடனும் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டுள்ளது. கடவுளைப்பற்றி நாம் கொண்டுள்ள மிக மோசமான புரிந்துணர்வு இவ்வாறுதான் இருக்கின்றது. எமக்கே உரிய சொந்தமான ஒருமுறையில் நாம் எமது மனங்களில் மோட்சத்தின் தன்மையை அவ்வாறுதான் கருதிக்கொண்டு இருக்கின்றோம். கடவுளின் முன்னிலையிலும் கூட எப்படியும் இந்த வழியிலேதான் நாம் வாழ விரும்புகின்றோம் என்று நீங்கள் கருதவில்லையா? கடவுள் என்ற சிங்கத்தினால் விழுங் கப்படுவதற்கு நீங்கள் விரும்புகின்றீரகளா? இல்லை. அது பயங்கரமான ஒரு விடயம் ஆகும்.

உடம்போடு வாழுவதற்கான ஓர் அடிப்படை விருப்பம் எம்மிடம் இருப்பதை யாரும் மறுக்க முடியாது. அத்துடன் மரணமில்லாப் பெருவாழ்வு பற்றிய எமது கருத்து நாம் இன்று வாழ்ந்துகொண்டிருக்கின்ற அதே நிலையை நீடிப்பதுதான் என்று எண்ணுவதை எவராலும் மறுக்க முடியாது. நாம் விலக்க விரும்பும் நாளாந்த வாழ்விலுள்ள சிறுசிறு பிரச்சினைகளை மட்டும் அங்கும் வைத்துக்கொண்டிருக்க விரும்பாது போகலாம். நாம் எல்லா வகையிலும் சுதந்திரமாக இருக்க விரும்புகின்றோம். ஆனால் அதேவேளை எமது அகங்காரத் தின் விருப்பங்களையும் நியாயப்படுத்திக் கொண்டுதான் அவ்வாறு சுதந்திரமாக இருக்க விரும்புகின்றோம்.

**18. போலித்துறவு.**

முதலாவது அத்தியாயத்தில் குறிப்பிட்ட அருச்சுனனது வாதங்களின் அடிப்படையில் உள்ள பற்றுக்கள் பகவத்கீதையில் கிருஷ்ண பரமாத்மா தந்துள்ள ஆன்மீகப் போதனை களுக்கு மாறானவை ஆகும். அப்படியான நியாயப்படுத்தலோடு வருமாயின் துறவுக்குக்கூட அருச்சுனன் தயாராக இருந்தான். "எல்லாவற்றையும் துறக்கவும் துறவி ஆகவும் என்னால் முடியும். அதுவே ஆன்மீக வாழ்வாகவும், சமய வாழ்வாகவும் அமையுமாயின் நான் அதற் குத் தயாராக உள்ளேன்" என்று அருச்சுனன் கூறுகின்றான். உண்மையில் அதற்கு நாமும் தயாராகவே இருக்கின்றோம். "நாம் எமது தந்தை தாயாரையும், உலகத்தோடு உள்ள எல்லாவற்றையும் துறப்போம். மனிதர்களோடு எவ்வித தொடர்பும் வைத்துக்கொள்ள

*மனித மனத்தில் தோன்றும் நல்ல எண்ணங்களே இந்த உலகின் மிகச் சிறந்த வைரங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டோம். நாம் கடவுளைத் தேடுகின்றோம்" என்று திடீரெனக் கூறுவோம். இந்த உலகத்திலேயே ஓரிடத்தில் இருந்து இன்னோரிடத்துக்குச் சென்று கொண்டு துறவு நிறைவேறியதாக எங்களை நாங்களே திருப்திப்படுத்திக் கொள்கின்றோம்.

## 19. கீதை கூறும் துறவு.

பகவத்கீதை கூறும் மாபெரும் துறவு இதுமட்டும் அன்று. அத்துறவு இமயமலைக்கு வருவதற்காக அமெரிக்காவை விட்டு வெளியேறுவதுபோன்றது அன்று. அது எல்லா வகையிலும் வித்தியாசமான ஒரு துறவு ஆகும். எல்லா மனிதரும் அதனைப் புரிந்துகொள்வதும் இலகுவானது அன்று. அது அவ்வாறு இலகுவாக இருந்திருக்குமாயின் நாம் தினமும் ஆன்மீக வாழ்வில் செய்துகொண்டு இருப்பதுபோல தொந்தரவுப்படமாட்டோம். அருச்சுனனே துறவைப் புரிந்து கொள்ளவில்லை என்றால் நாம் அதனை எப்படி ஆராய்ந்து புரிந்து கொள்ளுவது? எமது எல்லா வாதங்களும், ஆற்றல்களும் இருந்தபோதும், உண்மையான ஆன்மீக வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளும் முயற்சிகள் இருந்தபோதும் நாம் அதே பழைய சிந்தனையிலேயே சென்று கொண்டிருக்கின்றோம். உலகத்துக்கும் கடவுளுக்கும் இடையேயுள்ள தொடர்பையும், எமக்கும் கடவுளுக்கும் இடையே உள்ள தொடர்பையும், ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்கும் இடையே உள்ள தொடர்பையும் எங்களால் தகுந்த முறையில் அளந்து அறிய முடியாதுள்ளது. கடவுள், உலகம், ஆன்மா என்ற மேலான விடயங்களைப்பற்றி ஆராய்வதே தத்துவம் ஆகும். அவை மூன்றுக்கும் இடையே உள்ள அந்தரங்க உறவைப் புரிந்துகொள்வதே தகுந்த தத்துவமாகக் கொள்ளப்பட முடியும்.

## 20. அடிப்படைத் தவறு.

அப்படியான தத்துவத்தை இன்று உள்ளதன் தத்துவம் என்று அழைக்கின்றனர். ஆனால் இந்த விடயங்கள் எமது புரிந்துகொள்ளலில் நின்றும் தப்பித்துக்கொள்கின்றன. ஏனெனில், இம்மூன்றினது அந்தரங்க உறவையும் புரிந்துகொள்ளும் எமது முயற்சியில் கூட அப் புரிந்துகொள்ளும் சூழ்நிலையில் நாம் ஓர் அடிப்படைத் தவறை விட்டுவிடுகின்றோம். நாம் நியாயப்படுத்தப்படக்கூடிய அகங்கார மையங்களாகத் தொடர்ந்தும் இருக்கின்றோம். இன்று நாம் எப்படி இருக்கின்றோமோ அப்படியே தொடர்ந்தும் நாமாகவே இருக்கின்றோம். எம்மிடத்தில் ஒரு மிகச்சிறு வித்தியாசம்கூட ஏற்படுவதில்லை. தத்துவத்தில் நாம் ஆராய்கின்ற பரந்த விடயங்களை விளங்கக்கூடிய நிலைக்கு எம்மை நாம் உயர்த்திக்கொள்ள முயற்சித்தாலும் ஒரு சிறு வித்தியாசம்கூட எம்மிடத்தே ஏற்படுவதில்லை. நாம் கடவுளையும், உலகத்தையும், ஆன்மாவையும் சிந்திக்கின்ற அதேவேளை ஆணாகவும், பெண்ணாகவும், சிறுவனாகவும், சிறுமியாகவும், வியாபாரியாகவும், தொழிலாளனாகவும் தொடர்ந்தும் அப்படியே இருக்கின்றோம். எனவே எமது தத்துவம் வார்த்தைக்குக் குவியலாகவும், தொடர்பற்ற கருத்துக்களின் குவியலாகவும், களைப்பைத் தருவதாகவும், திருப்தியற்றதாகவும் இருப்பதால் எமக்கு எல்லாத் தத்துவங்களிடத்திலுமே ஒரு சலிப்பு ஏற்படுகின்றது. ஏனெனில், நாம் உண்மையான தத்துவத்தை ஆராய்ந்துகொண்டு வராமையே காரணம் ஆகும். தத்துவம் என்ற பெயரில் எமது சொந்தச் சிந்தனைகளையே நியாயப்படுத்திக்கொண்டு வந்திருக்கின்றோம்.

*சிறுசிறு பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு செய்தால் எந்த வேலையும் மிகக் கடினமானதாக இருக்காது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் எமது அகங்கார உறவுகளுள்ள இந்த உலகத்துக்கும், எமது உளவியல், அனுபவ, உறவுத் தேவைகளுக்கும் விடை காணவே நாம் கடவுளைக் கொண்டுவர முயற்சி செய்து வந்திருக்கின்றோம். இந்த அருச்சுனன்கள் நாங்களே தவிர வேறு யாரும் அல்லர். அத்துடன் இந்த ஆன்மீகப் பிரச்சினையை எங்களால் இறுதியாக எதிர்கொள்ள முடியாமல் உள்ளது.

**21. ஆன்மீக வாழ்வின் தேவைகள்.**

உண்மையான ஆன்மீக வாழ்வின் தேவைகளை சோதித்தால் நாம் தோல்வி அடைபவர்களாகவும், அந்த உண்மையான ஆன்மீக வாழ்வுக்குத் தகுதி அற்றவர்களாகவும் ஆவோம். நாம் ஆன்மீக வாழ்வை மேற்கொள்ளுகின்றோம் என்ற உளத்திருப்தியோடு மட்டும் வாழுகின்ற ஒருவகை மனிதராகவே இருக்கின்றோம். கடவுள், உலகம், ஆன்மா என்ற மூன்றின் அந்தரங்க உறவுக்கும், கடவுளின் தன்மையைப் பற்றிய தேவைகளுக்கும் எமது மொத்த வாழ்வையும் மாற்றி அமைக்காவிடில் சமயம் சமயமாகவும், ஆன்மீகம் ஆன்மீக மாகவும் இருக்கப்போவதில்லை. கடவுள், உலகம், ஆன்மா என்ற மூன்றுக்கும் இடையே அத்தியாவசியமாக இருக்கும் உறவின் முக்கிய தன்மைக்கும், இன்றைய எமது சிந்தனை முறைக்கும் இடையே ஓர் ஒத்திசைவு இருக்கவேண்டும். அது பூரண ஒத்திசைவாக இல்லாவிடினும் கூட அந்த இறுதியான பூரண ஒத்திசைவின் தேவைகளை நோக்கியதாக வேனும் எமது சிந்தனைமுறை அமைய வேண்டும். இந்த வழியில் வைக்கப்படும் முதலாவது காலடி சரியான திசையில் வைக்கப்படும் காலடியாக அமைவதோடு உண்மையில் மெச்சக் கூடிய ஒரு சாதனையாகவும் அமையும்.

**22. அண்டமும் பிண்டமும்.**

அண்டத்தைப் பிண்டத்திலே நாட்டவேண்டும். கடவுள் மனிதனின் இதயத்திற்குள் இறங்கவேண்டும். குறைந்தபட்சம் உண்மைத் தீயின் ஒரு பொறியாவது எம்மிடம் இருக்க வேண்டும். அதன் பின்புதான் நாம் ஆன்மீகப் பாதையில் காலடி எடுத்து வைத்துள்ளோம் என்று கூறமுடியும். ஆன்மீக வாழ்க்கை முறை என்று நாம் அழைப்பது உண்மையில் கடவுளின் வழி என்றும், பூரணத்துவத்தின் வழி என்றும், தாவோவின் வழி என்றும் அழைக்கப்படும். அதனை நாம் அடைந்திராவிட்டாலும், அதனை நாம் தொடர்புகொள்ளா விட்டாலும் அதனை நாம் முற்றும் புரிந்துகொள்ளா விட்டாலும், நாம் சரியான திசையிலேதான் போய்க்கொண்டிருக்கின்றோம் என்ற உறுதிப்பாடு இருக்கவேண்டும்.

பத்திரிநாத்துக்குச் செல்லும் வழியில் ஓர் அங்குலம் கூடச் சரியாகச் செல்வோமாயின் அந்தப் புனிதப் பயணத்தில் அது ஒரு சாதனை ஆகும். ஆனால் நாம் டெல்கிக்குப் போகும் திசையில் போனால் அதன்மூலம் பத்திரிநாத் கோவிலுக்கு எம்மால் போகமுடியாது போகும். ஆன்மீக வாழ்வின் எல்லாத் தேவைகளையும் புரிந்து கொள்வது இலகுவாக இல்லாது போனாலும் அந்தக் குறிக்கோளைப் பின்பற்றியே செல்கின்றோம் என்று எம்மிடத்தில் குறைந்தபட்சம் ஒரு திருப்தி இருக்க வேண்டும். எனவே எமது சொந்த ஆவல்களையும், இயல்பையும் நன்றாக ஆராய்வது மிகவும் அவசியம் ஆகும்.

(தொடரும்...

*ஒவ்வொரு நல்ல செயலும் நல்ல எண்ணமும் முகத்தில் ஒரு ஒளியைக் கொடுக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமய ஈடுபாட்டோடு வாழ்வோம்

– திருவாரூரன் –

**திவ்வியம் பழுத்த சமையம் சைவம்**

திவ்வியப் பிரபந்தம், பன்னிரு ஆழ்வார்களின் அருளிப் பாடான திருநாலாயிரம் தித்திப்பு, இனிமை, மதுரம் என்பன திவ்வியம் என்பதை எடுத்துப் பேசுகின்றன. மாணிக்கரின் அருளிச் செயலே மதுரவாசகம். இதை நம்மாழ்வார் திருவாய்மொழி என்றார். வாய்மொழி, வாசகம் இரண்டும் ஒன்றுதான். திருதெய்வமென்று பொருள்படும். மொழியைப் பார்ப்பின் ஊடகம் தமிழ்தான். இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும் என்பர் பிங்கலந்தையார். இது தேமதுரத் தமிழ் மேன்மையானது. நீர்மை- ஒழுங்கான இயல்பு- ஆகச் சைவம் திவ்வியம் பழுத்துக் கனிந்தது. அதைக் கடைப்பிடிப்போரையும் கனிய வைக்கும். கல்லைக் கனியாக்க வல்ல புலமை கொண்ட அருளாளர்வழி நம்வழி. இவ்வழியைச் சைவ சமையம் என அறிமுகம் செய்தவர் வாக்யாதிபதி.

சமையமேலாறு மாகித் தானொரு சயம்புவாகி
இமையவர் பரவி யேத்த இனிதினங் கிருந்த ஈசன்
கமையினை யுடையராகிக் கழலடி பரவுவார்க்கு
உமையொரு பாகன் போலும் ஒற்றியூ ருடைய கோவே.

4:45:5

சமைதல்- பக்குவப்படுதல். சமைத்தல்- பாகம் பண்ணல். மனித உள்ளங்களைப் பக்குவம் செய்து புனித வாழ்க்கைக்கு ஆற்றுப்படுத்துவதே சமயம். சமையம் மரீஇ, சமயமாயிற்று. சமயம் வாழ்வின் முழுமைக்கோர் அங்கமாய் இருந்த நிலை முற்றுமுழுக்க மாறி, வாழ்க்கை நீரோட்டத்தில் அ∴தோர் விழுமியம் மிக்கதென்பதை மறந்து சினிமா, ட்ராமா, பட்டிமன்றம் பார்ப்பதற்கு முன்னுரிமை வழங்கி, வாழ்நெறியைப் போட்டடிக்கும் காலமிது. ஊடகங்களும் மக்கட் சமுதாயத்தைக் கட்டிக்காப்பதற்குப் பதில் சீரழிக்கும் பாதையில் இட்டுச் செல்வதையும் அவதானிக்க முடிகிறது. அரைத்த மாவை அரைப்பதுபோல பழைய பல்லவிகளையே அசை மீட்கக் காணலாம். அபினிபோல இவற்றிலேயே தம்மைத் தோய்த்து வாழப் பழகிக்கொண்ட எம் சமுதாயம் சமய ஆளுமைகளைத் தன்னாலே இழக் கின்றனர். வெற்றாரவாரங்களிலும், வேடிக்கைகளிலும், சடங்கு சம்பிரதாயங்களிலும் மூழ்கி, சமய வாசனையைக், கழுவித்தள்ளிப் போலிச் சமயிகளாய் வாழ்கின்றனர். எமது நிலை மையை உள்ளார்த்தமாக உதறித் தள்ளிவிடுகிறோம். இந்த நிலைமை வளர்ந்தால் எம் சமயநிலை என்னாகும். நம் பரம்பரை என்னாகும். நம் சிறப்பான சைவம், சமய நாட்டம், பண்பாட்டியல், அறப்பாங்கு, செவ்வியும், செப்பமும், வளமும், சிறப்பும் நிறைந்த மனித விழு மியங்கள், விழுப்பங்கள் குலையும், வாழ்க்கைப் பயணம் தடம்புரளும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டைவிட மோசமான சூழ்நிலையை இம்மிலேனியம் எதிர்கொள்வது ஆரோக்கியமாய்த் தோன்றவில்லை. பீடிப் புகைக்கும், ஊதுவர்த்தி, குங்குலியப்

*அரிய சாதனைகள் வலிமையினால் அல்ல; விடாமுயற்சியால்த்தான் சாதிக்கப்படுகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைக்கும் பேதந் தெரியாத நிலைதான். கைநூல் போய், கைத்தொலைபேசி இடம்பிடித்து விட்டது. சம்மதம் (எம்மதமும்) சமரசம் பேசுவதின் அர்த்தம் புரியாமல் வாழ்கின்றனர். இந்துமதம் எது? சைவ சமயம் எது? எனத் தெரியாத, புரியாத நிலைப்பாட்டிற்கு நாம் பின்தள்ளப்பட்டிருக்கிறோம். கிறீஸ்தவர்கள், இந்து மதத்தில் இருக்கும் பெலவீனம் அவர்களை மதம் மாறச் செய்கிறது எனப் பேசியும், எழுதியும் வருகின்றனர். பல மதவாதிகள், பல தாபனங்கள், அமைப்புக்கள், சபைகள் நம்முள் ஊடுருவி செல்வாக்குப் பெறுகின்றனர். விவேகானந்தர் மனப் பெலவீனம் உள்ளவர்களை- மனத்திடம் உள்ளவர்கள் மாற்றிவிடு கிறார்கள் எனச் சொன்னார். புதிய பொருந்தாத, சைவ நெறியுடன் தொடர்பில்லாத கடவுள் வழிபாடு திட்டமிட்டுப் புகுத்தப்படுகிறது. இதைச் சைவசித்தாந்திகள் கண்டும் காணாதவர்போல் இருக்கிறார்கள். சிலர் அப்படியே ஆகட்டும் என்று சொல்லி ஏற்றுக்கொள்வர். காலத்துக்கு ஏற்ற மாற்றம் வேண்டும் என்போரும் சைவ நெறியை நலிவடையச் செய்பவர்களே. அன்பே சிவம் என்பதை வம்பே சிவம் என்றெழுதிக் கொச்சைப்படுத்தவும் செய்வர். பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள் எனப் பாரதி பாடியதை நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய காலமிது.

சமகால நோக்கில் இன்றைய சைவசமையத்தின் நிலைப்பாட்டையும், நாவலர் யுகத்தில் நம் நாட்டுச் சமயத்தின் நிலையையும் ஒப்பீட்டாய்வு செய்யின் உண்மையான தளம் புலப்படும். இன்று கடல் கடந்த சீமைகளில் இடம்மாறி வாழும் சைவ சமயக்காரர் மதமாற்றம் செய்யப்படுகின்றனர். மடிநிரப்பும் இசு மாத்தரால் வடபுல சோதிடர்களால், சாமி மார்களால் ஏமாற்றம் அடைகின்றனர். அன்று ஒரு நாவலர் என்ற மாமனிதர் (தனியாக நின்று) சைவ சமயத்தையும், தமிழ்ப் பாசையையும், தமிழ்ச் சமுதாயத்தையும் காப்பாற்ற வீறுகொண்டு எழுந்தார். தன் முழுமையான ஆளுமை, முயற்சி, நேரம் என்பவற்றை ஒரு முகமாக்கி ஒரு இரட்சகராகத் தொழிற்பட்டார். அவரின் தொண்டால் நாம் சைவ சமயிகளாய் நடமாடுகின்றோம். அன்றைய புத்திசீவிகள்- அந்தணப் பெரியார்கள் "சற்குருநாத சுவாமிகள்" எனப் போற்றினர் நாவலர் பெருமானை.

சைவம் சிவசம்பந்தமானது; சைவசமயிகள் சிவசம்பந்தம் உள்ளவர்கள். எனவே சிவபெருமானையே முழுமுதற் கடவுளாய் வழிபட்டவர்கள். வழிபட்டு வருகின்றனர். இதற்கான சிவசின்னங்கள், நடைமுறைகள், ஒழுகலாறுகள், ஆசார அனுட்டானங்கள், உணவு நியமம், வழிபாட்டு முறைகள், தத்துவங்கள், சாத்திர தோத்திரங்கள், புராணங்கள் போன்ற பல அம்சங்கள் வரையறை செய்யப்பட்டுள்ளன. இவைபோன்ற சைவ சமயச் சிந்தனைகள் காலந்தோறும் நிதானமாய் வகுக்கப்பட்டு ஏட்டில் எழுதப்பட்டுள்ளன. இவற்றைப் புதுக்கியும், திருத்தியும், ஒவ்வாதனவற்றை மாற்றியும் நடைமுறைப்படுத்தப் பலர் முயன்றார்கள். இவற்றைச் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்க்க நாம் தவறக்கூடாது.

**சிவனெனும் ஓசையும் சைவமெனும் பாசையும்.**

சிவனெனு மோசை யல்ல தறையோ வுலகிற்
திருநின்ற செம்மை யுளதே
அவனுமோர் ஐய முண்ணி யதளாடை யாவ
ததன் மேலோ ராடலரவம்

*தவறுகளை ஒப்புக்கொள்ள மறுப்பதைவிட வேறு அவமானமில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவணளவுள்ள வுளகு கரிகாடு கோயில்
கலனாவ தோடு கருதில்
அவனது பெற்றிகண்டு மவனீர்மை கண்டு
மகனேர்வர் தேவரவரே.

4:8.1 - திருமுறை.

சைவ சமய மேசமயம்
சமயாதீதப் பழம் பொருளைக்
கைவந் திடவே மன்றுள் வெளி
காட்டும், இந்தக் கருத்தை விட்டுப்
பொய்வந்து உழலும் சமய நெறி
புகுத வேண்டாம், முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேர வாருஞ் ஜகத்தீரே.

30 காடும் கரையும்- 2. தாயுமானவர்.

சமயாதீதப்பழம் பொருளை- சமயங்களுக்கு எட்டாத முதல்வனை, மன்றுள்- தில்லையுள், இந்தக் கருத்தைவிட்டு - இந்த உண்மையினின்று பிசகி, பொய் வந்துழலும் சமய நெறி- தத்துவத்தினின்று தவறும் போலிச்சமய நெறிகளிலே, சிவம்- செம்மை என்ற வேர்ச் சொல்லில் இருந்து பிறந்தது. செம்மை, நேர்மை, சிறப்பு, மங்கலம், சுகம் என்ற பண்புகளையும் செந்நிறத்தையும் குறிப்பதுதான் சிவம் என்ற பாவனை. கவலை இல்லாதவன் சிவலை என்பார் திருவாசக சுவாமிகள் (ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள்) சிவலை. சிவன்- செந்நிறத்தன், வெண்ணீற்றன் அவன். அவனே சிவபெருமான். அதைச் செம்பொருள் என்றார் செந்நாப் போதார்.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம் பொருள் காண்ப தறிவு.

-மெய்யுணர்தல் 358. தமிழ் வேதம்.

“எல்லாப் பொருளினுஞ் சிறந்ததாதலின் வீடு சிறப்பெனப்பட்டது. தோற்றக் கேடுகள் இன்மையின் நித்தமாய், நோன்மையாற் தன்னை ஒன்றுங் கலத்தலின்மையால், தூயதாய்த் தான் எல்லாவற்றையும் கடந்து நிற்கின்ற முதற்பொருள், விகாரமின்றி, எஞ்ஞான்றும் ஒரு தன்மைத்தாதல் பற்றி அதனைச் செம்பொருள் என்றார்” பரிமேலழகர்.

முனைவன் வாலறிவன் என்ற பெயரும் சிவனோடு தொடர்புடையன.

சிவம் சார்ந்த செந்நெறியில் வாழ்பவர்கள்தான் சைவ சமயத்தவர்கள். சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் போன்றவர்கள் சைவதுரந்தரர்கள். இவர்கள் எது சைவம், எது இந்து சமயம் என விளக்கி ஆங்கிலத்தில் இருநூல்கள் வெளியிட்டுள்ளார். ஆங்கிலமூலம் கற்ற மாணவர்கள் இந்துசிம், சைவாசிம் என்ற பாடநூல்களைப் படித்து பரீட்சை எழுதி பாகம் பண்ணினார்கள்.

*ஆசை புத்தியை மறைக்கும்போது அறிவு வேலை செய்யாமல் போய்விடுகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனையே சைவனாகக் காட்டும் சைவத்திருமுறைகள்.

சீருறு தொண்டர் கொண்டடி போற்றச்
செழுமலர் புனலொடு தூபந்
தாருறு கொன்றை தம்முடி வைத்த
சைவனார் தங்கிட மெங்கும்
ஊருறு பதிக ளுலகுடன் பொங்கி
யொலிபுனல் கொளவுடன் மிதந்த
காருறு செம்மை நன்மையால் மிக்க
கழுமல நக ரெனலாமே.

3.118.3 (திருமுறை)

சைவத்த செவ் வுருவன் திருநீற்றன்னுரு மேற்றன்
கை வைத் தொரு சிலையால் அரண் மூன்றும் எரி செய்தான்
தெய்வத்தவர் தொழுதேத்திய குழகன்திருச் சுழியல்
மெய்வைத்தடி நினைவார்வினை தீர்த்தல் எளிதனறே.

7:82.7 (திருமுறை)

பாழ்ச்செய் விளாவிப் பயனிலியாய்க் கிடப்பேற்குக்
கீழ்ச்செய் தவத்தாற் கிழியீடு நேர்ப்பட்டுத்
தாட்செய்ய தாமரைச் சைவனுக்கென் புன்தலையால்
ஆட்செய் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

8:40.9 (திருவாசகம்)

கிழியீடு- பொற்கிழி, பொன்முடிப்பு, நிதிப்பொதி
பாழ்ச்செய்- பாழான வயல், பயனிலி- பயனின்றி

ஈங்கோய் மலையில் எழிலது காட்டியும்
ஐயாறதனில் சைவனாகியும்.

மேல்.4- வரி 84-85.

அனலமே! புனலே அனிலமே! புவனி
அம்பரா! அம்பரத்து அளிக்கும்
கனகமே! வெள்ளிக் குன்றமே! என்றன்
களைகணே! களைகண் மற்றில்லாத்
தனியனேன உள்ளம் கோயில் கொண்டருளும்
சைவனே! சாட்டியக் குடியார்க்கு
இனிய தீங்கனியாய் ஒழிவற நிறைந்(து) ஏழ்
இருக்கையில் இருந்தவா(று) இயம்பே.

9:15.6 திருவிசைப்பா.

அனலம்- நெருப்பு, புனல்- நீர், அனிலம்- காற்று, புவனி- பூமி, அம்பரம்- விண், களைகண்- பற்றுக்கோடு, கொழுகொம்பு, ஏழிருக்கை. சாட்டியக்குடியில் உள்ள கோயில். சைவன் சிவம் (மங்கலம்) சைவன் சிவபெருமானைக் குறிக்கும்போது, சிவன் என்னுஞ் சொல் பண்பினை உணர்த்தும்.

புலவர் பி. நடராஜன்.

*நல்ல எண்ணத்தோடு இரு. அது உன் நடத்தையைப் பாதுகாக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வண்ணஞ் சிவனும் சைவனும் ஒன்றாகப் பேசுவதுபோல, சைவமுஞ் சிவமும் வேறுபடாதவையே. இதையடுத்து இன்று பலராலும் இந்துமதம் என்று பேசப்படும் சமயம் சைவமன்று.

இறைவனை இந்து எனத் திருமுறைகள் குறிப்பிடவில்லை. இதைப் புரிந்துகொள்வது சைவசமயிகட்கு முக்கியமாம். இந்தச் சமயம் பற்றிய உண்மைகளைத் தாயுமான சுவாமிகள், திருமூலர் வாக்கினால் அறிவாம். எனவே சிவமே சைவம், சைவமே சிவம். சைவம் சிவசம்பந்தம் உடையது. சிவசம்பந்தம் உடையவர்கள் சைவர்கள்.

"தெய்வம் சிவமே சிவனருள் சமயம்
சைவம், சிவத்தொடு சம்பந்தம்"

என்றார் சிற்றம்பல நாடிகள்.

வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனும் தன்மையோடுஞ் சைவமாம் சமயம் சாரும்
ஊழ்பெறல் அரிது சாலவுயர் சிவஞானத்தாலே
போழிள மதியினானைப் போற்றுவர் அருள்பெற்றாரே.

-சிவஞானசித்தியார்.

சிவனொ டொக்குந் தெய்வம் தேடினும் இல்லை
அவனொ டொப்பார் இங்கு யாரும் இல்லை.

-திருமந்திரம் 5.

சைவம் சிவனுடன் சம்பந்தம் ஆவது
சைவந் தனையறிந்தே சிவஞ் சாருதல்
சைவம் சிவம் தன்னைச் சாராமல் நீவுதல்
சைவம் சிவானந்தம் சாயுச்சியமே.

-திருமந்திரம் 1512

சாராமல் நீவுதல்- சார்ந்து நில்லாமல் இரண்டறக் கலத்தல், சாருதல்- பொருந்துதல். இந்நிலையுடையவர் ஓரொருகால் சிவத்துடன் பொருந்தி நிற்பவர். சமாதியிற் பொருந்தாது. சிவம் தம்மிடம் பொருந்தி இருத்தலை உணர்தல். இந்நிலை பெற்றவர் இவ்வுலகிலும் மேல் உலகிலும் ஒன்றித்து நிற்பர். இவர் மீண்டும் வாரா நெறி கண்டவர்கள்.

(தொடரும்...

## ஆலயத்துள் வேல் இருக்கப் பயமெதற்கு

ஆற்றருகோடு கோவில்கொண்ட வேல் வேல்
ஆறுமுகம் குடியிருப்பதைக் காண் காண்
நேற்றோடு போக வில்லை நாள் நாள்
நினைவிருத்தி நீவணங்கிப் பார் பார்
தோற்காத நிலைவரும் தன்மை தன்மை
துயர்யாவும் நீங்கிவிடும் உண்மை உண்மை
ஆற்று நீரில் நீ இறங்கி(மன) அழுக்கற்று அகற்று
ஆலயத்தில் வேல் இருக்கஉனக்குப் பயமெதற்கு எதற்கு.

*– சின்னப்பு தனபாலசிங்கம் –*

*வெற்றி என்பது முழுத் தியாகமும் செய்த பின்னரே கிடைக்கக்கூடிய ஒன்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | | |
|---|---|---|---|
| வ. ஆனந்தலிங்கம் குடும்பம் | | கனடா | 1000. 00 |
| நடராசா சோபனா | | ஹற்றன் | 3000. 00 |
| அ. குமாரவேல் ஆசிரியர் | | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| க. இராசேந்திரம் | | வறணி | 1000. 00 |
| வ. துரைராசலிங்கம் | | சுன்னாகம் | 1500. 00 |
| S. சந்திரசேகரம் | | வல்வெட்டித்துறை | 21200. 00 |
| வீ. பூபாளன் | | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| க. கருணாநிதி | | அச்சுவேலி | 10000. 00 |
| க. சபாநாதன் | | கொழும்பு | 2000. 00 |
| செ. டிலக்சனா | | கனடா | 2000. 00 |
| சின்னத்துரை ஜெயக்குமார் | (குகன் ஸ்ருடியோ) | கனடா | 10000. 00 |
| த. சிவகுமாரன் குடும்பம் | | சுன்னாகம் | 500. 00 |
| சு. சாந்தகுமார் | | பளை | 1000. 00 |
| சிவா நறுமணப் பூங்கா | | யாழ்ப்பாணம் | 15000. 00 |
| தி. கோபாலகிருஷ்ணன் | | புத்தூர் | 1500. 00 |
| நா. கந்தப்பு | | அச்சுவேலி | 10000. 00 |
| சி. நிருஷாந் | | கரணவாய் மேற்கு | 2மூடை நெல் |
| நவிக்கா கிருபாகரன் | | வல்வெட்டி | 10000. 00 |
| அகல்யா கிருபாகரன் | | வல்வெட்டி | 5000. 00 |
| T. ரமணன் | | லண்டன் | 5000. 00 |
| இ. நடராஜா | தாவடிச்சந்தி | கொக்குவில் | 3000. 00 |
| Dr R. ராமச்சந்திரன் | | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| நடேசமுத்து பிரசாத் | | அச்சுவேலி | 10000. 00 |
| சிவகுமாரி உதயகுமார் | | திக்கம் | 10000. 00 |
| N. குலசேகரம் | | அச்சுவேலி | 1000. 00 |
| ச. இந்திரகுமார் | தோப்பு | அச்சுவேலி | 3000. 00 |
| தெ. தயாளன் | | சுழிபுரம் | 5000. 00 |
| K. ரவீந்திரன் | | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| க. திவாகர் | | மானிப்பாய் | 2000. 00 |
| குணரத்தினம் நாகேஸ்வரி | | கொழும்பு | 1500. 00 |
| S. சுசீபன் | | நெல்லியடி | 1500. 00 |
| S. மிகுந்தலா | | கரவெட்டி | 2000. 00 |
| திருமதி ரட்ணம் சறோஜா | | அளவெட்டி | 1மூடை அரிசி |

*கடின உழைப்பு தெய்வ வழிபாட்டிற்குச் சமம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வ. தர்ஷிகா | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| S. தினேஸ்குமார் | கொழும்பு | 2000. 00 |
| சி. செந்தில்ராம் | கொழும்பு | 2000. 00 |
| A. ஐயாசாமி | கண்டி | 1000. 00 |
| ந. லோகநாதன் | கண்டி | 2000. 00 |
| சின்னையா பொன்னம்மா | கரவெட்டி | 5000. 00 |
| பொன்னுத்துரை குகநாதன் | கொக்குவில் | 25000. 00 |
| இராஜகுரு செல்வகுமார் | திருகோணமலை | 10000. 00 |
| செ. நடராஜா குடும்பம் | கரணவாய் | 5000. 00 |
| ந. சத்தியவாணி | சித்தங்கேணி | 5000. 00 |
| பி. குருகுலசிங்கம் | வவுனியா | 1000. 00 |
| க. லோகேஸ்வரன் குடும்பம் | கொழும்பு 1மூடை அரிசி, மரக்கறி | 2000. 00 |
| செ. முத்துக்குமாரசாமி | உடுப்பிட்டி | 500. 00 |
| S. கிருபாகரன் | கொக்குவில் | 1000. 00 |
| து. ரங்கநாதன் | இணுவில் | 2மூடை அரிசி |
| மு. கணேசலிங்கம் | குப்பிளான் | 5000. 00 |
| சி. துரைசிங்கம் | உடுவில் | 5000. 00 |
| திருமதி தனபாலசிங்கம் | கோப்பாய் | 3000. 00 |
| ஷாலினி தேவேந்திரா | உரும்பராய் | 1000. 00 |
| சுவாமிநாதன் நினைவாக | ஆவரங்கால் | 10000. 00 |
| வை. இராஜரத்தினம் | சிறுப்பிட்டி | 10000. 00 |
| சி. நிஷாந் | புன்னாலைக்கட்டுவன் வடக்கு | 3000. 00 |
| கா. தயாபரன் | கோண்டாவில் | 6மூடை அரிசி |
| கா. வைக்கிரன், கா. புஸ்பராணி | சுன்னாகம் | 5000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடர்ஸ் | யாழ்ப்பாணம் | 2புட்டி பருப்பு |
| பாபு வெதுப்பகம் | புன்னாலைக்கட்டுவன் | 2மூடை அரிசி |
| செ. சிவசுப்பிரமணியம் | மல்லாகம் | 5000. 00 |
| க. சிதம்பரநாதன் | மல்லாகம் | 1000. 00 |
| T. பிரிதா இடைக்காடு | அச்சுவேலி | 2000. 00 |
| இராசமூர்த்தி வினோதினி | திக்கம் | 2000. 00 |
| ஆ. பஞ்சலிங்கம் குடும்பம் | பிரான்ஸ் | 10000. 00 |
| ஆ. விஸ்வலிங்கம் | கல்வியங்காடு | 1000. 00 |
| இ. வசந்தகுமார் | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| சோ. தனராஜா | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| G. மகேஸ்வரி | கரவெட்டி மேற்கு | 1000. 00 |
| இ. திருக்குமரன் | மானிப்பாய் | 1000. 00 |
| கு. தியாகராஜக் குருக்கள் | நீர்வேலி 1மூடை அரிசி | 2000. 00 |

(தொடரும்...

*உண்மை ஒன்றுதான் என்றும் நிலைத்துநிற்கும் தகுதியைப் பெற்றிருக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாண்டவரின் அஞ்ஞாதவாசம்

– திரு நா. நல்லதம்பி அவர்கள் –

பாண்டவர் தமக்குத் துரியோதன னால் விதிக்கப்பட்ட பன்னிரண்டு ஆண்டு வனவாச காலத்தை முடித்துக்கொண்டனர். இனிமேல், பதின்மூன்றாம் ஆண்டில் அஞ் ஞாதவாசத்தை மேற்கொள்ளல் வேண்டும்.

அதனால், இதுவரை தமக்குப் பல வகையிலும் உதவிசெய்த பிராமணர்களுக் கும் ஏனையோருக்கும் தருமன் நன்றி கூறிய தோடு, தமக்கு ஆசிகூறி வாழ்த்தி அனுப்பும் படியும் கேட்கிறான்; மீண்டும் நாம் எமது இராச்சியத்தைப்பெற்று வாழுங்காலம் எப் போது வருமோ?" எனக் கண்ணீர் மல்கினான் தருமராசன்.

அப்போது தெளம்மியர், "தருமசீலனே! இந்நேரம் நீவிர் மனந்தளரக்கூடாது. மகா பலிச் சக்கரவர்த்தியிடமிருந்து மூன்றடி மண் கேட்டு முழு இராச்சியத்தையுமே கைப்பற்று வதற்கு மகாவிஷ்ணு வாமனனாக மனிதப் பிறவி எடுக்கவில்லையா? இராவணனைக் கொல்வதற்காகத் தசரதனுக்கு மகனாகப் பிறந்து, வனவாசம் சென்று, இராமன் சீதை யோடும் இலக்குமணனோடும் அல்லற் பட்டதை நீவிர் அறியவில்லையா? இப்படிக் காரிய சித்திக்காக எத்தனையோ மகாத்மாக் கள் துன்பப்பட்டிருக்கிறார்கள். அதுபோல, இதுவரை சகித்துக் கொண்டதுபோல நீயும் இந்த அஞ்ஞாதவாச காலத்தையும் அவதான மாகக் கழித்து வெற்றி பெறுவாயாக" என வாழ்த்தியதோடு, அஞ்ஞாதவாச காலத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் எனப் புத்தி மதிகளும் கூறினார்.

இவ்வாறு பிரியாவிடை பெற்ற பாண் டவர் இரவோடிரவாக ஒரு காட்டுப் பகுதிக் குச் சென்று விட்டனர். அங்கு அர்ச்சுனனைப் பார்த்து, அஞ்ஞாதவாச காலத்தை எங்கே எப்படியிருந்து கழிக்கலாம், தம்பி! கூறுவாய்" எனத் தருமன் கேட்கிறான்.

"பாஞ்சாலம், மத்ஸயதேசம், கலிங் கம், மகதம் முதலிய நாடுகள் மிகவும் நல்லவை. இவற்றுள் விராடனுடைய மத்ஸய தேசமே எனக்குப் பிடித்தது" என்கிறான் அர்ச்சுனன்.

"ஆம்! விராட அரசன் தருமநெறி நிற்பவன்; துரியோதனனின் துர்புத்திகேட்டு, அவன் பக்கஞ் சேரமாட்டான். எனவே நாம் விராடனின் நிழலில் மறைந்து வாழ்வோம்" என்றான் தருமன். அத்துடன், "பாஞ்சாலியின் கற்புநெறி எம்மைக் காப்பாற்றும்" என்றுங் கூறித் தம்பிமாரைச் சாந்தப்படுத்தினான் தரு மன். பாண்டவர் வனவாசத்தை முடிவு செய் தமை பற்றியோ, இனிமேல் அஞ்ஞாத வாசத்தை எங்கே தொடங்குவார்கள் என்பது பற்றியோ விராடனுக்கு எதுவும் தெரியாது. இந்த நிலையில் பாண்டவர் மாறுவேடத்தில் விராடனது அரண்மனைக்குள் போகிறார்கள்.

பாண்டவருடைய அரண்மனையில் தாம் வகித்துவந்த பதவிகளின் அடிப்படை யில் தமக்கு வேலை தரும்படி விராடனிடம் வேண்டுதல் செய்கிறார்கள். தனது பெயர் கங்கன் என்றும் தான் முன்பு அரசனுக்கு நீதிநெறிபற்றி அவ்வப்போது எடுத்துக்கூறுவ தாகவும் தருமன் கேட்கிறான். பீமன், வாலா லன் என்ற பெயர் சொல்லி சமையல் வேலை யிலும், அர்ச்சுனன் (அலி வடிவமெடுத்து) அந்தப்புர மகளிருக்கு ஆடல் பாடல் பயிற்று பவனாகவும், நகுலன், குதிரைப் பாகனாகத் தாமக்கிரந்தி என்று பெயர் சொல்லியும், சகா தேவன் தந்ரீபாலன் ஆக, மாடு மேய்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையிலும் சேர்ந்தார்கள். பாஞ்சாலி, ஸைரந்திரி என்ற பெயரோடு அந்தப்புர மகளிருக்குத் தோழி ஆகிறாள்.

விராடனது மனைவி சுதேஷ்ணைக்கு கீசகன் என்று ஒரு சகோதரன் இருந்தான். அவன் புகழ்பெற்ற வீரன் என்பதால் விராடனது அரண்மனையில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தான்.

பீமன், கீசகன், பலராமன் ஆகிய மூவரும் மல்யுத்தத்தில் ஒப்பற்ற வீரராக இருந்தமையை நாம் அறிவோமாக.

இந்தக் கீசகன், பாஞ்சாலியிடம் காம வசப்பட்டுச் சகோதரி உதவியோடு அவளை அடைய முயன்றான்.

பாஞ்சாலி இதனை இரகசியமாக பீமனிடம் தெரியப்படுத்தினாள். பீமன் திட்டம் போட்டு அவனைக் கொன்று விட்டான். தனக்கு உதவியாக இருக்கும் கந்தர்வர்களே கீசகனைக் கொலை செய்ததாகப் பாஞ்சாலி கூறிவிட்டாள்.

இதனால் கோபங்கொண்ட விராடனின் மனைவி, பாஞ்சாலியை வேலையை விட்டுப் போய்விடும்படி கேட்டாள். இன்னும் ஒருமாத காலத்தில் அஞ்ஞாதவாசம் முடிவுக்கு வந்துவிடும். இதனை மனதில் எண்ணிய பாஞ்சாலி, ஒருமாதம் பொறுத்துக் கொள்ளும்படி மன்றாடினாள்; அரசியாரும் அதற்கு இணங்கினார்.

இஃதிவ்வாறிருக்க, கீசகன் கொலையுண்ட செய்தி அத்தினாபுரத்துக்கு எட்டியது. அதனால் கீசகனைக் கொல்லக்கூடிய பலம் படைத்தவர் பீமன் அல்லது பலராமன் என்பதைத் தெரிந்துகொண்ட துரியோதனன், விராட நாட்டின்மீது படையெடுத்துப் போனால் பீமன் இருப்பது தெரியவரும். அப்படியானால் பாண்டவரை மீண்டும் வனவாசத்துக்கு அனுப்பி வைக்கலாம் எனத் திட்டம் வகுத்து, சுசர்மன் என்ற வீரனைப் பசுக் கூட்டத்தைக் கவர்வதற்கு அனுப்பினான். விராடன், சுசர்மனோடு போரிட்டதில், விராடனைச் சிறைப்படுத்திச் சுசர்மன் கொண்டு போனான். அதுகேட்ட தருமன், பீமனை அனுப்பினான். பீமன் சுசர்மனைக் கொன்று விராடனை மீட்டு வந்தான். அந்த நேரம், துரியோதனனும் கர்ணன், பீஷ்மர், துரோணர் முதலியோரும் வேறு மார்க்கமாக விராடனது நாட்டில் புகுந்தனர். விராடன் ஊரில் இல்லாத நேரம், அவன் தமக்குச் செய்த உதவிக்குக் கைம்மாறாக, விராடனது மகன் உத்தரன் என்பவனைத் தேரில் இருத்தி அர்ச்சுனன் (அலி) தேரைச் செலுத்திக்கொண்டு போய், வன்னிமரப் பொந்தில் ஆயுதங்களை எடுத்து துரியோதனன் முதலியோரை ஓட ஓட விரட்டி அடித்தான். பீஷ்மர், துரோணர் முதலியோர் அர்ச்சுனனை அடையாளங் கண்டுகொண்டனர். ஆயினும் அர்ச்சுனன் எல்லோரையும் தோற்கடித்து, அவர்களது அங்க வஸ்திரங்களைப் பறித்துக் கொண்டான்.

பாண்டவர், நிபந்தனையின்படி 13 வருடம் முடிக்கவில்லை எனத் துரியோதனன் தூது அனுப்பியிருந்தான். "காலக்கெடு முடிந்ததோ முடியவில்லையோ என்ற கணக்கைப் பீஷ்மரிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்" எனத் தூதுவரைத் திருப்பி அனுப்பி வைத்தான் அர்ச்சுனன்.

விராடன், சுசர்மனோடு போர் புரியப் போய்த் திரும்பி வந்தபோது தனது மகன் உத்தரன் இன்னொரு திசையில் போருக்குப் போன செய்திகேட்டு மனங் கலங்கினான்.

ஆயினும் உத்தரன் வெற்றிபெற்றது யாரால் என்ற விபரம் அறிந்து மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினான் உத்தரனின் தந்தை!

இப்போது விராடனது குடும்பம் பாண்டவருக்குக் கடமைப்பட்டதாக எண்ணித் தனது உபப்பிலாவியம் என்ற நகரில் வசிப்பிடம் அமைத்துக் கொடுத்தான் விராடன்.

*வாழ்க்கை என்கின்ற மரத்துக்கு இளமையில் கற்பது வேர் போன்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபப்பிலாவிய நகரத்துக்கு பாஞ் சாலன், பலராமன், கிருஷ்ணன் ஆகியோர் வந்து சேர்ந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில், விராடன் தன் மகள் உத்தரைக்கும் அர்ச் சுனன் மகன் அபிமன்யுவுக்கும் திருமணஞ் செய்து வைத்து மகிழ்ந்தான்.

இனிமேல், "கண்ணன் சொற்படி நடப் போம்" என்று தருமன் கூறினான்; கண்ணன் துவாரகைக்கு மீண்டான். ஈ இருக்கும் இடந் தானும் பாண்டவருக்குக் கொடுக்க மறுத்த துரியோதனன் கூட்டத்தாருக்கும் பாண்டவருக் கும் இடையில் மகாபாரதப் போர் ஆரம்ப மானது எப்படி என்பது பற்றியும் போரின் முடிவுபற்றியும் மாணவர் விரிவாகப் படித்து அறிந்து கொள்வார்களாக.

## வெற்றிலை, எலுமிச்சம்பழத்தின் சிறப்பு

தாவரங்களுக்கு நம்பமுடியாத அபூர்வ சக்திகளும் உண்டென்கின்றன ஆராய்ச்சிக் கட்டுரைகள். அந்தவகையில் வெற்றிலையும் நமது வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த வெற்றிலையை வைத்து நாம் ஆரம்பிக்கின்ற காரியங்கள் அனைத்தும் வெற்றியைத் தரும் என்பதால் வெற்றிலை (வெற்று+ இலை) என்று அழைக்கப்படுவதாகச் சிலர் கூறுவர். ஆனால் இந்த வெற் றிலைக் கொடி பூக்காமல், காய்க்காமல், பழுக்காமல் வெறும் இலையை மட்டுமே தருவதால் இது வெற்றிலை (வெற்று+இலை) என்று அழைக்கப் படுகிறது. முற்காலத்தில் ஒருவர் மற்றொருவருக்கு ஒரு பொருளை விற்கவோ அவரிடமிருந்து ஒரு பொருளை வாங்கவோ வேண்டுமென்றால் அதற்குரிய பணத்தை ஊர்ப் பெரியவர்களின் முன்பாக வெற்றிலை பாக்குடன் சேர்த்துக் கொடுத்தே மாற்றிக்கொள்வர். அப்படி வெற்றிலையைச் சேர்த்துக்கொள்வதன் மூலமாக உறவும் வளரும் என்று நம்பப்பட்டது. அதனால்த்தான் இன்றும் கல்யாணத்துக்கு முன்பாக "நிச்சயதாம்பூலம்" மாற்றும் வழக்கம் வெற்றிலையை அடிப்படையாகக் கொண்டு நடைபெறுகிறது. குருகுலத்தில் குருவுக்கு சீடனும், குடும்பங்களில் கணவனுக்கு மனைவியும் வெற்றிலை மடித்துக் கொடுப்பது மற்றும் வீட்டுக்கு வருபவர்களுக்கு வெற்றிலை கொடுப்பது போன்ற வழக்கமும் இந்த நோக்கத்தைக் கருத்திற்கொண்டே கடைப்பிடிக்கப்பட்டன. இவை மட்டுமன்றி தெய்வத்துக்கும் நமக்கும் இடையிலான அன்பும் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும் என்ற பாவனையாகத்தான் அர்ச்சனையின்போது மறக்காமல் இப்போதும் இறைவனுக்குத் தாம்பூலம் சமர்ப்பிக்கின்றோம்.

அடுத்து எலுமிச்சம்பழம். இந்த எலுமிச்சம்பழமானது தோல் காய்ந்து போனாலும் அதனுள் சாறு வற்றாமல் இருக்கும். அதுபோன்று நம்மிடையே இருக்கின்ற உறவு என்றென்றும் வற்றிவிடாமல் இருக்கவேண்டும் என்ற பாவனையில்த்தான் ஒருவரைச் சந்தித்தவுடன் எலுமிச்சம்பழம் கொடுப்பதும், கொண்டாட்டங்களில் கலந்து கொள்பவர்களுக்கு (வெற்றிலைப் பையினுள்) எலுமிச்சம்பழம் கொடுப்பதும் வழக்கமாக இருந்து வருகிறது.

*எத்தனை படிகள் என்று மலைக்காதீர்கள். எல்லாப் படிகளும் கடக்கக் கூடியவையே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்வில் இசையின் மகத்துவம்

– திருமதி இ. விஜயலட்சுமி அவர்கள் –

அமிழ்திலும் இனிய முத்தமிழில் ஒன்றான இசைத்தமிழ் தொல்காப்பியர் காலத்துக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வளர்ச்சியடைந்த நுட்பமான கலையாக விளங்கியது. பழந்தமிழ் மக்கள் எவ்வாறு தங்கள் வாழ்க்கையோடு பண்பாட்டோடு வழி படும் தெய்வங்களோடு இசையும் (யாழ்) தாளம் (பறை) என்பவற்றைக் கருப்பொரு ளாக அமைத்துக் கொண்டிருந்தனர் என் பதுடன் எழுத்துக்களுக்கும் இசைக்கும் இடையேயுள்ள உறவை உணரும் நுட்ப மான அறிவையும் பெற்றிருந்தனர். ஒலி வடிவமான இறைவன் படைத்த உலகம் ஒலிமயமாகவே விளங்குகின்றது. இந்த ஒலி யிலிருந்து சொற்களும் இசையும் பிறந்தது.

கவின் கலைகளில் மிகவும் சிறந்த தான இசை நோயினால் பாதிக்கப்பட்டவர் களை குணமளித்து அனைவருக்கும் மன அமைதியையும் ஆனந்தத்தையும் அழிக்க வல்லது. இறைவன் ஒலிவடிவமாக விளங்கு கிறான் என்பதை இறையடியார்கள் பலர் குறிப்பிட்டுள்ளனர். ஆதியிலே வார்த்தை (ஒலி) இருந்தது. அந்த வார்த்தை இறை வனாக இருந்தது. ஒலிவடிவமான இறை வனே இவ்வுலகிலுள்ள அனைத்தையும் படைத்தவன் என்பது உண்மைச் சான்றாகும்.

இவ் இசையானது செவிக்கு இன்பம் ஊட்டும் அளவில் நிற்காமல் உள்ளத்தை பண்படுத்தி பேரின்பப் பேற்றையும் தர வல்லது. இசைப்பாட்டானது இனிய சுவை உள்ள சொற்களால் மெல்லோசையுடன் இயற்றப்பெற்று நல்ல பொருட் செறிவு அமைந்து எதுகை மோனை முதலிய இலக் கணங்களையும் உடையதாகும். இசை யானது நாதம் சுருதி என்பவற்றால் பிரகாசம் பெற்று விளங்குகிறது. இயலும் இசையும் கலந்த நிலையே உள்ளத்தில் உணர்ச்சி எழுப்பி இன்பம் ஊட்டுவதாகும்.

இறைவன் ஒலி வடிவாக இருக்கிறான் என்பதை அப்பரடிகள் "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" எனக் கூறியுள்ளார். இறை வன் ஏழு இசையாய் இசைப்பவனாய் விளங்கி அருள்பாலிக்கின்றான் என சுந்தரர் பாடியுள்ளார். ஓம் எனும் பிரணவ மந்திரம் அகிலத்தின் இயக்கத்தினைக் கட்டுப்படுத் தும் அதிர்வினைப் பற்றிக் கூறுகின்றது. இதனையே சிவநடனமும் எடுத்தியம்புகிறது. இயற்கை தரும் இன்னொலிகளைக் கேட்டு மனிதன் சிந்திக்கிறான். இதுபோன்ற இன் னொலிகளைக் கருவிகளில் இசைப்பதற்கு அவன் முயன்றான் என எண்ணுவதற்கும் பழங்காலத்தைச் சேர்ந்த சங்கப் பாடல்கள் ஆதாரங்களாக விளங்குகின்றன.

மூங்கிலில் வண்டுகள் துளையிட்டு அந்தத் துளைகளில் காற்றுப்புகுந்து வெளி யேறும்போது இனிய ஒலி பிறந்தது. அருவி நீரின் இனிய ஓசை முழவு (முரசு) போல ஒலித்தது. வண்டின் இமிரொலி யாழின் இசையைப்போல் ரீங்காரம் செய்தது. தன் அறிவின் திறத்தால் மனிதன் பல இசைக் கருவிகளைக் கண்டுபிடிப்பதற்கு மேற்கூறிய இயற்கை தந்த இன்னொலிகள் முன்னோடி களாய் விளங்கின. இனிய யாழினது இசை ஒரு பக்கத்தில் ஒலித்தது. மறுபக்கத்தில் வண்டுகளின் இமிரிசை எழுந்தது. ஒரு பக் கத்தில் கணுக்களையுடைய புல்லாங்குழ லின் இனிய இசை காற்றில் மிதந்து வந்தது. மறுபுறம் தும்பிகள் அசைந்த பரந்த இசை

*நல்ல வாழ்க்கை என்பது கடும் உழைப்பின் பின்னால் மறைந்திருக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலித்தது. மண்ணினால் செய்யப்பட்ட மார்ச் சனை ஒருபக்கத்தில் அமைக்கப்பெற்ற முழவு முழங்கியது. மற்றொரு புறத்தில் மலையினின்று விழும் அருவி நீர் ஒலித்தது. இசையில் தேர்ச்சிபெற்ற கூத்தியர் ஒருபுறம் ஆட மறுபுறம் வாடைக்காற்று வீசுதலால் பூங்கொடிகள் அசைந்தாடின. ஒருபுறம் பாடினி பாலைப்பண் என்னும் இனிய பண்ணைப் பாட, மறுபுறம் தோகையை விரித்து ஆடும் மயிலின் குரல் எழுந்தன.

ஆதியிலே மனிதன் தன் உள்ளத் திலே எழுந்த கோபம், மகிழ்ச்சி போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்த பல்வேறு ஒலிகளைப் பிறப்பித்தான். இந்த ஒலியில் இருந்தே படிப்படியாகச் சொற்கள் பிறந்தன. முதன் முதலில் இச்சொற்களைப் பேசிச் சிரித்து மகிழ்ந்தான். இச்சொற்களைக் கொண்டு அழுது புலம்பினான். குயிலின் இசை வண்டுகளின் ரீங்காரம் ஆகியவற்றைக் கேட்டு ஆதிமனிதன் சிந்திக்கத் தொடங் கினான். அன்றும் இன்றும் நம்நாட்டில் பெரும் பாலானோர் விவசாய மக்கள். தாம் செய்யும் தொழிலுடனே நாட்டுப் பாடலை இணைத்துக் கொண்டனர். வயலில் உழவு செய்யும்போது பாட்டு, மாடு மேய்க்கும்போது புல்லாங்குழல் இசை, அறுவடைப்பாடல், குருவிகளை விரட் டும்போது ஆலோலப்பாட்டு, வயல் களை எடுப்புப் பாடல், ஏற்றம் இறைக்கும்போது பாட்டு, தமிழன் தன் அலுப்பை மாற்றி மறக் கச் செய்ய நாட்டுப் பாடல்களைப் பாடினான். மக்கள் வாழ்க்கையில் எத்தனையோ சோத னைகள், ஏமாற்றங்கள் துன்பங்கள் போன்ற வற்றை இனிய எளிய பாடல்களில் வெளி யிட்டான். வாழ்விழந்த பெண் தனக்கு உண் டான ஆற்றொணாத் துன்பத்தை ஒப்பாரியில் காட்டினாள். இப்பாடல்மூலம் உணர்ச்சி பொங்கி வழிந்தது. அவைகள் கேட்போரின் நெஞ்சைத் தொட்டன. சாலையிலே வண்டி யோட்டிச் செல்லும்போது உற்சாகத்துடன் தன் உள்ளத்தில் எழுந்த இன்ப உணர்ச்சி களையும் காதல் உணர்வுகளையும் தெம் மாங்குப் பாடல்மூலம் உணர்த்தினான்.

தமிழனுடைய வாழ்க்கையில் ஒவ் வொரு கட்டத்திலும் இசை பயன்படும் வகை யில் அமைந்துள்ளது. குழந்தையைத் தொட் டிலில் இட்டுத் தாய் தாலாட்டுப் பாடல் பாடியவுடன் குழந்தை தூங்கிவிடுகிறது. ஒவ் வொரு தொழிலிலும் ஈடுபடும்போது இசை ஒலித்துக்கொண்டே இருக்கிறது. திருமணத் தின்போது நாதஸ்வரம், தவில், நலங்குப் பாடல், லாலிப்பாடல், ஊஞ்சற் பாடல் இசைக் கப்படுகிறது. கோயில்களில் அன்றாடப் பூசைகளிலும் திருவிழாக்களிலும் பக்திப் பாடல்கள் இன்னிசையுடன் அடியார்களால் பாடப்படுகிறது. இறப்பின்போது ஒப்பாரிப் பாடல் ஒலிக்கிறது. இவ்வாறு தமிழன் வாழ்க் கையில் பல்வேறு நிலைகளிலும் இவை ஓர் இன்றியமையாத அங்கமாக கலையாக விளங்குகிறது.

நோயினால் பாதிக்கப்பட்டவன் வேத னையால் அல்லற்படும்போது அவ் வேத னையை மறக்க இசை மிகவும் பயன்படு கிறது. இசை மன அமைதியைத் தருகிறது. நோய் குணமாகிறது. கருவில் இருந்து ஐந்து வயது வரை இசையினை குழந்தை கிரகித் தால் சிறந்த அறிவாற்றல் உள்ளவர்களாக உருவாகமுடியும். ஆரம்பக்கல்வியில் இசையை அபிநயம் மூலம் அறிவினை இலகுவாகப் புகுத்த முடியும். தூக்கமில் லாமல் தவிப்பவர்கள் நீலாம்பரி இராகத் தைக் கேட்டால் தூக்கம் தானாகவே வந்து விடும். மன அமைதி இழந்தவர்கள் சாமா இராகத்தைக் கேட்டால் படிப்படியாகக் குண மடைவார். முடக்கு வாதத்தினால் அல்லற் படுவோர் துஜவந்தி இராகத்தைக் கேட்பதன் மூலம் நல்ல பயனடைவர். பூபாளம்,

*ஆற்றலைவிட ஆர்வமே வெற்றிக்கு அடிப்படைக் காரணமாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையமாருவம் இராகமும் உதயகால இராகங்கள். இவை மக்களை தூக்கத்தினின்று விழித்தெழச் செய்கின்றது. பிலஹரி இராகத்தைக் கேட்பதன்மூலம் புதிய உற்சாகம், நம்பிக்கை ஏற்படுகிறது. இதய நோய் உள்ளவர்கள் நல்ல இசையைக் கேட்பதன்மூலம் படிப்படியாகக் குணமடைவார்கள். நாதநாமக்குரியா இராகத்தை கேட்பதன்மூலம் தீய வழியை விட்டு விலகிச் சீர்திருத்திய வாழ்க்கையை நடத்த வழியுண்டு. இவ்வாறு இசையை எமது இளம் சந்ததியினர் முறையாகப் பயின்று அன்றாட வாழ்வில் இணைத்துக்கொள்ளல் வேண்டும். முதற் சங்ககாலத்தில் தமிழ் அழிந்தபோது எஞ்சிய ஒரே இலக்கியம் தொல்காப்பியம். அதிலிருந்து இன்றுவரை தமிழ் இசை மிகவும் சிறப்பாக எமது முன்னோர்களால் பேணப்பட்டது. அதனை முன்னெடுத்துச் செல்வது எமது காலத்தின் கடமை ஆகும்.

## நாம் பிறரை ஏன் நேசிக்க வேண்டும்?

உலகெங்கும் இறைவன் நிறைந்திருக்கின்றான். எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கின்றான். பார்க்கும் அனைத்தும் பரம்பொருளின் வெளிப்பாடுகளே அதனால்த்தான் அருளாளர்கள் அனைத்தையும் - மனிதர்கள் உட்பட அனைத்து உயிர்களையும் நேசிக்கின்றார்கள்.

நாம் அனைவரும் இறைவன் திருவடியை நோக்கிப் பிரயாணம் செய்து கொண்டிருக்கின்றோம். அதனால் உடன் வருபவர்கள், உடன் வாழ்பவர்கள் நம் சக திருவடி யாத்திரைக்காரர்கள் என்பதை உணர்ந்து அவர்களோடு இனிமையாகப் பேசிப் பழகி நட்புடன் இனிய வாழ்க்கை வாழவேண்டும்.

நம் உயிர் பணத்திலும், பதவியிலும், நம் ரத்தத்திலும், மூச்சுக்காற்றிலும் இல்லை. அது பிறருடன் நாம் சுயநலமற்ற அன்புடன் வாழ்வதில்த்தான் இருக்கின்றது. இதை "அன்பின் வழியது உயிர் நிலை" என்று வள்ளுவர் பெருமான் கூறுகின்றார்.

சுயநலமுடைய அன்பு மாயைக்குட்பட்டது. சுயநலமற்ற அன்புதான் இறைவன் விரும்பும் ஏற்கும் அன்பு. "அன்பே சிவம்" என்று திருமூலர் கூறினார்.

வாழ்க்கைக்கு அன்பு இன்றியமையாதது. அன்பு என்பது ஒருவழிப்பாதை போல் சிலர் நினைத்து நடக்கிறார்கள். ஆனால் அன்பு இருவழிப்பாதை என்பதுதான் உண்மை. ஒருவர்மீது ஒருவர் கொள்ளும் பரஸ்பர அன்புதான் சுமூகமாகவும் இயல்பாகவும் இனிமை தருவதாகவும் அமைகிறது. நாம் பிறர் அன்பைப் பெறுவதற்கு உரிமை உடையவர் என்று நினைக்கும் சிலர் தாங்கள் பிறருக்கு அன்பை வழங்கவும் கடமைப்பட்டு இருக்கின்றோம் என்பதை ஏனோ மறந்து விடுகின்றார்கள்.

மனித நேயம் இல்லாதவர்கள் இறைவன் அருளைப் பெறுவதில்லை.

*-ஆர்.வீ. கந்தசுவாமி-*

*சம்பாதிப்பதால் ஒருவன் பணக்காரனாவதில்லை. சேமித்து வைப்பதால்த்தான் அந்நிலையை அடைகிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கட்டுரைத்தொடர் - 25

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## பதினெண் சித்தர்களில் திருமூலர் - பாகம்- 02

இந்துசமய தத்துவ நூல்கள் அனைத்தும் மரணத்துக்குப் பின்பும் வாழ்வு உண்டு என்பதை வலியுறுத்துகின்றன. வாழும்போது ஒருவன் செய்த செயல்களின் விளைவுக்கு ஏற்ப, மரணத்துக்குப் பின்பு கர்மவினை தொடரும் எனக் கூறுகிறது. பிறவிப்பிணியில் இருந்து நீங்க வேண்டுமானால் எடுத்த மானிடப் பிறப்பினை நல்ல முறையில் பயன்படுத்தி மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டும் என வற்புறுத்துகின்றன. பல இந்து சமய சாஸ்திரங்கள் சாகும்போது ஒருவன் மனதில் மலரும் சிந்தனைப்படியே அவனது அடுத்த பிறவி அமைகிறது என அழுத்தமாக அறிவிக்கின்றன.

பிறவாநிலை அடைதலே ஆன்மப் பயணத்தின் இறுதி நிலையாகும். "பிறப்பை அறுக்கும் பெருந்தவம்", "பிறப்பினை நீக்கும் பெருமை", "தெளிவறியாதோர் தீரார் பிறப்பே" என்னும் திருமந்திரச் சொற்றொடர்கள் இக் கருத்தை வலியுறுத்துகின்றன. "பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை மறவாமை வேண்டும்" என்று காரைக்கால் அம்மையார் விடுக்கும் விண்ணப்பமும், "பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்", "பிறவாமல் காத்தாட் கொண்டான்" என்பன போன்ற மணிவாசகரின் வாக்குகளும், "அடியேன் இறந்து இங்கு இனிப் பிறவாமல் வந்து ஆட்கொள்ளே" என்ற அபிராமிப் பட்டரின் வேண்டுகோளும் "பிறப்பே தவிர்த்து என்னை ஆண்டு கொண்டு அமுதம் பெரிதளித்த" என்ற வள்ளலாரின் அனுபவமும் பிறவா நிலையே பேரின்ப நிலையெனும் கருத்தை வலியுறுத்தித் தெளிவு படுத்துகின்றன.

"மரணமிலாப் பெருவாழ்வு" என்பதன் உண்மைப் பொருள் "பிறவாமை" என்னும் பேரானந்த சுகம் என்றும் கருதலாம். பருவுடல் எடுத்துப் பிறக்காத ஆன்மா துன்பம் கலவாத இன்பத்தையும், வரம்பிலா ஆனந்தத்தையும் சுவைக்கும். இச் சுவையில் ஆன்மா நிலைப்பதைப் "பிறவாப் பெரும் பேறு" என்று குறிப்பிடுகின்றனர். மரணத்தின் பின் ஆன்மப் பயணப் பாதை இரண்டாகப் பிரிகிறது. மீண்டும் பிறந்திருக்கும் பிறவித் தொடர் என்னும் சுழல் பாதையில் சில ஆன்மாக்கள் செல்லுகின்றன. வேறு சில ஆன்மாக்கள் பிறவாமை என்னும் நேர்கோட்டுப் பாதையில் சென்று இறைவன் திருவடி அடைந்து இன்பத்தில் திளைக்கின்றன என்ற கருத்தினைப் பின்வருமாறு திருமந்திரம் விளக்குகிறது.

இக்காய நீக்கி யினியொரு காயத்திற்
புக்குப் பிறவாமற் போம்வழி நாடுமின்
எக்காலத் திவ்வுடல் வந்தெமக் கானதென்
றக்கால முன்ன அருள் பெறலாமே.

மனிதனை மனிதனாக்குவதற்குச் சில அடிப்படையான மனப் பயிற்சிகள் இன்றி யமையாததாக உள்ளன. அந்தப் பயிற்சிகளை மனித சமுதாயத்திற்கு வழங்கி மனிதர்களைப்

*சிறிய புண்களையும் ஏழை உறவினர்களையும் ஒருபோதும் அலட்சியம் செய்யாதீர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதர்களாக்கிப் பின் அவர்களை அருள் மனிதர்களாக உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்திலே எழுந்தவையே தமிழ் மொழியிலே உள்ள சித்தர் நூல்கள். சித்தர் இலக்கியங்களிலே ஒரு கலங்கரை விளக்கமாக நிற்பது திருமந்திர நூல் என்பது உலகம் முழுவதும் உணர்ந்த உண்மை. இதைப்போலவே நாம் ஆழ்ந்து கற்று உணரவேண்டிய சித்தர் நூல்கள் தமிழில் நூற்றுக்கணக்காக உள்ளன.

சித்தர்கள் என்ற சொல்லுக்குச் சித்தி கைகூடினவர்கள் என்று பொருள். யோகச் சமாதியை உகந்தவர் யாரோ அவரே சித்தர் என வரையறை செய்கிறார் திருமூலர். உடம்பிலே தெய்வ சக்தியைக் கலந்து கூடுகிற தவயோகமே சித்தர்களுடைய தவநெறியாகும். யோக நெறியில் நிற்பவர்கள் யோகம், போகம் ஆகிய இரண்டு பேற்றினையும் பெறுவார்கள். யோகத்தால் சிவ சாரூபம் பெற்று விளங்குவார்கள். யோக நெறியில் நிற்பவர்கள் இப்பூவுலகில் அடையப்பெறும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு புருடார்த்தங்களையும் பெறுவர். சக மார்க்கத்தில் உள்ள யோகியர்க்கு இம்மையில் இன்பமும், மறுமையில் முத்தியும் கிடைக்கும்.

யோகமும் போகமும் யோகியர்க்கா குமால்
யோகம் சிவரூபம் உற்றிடும் உள்ளத்தோர்
போகம் புவியிற் புருடார்த்த சித்திய
தாகும் இரண்டும் அழியாத யோகிக்கே.

திருவள்ளுவர்போலத் திருமூலரும் சிறந்த அறவோராகக் காட்சி தருகிறார். வாழ்வியலுக்குப் பயன் தரும் சீரிய அறங்கள் பலவற்றைப் பகர்ந்துள்ளார். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகள் புறப்பொருள்களை நோக்கிச் சென்று உலகியல் அறிவினைப் பெறுதற்கு உதவுகின்றன. இப்பொறிகள் பொருந்தாத பொருள்களில் அழுந்திவிடின் தீ நெறிக்கு மனிதனை இழுத்துச்சென்றுவிடும். எனவே ஐம்பொறிகளையும் மனிதன் தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்க வேண்டும். இதனையே “புலன் போன போக்கெல்லாம் போக வேண்டாம்” என்று உலகநீதியும் குறிப்பிடுகிறது. ஐம்புலன்களாலும் ஏற்படுகின்ற தீமையை விட்டவர்கள் நல்வழியில் சென்று நிலையான இன்பத்தைப் பெறுவர் என்பதைப்

“பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடு வாழ்வார்”

எனச் செந்நாப்போதருடைய திருக்குறளும் கூறுகிறது. தீமை ஏற்படும் பொழுது ஆமை தனது உறுப்புக்களை உள்ளே இழுத்துக்கொண்டு அசைவின்றிக் காட்சிதரும். இதே போலத் தீயநெறியில் செல்லும் ஐம்பொறிகளையும் தனக்குள்ளே இழுத்துக்கொள்ள வேண்டும் என்பதை “ஒருமையுள் ஆமைபோல் உள் ஐந்தடக்கி” எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது. புற உலகில் சஞ்சரிக்கும் பொறிகளைப் புறத்தே போகவிடாது உள்முகமாகச் செலுத்தப் பழகுதல் யோக நெறி நிற்பார் செய்வதற்குரிய சாதனங்களில் ஒன்றாகும். இதனைப் “பிரத்தியாகாரம்” என யோக சூத்திரத்தைச் செய்த பதஞ்சலி முனிவர் கூறியுள்ளார்.

உள்ளத்தைப் பற்றி இருக்கும் தீய உணர்வுகளையும், அறியாமை இருளையும் அறவே விலக்கிச் சிறந்த சிந்தனைகளாலும், நல்லறிவு சார்ந்த எண்ணங்களாலும் மனத்தை நிறைத்தல் வேண்டும் என்பதை “அழுக்கினை ஓட்டி அறிவை நீறையீர்” எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது. அறிவினைப் பெருக்கிக் கொள்வதற்குரிய வழிமுறைகளையும் திருமந்திரம்

*ஆற்றலைக் காட்டிலும் ஆர்வமே வெற்றிக்கு அடிப்படைக் காரணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகிறது. நாள்தோறும் நல்ல நூல்களைப் படித்தல் வேண்டும். நல்லுரைகளையும், அரிய சிந்தனைகளையும் சான்றோர் வாயிலாகக் கேட்டல் வேண்டும்; கேட்டவற்றைத் தெளிந்து உணர்ந்து அந்த நெறியிலே நிற்றல் வேண்டும் என்பதை

"ஓதுமின் கேள்மின் உணர்மின் உணர்ந்தபின்
ஓதி உணர்ந்தவர் ஓங்கி நின்றாரே"

எனத் திருமந்திரம் தெளிவுறுத்துகிறது.

எந்த வாக்கினாலும் எந்த விரிவுரையினாலும் பிற பொருளைப்போல அறிய முடியாத பொருளே இறைவனாகிய பரம்பொருள். கரையற்ற பெரு வெள்ளத்தை நாம் எவ்வாறு கரை காணமுடியும்? அப்படியானால் இறைவனை அனுபவிப்பது எப்படி? சத்திநிபாதம் என்ற அசைவற்ற நிலையிலேதான் கடவுட் பேரின்பத்தை அனுபவிக்க இயலும். திரையற்ற நீர்போல் அசைவற்று நிற்பதே சிந்தையின் உயர்ந்த தியான நிலையாகும். அந்த நிலையிலே இறைவன் களங்கமற்று வெளிப்பட்டு அருள் செய்வான். அதுவே அனுபவ நிலையும் ஆகும். அறியும் முறையில் அறிகின்ற பேரறிவாளருக்கு இறைவன் வெளிப்பட்டு அருளினை வழங்கு வான் என்கிறார் திருமூலர்.

சித்தர்கள் காட்டிய யோகப்பயிற்சியின் மூலம் ஞான வழியிலே சென்றால் இந்த அறிவுக்கறிவாகிய பேரறிவு நிலையைப் பெற்றுக் கொள்ளலாம். இதனையே நாவுக்கரசரும்

"உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே"

என்று பாடுகிறார். இத்தகைய பேரறிவை எப்படிப் பெறுவது என்பதற்குரிய ஞான நெறியையும் இன்னொரு பாடலின் ஊடாகத் திருமூலர் விளக்குகின்றார். மனத்தின் உள்ளே இருக்கின்ற அறிவு என்னும் வாளாயுதத்தை உருவி வெளியில் எடுக்க வேண்டும். மனத்தோடு இணைந்திருக்கின்ற முப்பத்தாறு தத்துவங்களையும் விட்டொழிப்பதோடு மலங்களையும் அறவே களைதல் வேண்டும். தியான நிலையிலே நின்று இறையுணர்வு நிலைபெற்று விட்டால் ஆன்மா இறைவனுடைய தன்மையை எய்திவிடும். அறிவுத் தத்துவத்தின் ஆட்சி யினால் ஞானப் பேரின்ப நிலையை எய்தி விடலாம் என்கிறார் திருமூலர்.

மனத்தில் இருந்த மதிவாள் உருவி
இனத்தினை நீக்கி இரண்டற வீசி
நினைத்த இடத்தே நிலை பெறுமாகில்
அனைத்து யிர்க்கெல்லாம் அதிபதியாமே.

சித்தர்கள் வாழ்ந்த இடங்களில் பல அறிவியல் ஆய்வு கூடங்களாகவே திகழ்ந்தன. பொதிகை மலையிலும் இமயத்திலும் மற்றும் மலைச் சாரல்களிலும் உள்ள குகைகள் எல்லாம் ஆன்ம ஆய்விற்குரிய விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்களாகவே திகழ்ந்து வந்துள்ளன. சித்தர்கள் உடலைப் பற்றிய ஆராய்ச்சியை வைத்திய நோக்கிலும், விஞ்ஞான நோக்கிலும் ஆராய்ந்துள்ளார்கள். தட்ப வெப்ப உடல் நிலையை ஆதாரமாகக் கொண்டு அமைக்கப் பட்டதே சித்தர்களுடைய வைத்திய முறையாகும். இந்த உடலின் இயக்கத்தினை நடாத்தி வருகின்ற ஆற்றலை வாதம், பித்தம், சிலேப்பினம் என மூன்று வகையாக வகுத்தார்கள். இந்த மூன்றில் ஒன்று மிகும்போது நோய் நொடிகள் ஏற்படும் என்று கண்டார்கள். உடலில் உள்ள இந்த மூன்று நாடிகளைப் பற்றிய இரகசியத்தைக் கண்டு உணர்ந்ததோடு இந்த

*வாழ்க்கையின் நோக்கமே பிறருக்கு உதவி செய்வதாக இருக்கவேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்புக்குள்ளே தொண்ணூற்றாறு வேதியல் வினைகள் (இரசாயன மாற்றங்கள்) நடைபெறுகிறது என்பதையும் விளக்கியுள்ளார்கள். இந்தத் தொண்ணூற்றாறு வேதியல் வினைகளைத் தொண்ணூற்றாறு தத்துவங்கள் என்றார்கள் சித்தர்கள். இந்தத் தொண்ணூற் றாறும் மூன்று நிலைகளிலே அமைந்துள்ளன. இவற்றில் ஒன்று குறைந்தால்கூட உடலில் நலிவு அதிகரித்து இடுக்கண் விளைகிறது. இரண்டு, மூன்று என்று இந்தத் தத்துவங்களின் செயல் குறையக் குறைய உடலில் நோய் கூடிவிடுகிறது. ஒரு நோயாளி மரணம் அடையும் போது இந்தத் தொண்ணூற்றாறு தத்துவங்களில் முக்கியமான தத்துவங்கள் பலவும் செயற்படுவதில்லை.

திருமூலர் இந்தத் தொண்ணூற்றாறு தத்துவங்களைப்பற்றி அவருக்கே உரிய கவிப்பாங்கிலே மிக அழகாகப் பாடுகிறார். கீழ்த்தளத்திலே முப்பதுபேர் குடியிருக்கிறார்கள். அடுத்த மாடியில் மேலும் முப்பதுபேர். மூன்றாவது மாடியில் முப்பத்தாறு பேர் இருக்கிறார்கள். தொடர் மாடி வீடுகளிலே இருப்பதுபோல இந்த உடம்பு என்னும் கோயிலிலே, அரண்மனை மாளிகையிலே இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வாடகைக்கு குடியிருக்கிறார்கள். செப்பம் செய்யப்பட்ட மதிலை உடைய பெரிய மாளிகை இது. இந்த மாளிகையில் ஏதா வது விரிசல், ஓட்டை அல்லது பிளவு ஏற்பட்டால் குடியிருப்பவர்கள் உடனே வீட்டைக் காலி செய்து விடுவார்கள் என்கிறார் திருமூலர்.

"முப்பதும் முப்பதும் முப்பத்தறுவரும்
செப்ப மதிளுடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்ப மதிளுடைக் கோயில் சிதைந்தபின்
ஒப்ப அனைவரும் ஓடெ டுத்தார்களே"

நாம் இந்த உடம்பைக் காலத்துக்குக் காலம் செப்பம் செய்து வைத்திராவிட்டால் குடியிருப்பவர்கள் ஓடியே போய்விடுவார்கள். எனவே அவர்கள் ஓடிவிடாமல் தொடர்ந்து வசிக்கக்கூடிய முறையிலே இந்த உடம்பாகிய வீட்டை நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்றே திருமூலரும் கூறுகின்றார்.

பதியானது பசுவாகிய ஆன்மாவை அணுகும்போது பாசத்தின் ஆற்றல் நில்லாது போய்விடுகிறது. தன்னை அறிந்தவன் முப்பொருளையும் அறிந்து கொள்வான் என்ற இரகசியத்தை திருமந்திரம் எடுத்து விளக்குகிறது. தன்னை உணர்வதற்குரிய வழியையும் கூறுகிறது. ஆன்மாக்களின் பக்குவ நிலைக்குத் தக்கவாறு இவர்களைச் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என மூன்று வகையாகச் சைவசித்தாந்த நூல்கள் வகைப்படுத்திக் கூறுகின்றன. மும்மலங்களால் பீடிக்கப்பட்டவர்கள் சகலர். ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங்களால் பீடிக்கப்பட்டவர்கள் பிரளயாகலர், ஆணவ மலம் மட்டும் உடையவர்கள் விஞ்ஞானகலர் என மெய்கண்ட சாஸ்திர நூல்கள் வகைப்படுத்திக் கூறியுள்ளன. முப்பொருள் உண்மையை உணர்ந்து அறிவது சித்தர்களுடைய ஞானப்பயிற்சியிலே ஒரு முக்கியமான கல்வி ஆகும். முப்பொருளை உணர்ந்து, அதனை அறிந்து, தலைவனை அறிகின்ற மாபெரும் கல்விக்கு ஒரு மாணவனைப் பயிற்றுகின்ற ஞான யோக முறையைப் பின்வரும் திருமந்திரம் விளக்குகிறது.

*ஒருவன் என்ன செயல் செய்கிறானோ, அதுவாகவே அவன் ஆகிவிடுகிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தன்னைப் பரனைச் சதாசிவம் என்கிற
மன்னைப் பதிபசு பாசத்தை மாசற
முன்னைப் பழமல மூலத்தை விட்டு
உன்னத் தகுஞ் சுத்த சைவர் உபாயமே"

இந்தப் பாடலில் தன்னை என்று குறிப்பது சகலரையும், பரனை என்று குறிப்பது பிரளயாகலரையும், சதாசிவம் என்று குறிப்பது விஞ்ஞானகலரையும் என்று பகுத்துக் கூறுகின்றார் கம்பளிச் சித்தர்.

முப்பொருள் உண்மையை உணர்ந்து அறிவது சித்தர்களுடைய ஞானப் பயிற்சியிலே முக்கியமான ஒன்றாகும். முப்பொருளை அறிந்தவன் தன்னை அறிவான். தன்னை அறிந்தவனால்த்தான் தலைவனாகிய இறைவனை அறியமுடியும். ஆன்மாக்கள் தன்னை உணர்ந்து அறியும் அறிவைப் பெற்றுவிட்டால் பிறந்து பிறந்து இறக்கும் துன்பத்தை அடைய வேண்டியதில்லை. இல்லாவிட்டால் "பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே" என்ற அப்பர் வாக்கிற்கு அமையப் பிறவிநோய் தொடர்ந்துகொண்டே இருக்கும். தன்னைத் தான் அறியும் அறிவை ஆன்மா பெற்றுவிட்டால் அச்சீவன் தன்னை இறைவனுக்கே அர்ப் பணித்துக் கொள்ளும். இவ்வாறு ஆத்ம நிவேதனம் செய்பவர்களின் உள்ளத்தின் உள்ளே சிவன் எழுந்தருளுவான். புலன் இச்சைகள் அடங்க மனம் சிவசிந்தனையில் பொருந்தி எல்லாம் எமை ஆளும் ஈசன் செயல் என்றிருக்கும். கருவி கரணங்களின்றித் தானே எல்லாவற்றையும் அறியும் ஒளி வடிவினை ஞான சாதனையால் ஆன்மா பெற்றுக் கொள்ளும். தன்னை அறிந்து எல்லாம் சிவன் செயல் என்று இருப்பவர்களை வினைகள் எதுவுமே தாக்காது. இந்நிலையினைப் பெற்றவர்கள் உலகோர் வணங்கும்படியான சிவ சொரூபமாகத் திகழ்வார்கள்.

"தன்னையறியத் தனக்கொரு கேடில்லை
தன்னையறியாமல் தானே கெடுகின்றான்
தன்னையறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தான் இருந்தானே"

ஞான நெறியில் நிற்பவர்கள் எங்கும் எதிலும் சிவத்தையே காண்பார்கள். அவர்களின் அகத்திலும் புறத்திலும் சிவம் பிரகாசிக்கும். அன்பு வயப்பட்டு நிற்கும். இவர்கள் அழுவர். கை தொழுவர். நிலத்தில் வீழ்வர், பின் எழுவர். பாலர்கள் பைத்தியம் பிடித்தவர்கள் போலத் திரிவர். இத்தகைய ஞானிகளின் நிலையைப் பின்வரும் திருவாதவூரடிகள் புராணப் பாடல் தெளிவாக விளக்குகிறது.

"அன்புடன் நோக்கி நிற்பர் அழுவர் கைதொழுவர் வீழ்வர்
இன்புற வெழுவர் பின்பால் ஏகுவர் இறங்கி மீள்வர்
நண்பகல் கங்குல் காணார் ஞான நல்வடிவே கண்டு
கொன்புனை பித்தர் பாலர் பிசாசர் தங்கொள் கையானார்"

தவம் சிறக்க வேண்டுமானால் தலைவனாகிய இறைவனை மறவாமல் நினைத்தல் வேண்டும். மனம் ஒருமைப்பட்டு உறுதியுடன் முயன்று மேற்கொள்வதே தவம் ஆகும். மாம்பழம் முற்றிப் பழுப்பதற்கு முன்பு பறவைகள், அணில் கடிக்க அறுந்து விழுவதைப் போன்று இறைவனை நினைந்து செய்கின்ற தியானம் தடைப்பட்டால் புறக் கிரியைகளால்

*தன்னைத்தானே அடக்கிக் கட்டுப்படுத்தத் தெரிந்தவனே பெறுதற்கரிய தலைமையைப் பெற முடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைச் சீர்செய்ய முடியாது. புறக் கிரியைகளைத் திருமூலர் நரி எனக் குறிப்பிடுகின்றார். சாதகர்க்கு மன ஒருமைப்பாடு அமையாதபோது உபதேசம் செய்த ஞான குருவால் என்ன செய்யமுடியும்? தவம் சிறப்பதற்குக் குருவின் வழிகாட்டலோடு மன ஒருமைப்பாடும் அவசியம் எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது.

"தோட்டத்தில் மாம்பழந் தோண்டி விழுந்தக்கால்
நாட்டின் புறத்தில் நரியழைத் தென் செயும்
மூட்டிக் கொடுத்து முதல்வனை முன்னிட்டுக்
காட்டிக் கொடுத்தவர் கைவிட்டவாறே"

(தொடரும்...

## மமதை அழிந்தது

மகான் கபீர்தாசர் கங்கை நதியில் நீராடிக் கொண்டிருந்த சமயம், நான்கு பேர் நீராட வந்தனர். ஆனால் அவர்களிடம் செம்பு இல்லாததைக் கண்ட கபீர்தாசர், தன் செம்பை நன்றாகக் கழுவிக் கொடுத்தார். உயர்ந்த ஜாதி என்ற எண்ணம் கொண்ட அவர்கள், அவருடைய செம்பைப் பயன்படுத்த மறுத்தனர். "ஐயா! கங்கைக் கரை மணலினாலேயே இந்தச் செம்பைத் துலக்கினேன். பிறகு கங்கையின் புனித நீரினால் கழுவினேன். இது புனிதமில்லை என்று எப்படி இதை வாங்க மறுக்கிறீர்கள்?" என்று கபீர்தாசர் கேட்டார். அதற்கு அந்த நால்வரும், "செம்பைக் கழுவிய பிறகு அதை நீ தொட்டுவிட்டாயே! நீ தொட்டதை நாங்கள் எப்படித் தொடுவோம்?" என்றார்கள். உடனே கபீர்தாசர், "அப்படியா! உங்கள் வழிக்கே நானும் வருகிறேன். இப்போது கங்கை நீரும் புனிதத்தை இழந்து விட்டது. ஏனென்றால் அதில் மூழ்கி நான் குளித்துவிட்டேனே. நீங்கள் நீராட வேண்டுமென்றால் புதிதாக இன்னொரு கங்கையைத்தான் கொண்டுவரவேண்டும்!" என்றார். இதைக் கேட்டதும் உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்ற மமதை கொண்டிருந்த நால்வரும் வெட்கித் தலைகுனிந்தனர்.

-பக்தி-




*பகையைத் தீர்ப்பது நட்பு ஒன்றுதான். அமைதிக்கான உறுதியும் அதுவே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் வாசகர்போட்டி 2016

## வினாக்கள்

01. "வடிவந்தானும் வாலிபம் மகளும்" என்று தொடங்கும் பாடலைப் பாடியவர் யார்?
02. விநாயகருக்குப் பிரியமான கனிகள் எவை?
03. மனிதனின் வளர்ச்சிக்கு எது தேவை?
04. மனிதனது நற்குணங்களில் சிறந்து விளங்குவது எது?
05. நக்கீரரால் போற்றப்பட்ட "ஆறெழுத்தடங்கிய அருமறை" என்பது எதனைக் குறிக்கின்றது?
06. பற்றின்றிச் செத்தாரைப்போல் திரிபவர்கள் யார்?
07. நாம்அறிந்த பொருள்களிலே மிகவும் பெரியது எது?
08. விளாங்கனி என உருவகப்படுத்தும் தன்மாத்திரைகள் யாது?
09. 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்த சங்கீத மும்மணிகளில் ஒருவர்?
10. ஏழை அநாதிகள் இல்லை என்றால் அவர்க்கு அன்னம் கொடுக்க வேண்டும் என்ற பாடலைப் பாடியவர் யார்?
11. உண்மை நிலை என்பதன் பொருள் யாது?
12. நெய்யறி என்ற பெயர் எதனைக் குறிக்கின்றது?
13. பருத்தித்துறையில் அமைந்த பண்பாட்டு குறிக்காட்டி எது?
14. ஆன்மாவிடம் மறைந்துள்ள துர்க்குணங்கள் எவை?
15. புத்தேளிர் கோமான் எனும் பெயர் யாரைக் குறிக்கும்?
16. கடோப நிஷதம் எதனைக் கூறுகிறது?
17. உத்தமமான மனிதனிடம் குடிகொண்ட இயல்புகள் எவை?
18. கண்ணனது பிள்ளைப் பருவத்தை தமிழில் பாடலாக வடித்த பெரியவர் யார்?
19. நெருப்பில் விழும் உயிரினம் எது?
20. தாளச் செல்வர் எனும் பெயருக்குரியவர் யார்?
21. உணர்வின் வெளிப்பாடு என்று எதனைக் கூறலாம்?
22. தமிழுக்கு முதல் இலக்கணம் வைத்தவர் யார்?
23. கிரியா குரு என்று யாரைச் சொல்லலாம்?
24. மனிதனைப் பக்குவப்படுத்தும் கருவி யாது?
25. அக வாழ்வின் ஒற்றுமைக்கு உதாரணமாக எப்பறவையைக் கூறலாம்?

ஆரோக்கியம் உள்ளவனுக்கு நம்பிக்கை இருக்கும். நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாம் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போட்டியில் எவரும் பங்குபற்றலாம். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட விடைகளையும் எழுதி அனுப்பலாம். ஆனால் அவை தனித்தனியாக அனுப்பப்படவேண்டும்.

2016ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் ஐப்பசிமாதம் வரை வெளிவந்த ஞானச்சுடர் மலர்களிலிருந்தே வினாக்கள் எடுக்கப்பட்டுள்ளதால் விடைகளும் மலருக்குள் இருந்தே எடுக்கப்படவேண்டும்.

விடைகளை அச்சிடுவதோ, பிரதி செய்வதோ, போட்டோ பிரதி எடுப்பதோ அனுமதிக் கப்படமாட்டாது.

விண்ணப்பங்களை வாசகர் போட்டிக்குழு, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை, செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு என்ற முகவரிக்கு 20.01.2017 தைமாதத்திற்கு முன்பு தபால்மூலமோ, நேரிலோ கையளிக்கவும்.

போட்டியின் பெறுபேறுகள் தைமாத ஞானச்சுடர் மலரில் வெளியிடப்பட்டு அதன் பரிசில்கள் மாசி மாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது வழங்கப்படும்.

## ஞானச்சுடர்
## சந்தாதாரரின் கவனத்திற்கு...

வணக்கம்!

தாங்கள் காட்டிவரும் பேராதரவுக்கு மனமார்ந்த நன்றிகள். 2017ஆம் ஆண்டுக்கான உங்களுடைய சந்தாப் பணத்தினைச் செலுத்தி தங்கள் பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். புதிய ஆண்டில் பிரதிகளைத் தவறாது பெற்றுக் கொள்வதற்கு வசதியாக தங்கள் சரியான முகவரியைத் தபால் மூலமோ - தொலைபேசி மூலமோ தெரியப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

-சைவ கலை பண்பாட்டுப் பேரவை-

*நம்பிக்கையே மனிதனுக்கு நேரும் எல்லா நோய்களுக்கும் ஒரே மருந்து.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# திருவாய்மூர்

– வல்வையூர் அப்பாண்ணா –

முசுகுந்த சக்கரவர்த்தி திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு நல்லாட்சி புரிந்து வந்த தலைசிறந்த சிவபக்தன். வானுலகில் "வலன்" எனும் அசுரன் தேவர்களைக் கொடுமைப்படுத்தினான். தேவர்கள் இந்திரனிடம் முறையிட்டனர். இந்திரன் சிவபெருமானை வழிபட, திருவாரூரை தலைநகராகக் கொண்டு ஆட்சி புரியும் முசுகுந்தனின் உதவியைப் பெற்று போரில் வெற்றியடைய வழி செய்தார். இந்திரனும் வாலாசுரனை வென்று- போரில் வெற்றியடைய உதவிபுரிந்த முசுகுந்தனுக்கு விரும்பிய பரிசினைக் கொடுக்க மனம் ஒப்பினான். முசுகுந்தனும் சிவபெருமான்மீது கொண்ட பற்றினால் "நீ வழிபடும் தியாகேசரைத் தருக" எனக் கூறினான். இதனைச் சற்றும் எதிர்பாராத இந்திரன், தான் வழிபடும் தியாகேசரைப் போன்று மேலும் ஆறு திருவுருவங்களை வடிவமைத்து முசுகுந்தனிடம் காட்ட, சிவபெருமான் முசுகுந்தன் மனதிற் தோன்றி இந்திரன் வழிபட்ட தியாகேசரை அடையாளம் காட்டினார். முசுகுந்தனும் அதனையே குறிப்பாகக் காட்ட, இந்திரன் செய்வதறியாது ஏழு தியாகேசரையும் முசுகுந்தனிடமே அளித்து, தென்னாட்டில் ஏழு இடங்களில் பிரதிஷ்டை செய்து பூஜிக்க வேண்டினான். இந்திரன் வேண்டுகோளின்படி ஏழு தியாகேசரையும் திருவாய்மூர், திருநள்ளாறு, திருக்குவளை, திருவாரூர், திருக்காறாயில், வேதாரண்யம், நாகபட்டினம் முதலான ஏழு சிவஸ்தலங்களில் பிரதிஷ்டை செய்து வழிபாடியற்றி வந்தான். இவ் ஏழு ஸ்தலங்களும் **"சப்த விடங்கத் தலங்கள்"** என்றழைக்கப்பட்டன.

"சீரார் திருவாரூர் தென்னாகை
நள்ளாறு காரார் மறைக்காடு
காறாயில் - பேரான ஒத்த **திருவாய்மூர்**
உகந்த திருக்கோளலி சப்த விடங்கத்தலம்"

எனும் வாசகத்தாலும் இதனை அறிக. முசுகுந்தன் பிரதிஷ்டை செய்த சப்த விடங்கத் தலங்களுள் ஒன்றான "திருவாய்மூர்" மிகச் சாதாரணமான ஒரு சிறிய கோயிலாகத் தென்பட்ட போதிலும் கீர்த்தி மிகுந்த இடமாக பக்தர்களைக் கவர்ந்திழுக்கிறது.

நாகபட்டினம் - திருத்துறைப்பூண்டி பேருந்து சாலையில் "எட்டுக்குடி"க்குப் பிரியும் சாலையில் பயணிக்க இத் திருத்தலத்தை அடையலாம். நீர்வளம் மிகுந்த நெற்பயிர் விளையும் சோலைகளுக்கு நடுவே இத்திருத்தலம் கிழக்கு நோக்கிய மூன்று நிலைக் கோபுரம் கொண்டு அமைந்துள்ளது. இராஜகோபுரம் கடந்து உள்ளே சென்றால் நால்வர்- உற்சவமூர்த்தி கோயிலும், மடைப்பள்ளியையும், பைரவர் சந்நிதிகளையும் காணலாம். பைரவர் மூர்த்தம் என்பது ஒன்றல்ல. ஆனந்த பைரவர், அகோர பைரவர், உத்தாண்ட

நம்பிக்கை என்பது பயத்தைப் போக்கும் ஒரு சாதனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைரவர், பால பைரவர், பாதாள பைரவர், ஈஸ்வர பைரவர், காள பைரவர், ஈசான பைரவர் என அஷ்ட பைரவர்கள் அமர்ந்துள்ள சிறப்புமிகு ஸ்தலம் திருவாய்மூர் திருக்கோவிலாகும். அஷ்ட பைரவர்களின் அருட்பிரவாகத்தினால் இது காசிக்கு இணையான ஸ்தலமாகக் கொள்ளப்படுகிறது.

உட்பிரகார வாசலின் மேலே கணபதி, சிவன்- அம்பாள், முருகன் சுதைச் சிற்பங்கள் காணப்படுகின்றன. நடு மண்டபத்தின் முன்புறமாக நடராஜர் சந்நிதி காணப்படுகிறது. இரு மருங்கும் துவார பாலகர்கள் கொண்ட கருவறையில் மூலவர் "**வாய்மூர்நாதர்**" லிங்க வடிவில் அளவான அலங்காரத்துடன் அமர்ந்திருந்து அருள்பாலிக்கின்றார். மூலவருக்கு இடது புறமாக அம்பாள் சந்நிதி உள்ளது. நின்ற திருக்கோலத்தில் நிறைந்த அலங்காரங்கொண்டு அம்பிகை "**பாலின் நன்மொழியாள்**" வேண்டுவார் வேண்டுவன ஈந்து அருள்மழை பொழிகிறார். மூலவர் சந்நிதிக்குத் தென்புறம் தியாகராஜர் சந்நிதியும், வடபுறமாக திருமறைக்காடர் (வேதாரண்யேஸ்வரர்) சந்நிதியும் உள்ளது.

திருக்கோயிலின் முன்புறமாக உள்ள திருக்குளத்தில் நிறைய வெண்தாமரை மலர்கள் மலர்ந்து கண்ணுக்கு விருந்தளிக்கின்றன. அந்தக் குளக்கரையில், "திருக்குள விநாயகரும்", அருகிருக்கும் அரசமரத்தின் அடியிலே "அரசமரத்தடி விநாயகரும்" அமர்ந்துள்ளனர்.

ஊருக்கு மேற்காக உள்ள தீர்த்தக்குளம் "சூரிய தீர்த்தம்" எனப்படுகிறது. சூரிய பகவான் இத்தீர்த்தத்தில் நீராடி வாய்மூர் நாதரை வழிபட்ட காரணத்தால் இதற்குச் "சூரிய தீர்த்தம்" என்ற பெயர் நிலைத்ததுடன், இதுவே ஸ்தல தீர்த்தமுமாகியது என்று விபரம் தெரிந்தவர்கள் கூறக்கேட்டோம். ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் 12, 13ஆம் நாட்களில் சூரிய பகவான் தன் பொற்கதிர்களை உள்ளே பரப்பி பெருமானையும், அம்பிகையையும் வழிபடும் அருங்காட்சியைக் காண பெருமளவு மக்கள் கூடுவதாகச் சொல்கிறார்கள். ஆனால் எனக்கு அந்தக் காட்சியினைக் காணும் வாய்ப்புக் கிட்டவில்லை.

முயலகனின் தலைமீது நடராஜர் திருவடி பதிந்துள்ள சிறப்பு, இடபத்தின் மீதமர்ந்துள்ள தெட்சணாமூர்த்தி, பேய்க்கோலம் கொண்டு கையில் தாளத்துடன் இருக்கும் காரைக்கால் அம்மையார், ஒரே வரிசையில் அமர்ந்துள்ள நவக்கிரகங்கள் ஆகியவை பார்த்துத் தரிசிக்கவேண்டிய சிறப்பு மூர்த்தங்களாகும். வடக்குப் பார்த்தபடி உள்ள துர்க்கை அம்பாளுக்கு இராகுகால வேளையில் நடைபெறும் விசேட பூசை இங்கு மிகப் பிரசித்தமானது.

அப்பர், சம்பந்தர் இருவரதும் தேவாரப் பாடல்கள் பெற்ற திருத்தலம் திருவாய்மூர். திருநாவுக்கரசு நாயனார் திருமறைக்காட்டுத் (வேதாரண்யம்) திருமடத்தில் திருஞான சம்பந்தரோடு தங்கி இருந்தார். வேதாரண்யக் கதவுகள் திறந்து - மூடிய அந்தத் திருநாளில் அப்பர் சுவாமிகளின் பாடலுக்கு மறைக் கதவினை அரிதில் திறந்தும், ஞானசம்பந்தரின் பாடலுக்கு எளிதில் கதவுகளை அடைத்தமை பற்றியும் நினைவுடையராக உறக்கமின்றித் துயின்றார். அச்சமயம் வேதவனப் பெருமான் கனவிடைத் தோன்றி எதிர் நின்றார். "திருவாய்மூர்ச் செல்வர் நாம் - எம்முடன் வருக" என அழைத்தார். அவ்வருட் செயலை உணர்ந்து விழித்தெழுந்த நாவரசர், "எங்கே யென்னை யிருந்திடந் தேடி..." எனும் பதிகம்

**ஒவ்வொரு தடவையும் விழுவது மீண்டும் எழுவதற்கே என்று நம்புங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடிக்கொண்டே அவரைத் தொடர்ந்து சென்றார். அப்பரைத் தேடிக்கொண்டே திருஞான சம்பந்தரும் தொடர்ந்து பின் சென்றார். அங்ஙனம் சம்பந்தர் போந்தமையை,

“திறக்கப் பாடிய என்னினுஞ் செந்தமிழ்
உறைப்புப் பாடி யடைப்பித்தா ருந்நின்றார்
...............................
...............................”

எனத் தமது பதிகத்தின் எட்டாவது பாடலில் போற்றிப் பாடினார் அப்பர்.

முன்னே வழிகாட்டிச் சென்ற இறைவன் கோயிலின் உள்ளே புக, அப்பரும் உட்புகுந்தார். இறைவன் விண்ணிடைத் தோன்றி ஆடற்காட்சி நல்கினார். இறைவன் திருவருளை வியந்து ஆடற்காட்சி கண்ட அருட்திறத்தையும் சேர்த்து “பாட அடியார் பரவக் கண்டேன்” எனும் திருத்தாண்டகத் திருப்பதிகம் கொண்டு போற்றி அருளினார். திருஞான சம்பந்தரும்- அப்பருடன் அம்மையப்பன் ஆடிய காட்சி கண்டு வியந்து- பணிந்து- மகிழ்ந்து நின்றனர். மன அமைதியின்றித் தவித்த அப்பர் சுவாமிகளை இறைவன் தானே எழுப்பி- தன்னைப் பின்தொடர அழைத்துவந்து- இரு நாயன்மார்களுக்கும் ஒரே நேரத்தில் அம்மையப்பனாகக் காட்சி கொடுத்த ஒரே திருத்தலம் “திருவாய்மூர்” ஆகும். இருவருக்கும் ஆடற்காட்சியினை விரல்காட்டிக் காண்பித்த “விரல்காட்டி விநாயகர்” திருவாய்மூர் திருத்தலத்தில் அமர்ந்திருந்து அருள்பாலிக்கிறார்.

இத்திருக்கோயில் ஆதியில் பல்லவ, சோழ மன்னர்களால் பராபரிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் காலத்துக்கும் முற்பட்ட பழமைச் சிறப்பு வாய்ந்த திருக்கோயிலாகும்.

“பாட அடியார் பரவக் கண்டேன்
பத்தர்கணங்கண்டேன் மொய்த்த பூதம்
ஆடல் முழவம் அதிரக் கண்டேன்
அங்கை அனல்கண்டேன் கங்கையாளைக்
காடல் அரவார் சடையிற் கண்டேன்
கொக்கின் இதழ் கண்டேன் கொன்றை கண்டேன்
வாடற்றலையொன்று கையிற் கண்டேன்
வாய்மூர் அடிகளை நான் கண்டவாறே”

-அப்பர்-

## பெருந்தன்மை

ஒரு துறவி நகரத்திற்குப் போய்க் கொண்டிருந்தார். வழியில் ஒருவன், துறவியைக் கண்டபடி திட்டிக்கொண்டே பின் தொடர்ந்தான். துறவி மௌனமாகக் கேட்டுக்கொண்டே வந்தார். நகரம் நெருங்கியதும் துறவி அப்படியே நின்றுவிட்டார். திட்டியவன் “ஏன் நின்றுவிட்டாய்?” என்றான். “உனது வசை மொழிகள் எனக்கு இன்பமாய் இருக்கின்றன. ஆனால் இந்த நகரத்தில் உள்ள என் பக்தர்கள் நீ என்னைத் திட்டுவதைக் கண்டால், உன்னை அடித்துத் துன்புறுத்துவார்கள். அதனால் நீ உன் இஷ்டப்படி திட்டிவிட்டுப் போ. இங்கேயே நின்று கேட்டுவிட்டுப் பிறகு நகரத்திற்குச் செல்கிறேன்” என்றார் துறவி. திட்டியவன் தன் தவறை உணர்ந்து, துறவியின் பெருந்தன்மையை எண்ணி அவர் காலில் விழுந்து வணங்கி, தன் தவறுக்கு மன்னிப்புக் கேட்டான். -பக்தி-

பணத்தின்மீது நம்பிக்கை வைக்காதே. நம்பிக்கைமீது உன் பணத்தை வை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழிமாத வாராந்த நிகழ்வுகள்

**02.12.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "பக்தி"

வழங்குபவர் :- திரு நி. பாபுதரன் அவர்கள்

[ஆசிரியர்]

---

**09.12.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "புல்லாங்குழல் இசைக்கச்சேரி"

வழங்குபவர் :- திரு குணராஜன் நக்கீரன் அவர்கள்

[கலாவித்தகர்]

---

**16.12.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

**23.12.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "முருகநாம பஜனை"

வழங்குபவர்கள் :- முருகன் அடியார்கள்

---

**30.12.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## மார்கழிமாத ஞானச்சுடர் வெளியீடு

வெளியீட்டுரை :- திரு சோ. பரமநாதன் அவர்கள்

[கிராம சேவையாளர், குப்பிளான்]

மதிப்பீட்டுரை :- திரு ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள்

[இளை. பிரதிக் கல்விப் பணிப்பாளர்]

**228ஆவது மலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. *QD/160/NEWS/2016*

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org